
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

கார்த்திகை



நவம்ப
1978

சிறப்
மலர்

விலை
1-50

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச் சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம்

வருட சந்தா (சிறப்பு மலர் உட்பட)	**ரூ. 8**
ஆயுள் சந்தா	**ரூ. 100**
தனிப் பிரதி	**85 காசு**

ஆயுள் சந்தாவை மொத்தமாகவோ, பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ.10-ஆகவோ செலுத்தலாம்.

ஆயுள் சந்தாதாரர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வருட சந்தாதாரர்கள், தாங்கள் செலுத்தியுள்ள வருட சந்தாவைக் கழித்து மீதம் உள்ள தொகையைச் செலுத்தி, ஆயுள் சந்தாதாரராகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு வேண்டுகோள்

1. பேரன்பிற்குரிய வாசக அன்பர்கள் தங்களின் சந்தாவைச் செலுத்துவதுடன், மேலும் தமது நண்பர்கள் சிலரையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தருவது ஒரு நல்ல தொண்டாகும். இதன் மூலம் நமக்கும் மற்றவர்களுக்கும் நாம் நன்மையைச் செய்துகொள்கிறோம்.

2. சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதில் எங்களால் இயன்ற முயற்சி செய்து வருகிறோம். அன்பர்கள் தங்களின் பங்காக இந்தத் தெய்விகக் கைங்கரியத்தில் கல்வி ஸ்தாபனங்கள், சத்சங்கங்கள் முதலியவைகளுக்குப் பத்திரிகை போய்க்கொண்டிருக்கும்படி செய்யலாம். **இது ஒவ்வொரு மாதமும் தாங்கள் அளிக்கும் மேலான நன்கொடையாகவும், தங்களை ஞாபகப்படுத்தும் சிறந்த வெகுமதியாகவும் அமையும்.**

3. பெரியோர்கள் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு ஏதோ சம்பந்தமில்லாதது என்று புறக்கணித்துவிடாமல், மேலும் சந்தாதாரர்களைச் சேர்த்துத் தரும் விஷயத்தில் தங்களால் இயன்ற ஒரு சிறிதளவிற்காகிலும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம். **குறைந்தது மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்துத் தருவது மிகப் பெரிய ஒரு உபகாரமாக இருக்கும்.** இதன் மூலம் இன்றைய சமுதாயத்தின் சூழ்நிலையில் நல்ல கருத்துகள் வளர அரும்பெரும் தொண்டு செய்தவர்களாகிறீர்கள்.

4. புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பி வைக்கும்போது, புதிய சந்தா என்று குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பழைய சந்தாதாரர்கள், தமது கடிதப் போக்குவரத்துகள் எல்லாவற்றிலும் சந்தா எண்ணையும் முழு விலாசத்தையும் அவசியம் குறிப்பிட்டு எழுத வேண்டுகிறோம்.

விவரங்களுக்கு:

தொலைபேசி : 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மயிலாப்பூர் : : சென்னை-600 004

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—58	நவம்பர் 1978	இதழ்—11

பொருளடக்கம்

சந்தாதாரர்கள் கவனிக்க

சந்தா எண் 12,000 முதல் 12,800 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை நவம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. மேற்கொண்டு பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப அடுத்த ஆண்டுச் சந்தாத் தொகை ரூ. 8ஐ நவம்பர் மாதம் 25ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சந்தா எண் 1 முதல் 1,999 வரையிலும் சந்தா எண் 1A முதல் 1,999A வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை டிசம்பர் மாதத்துடன் முடிவடைகிறது.

நிர்வாகி

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்



ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை
—திருமூலர்

தொகுதி 58 | காளயுக்தி ஸ்ரீ கார்த்திகை மீ | இதழ் 11



या शक्तिः परदेवता भगवती वाणी रमा पार्वती
साध्वी कान्तिमती सदा शुभकरी श्रीराजराजेश्वरी ।
आर्यावर्तसुपालनैकहृदया श्रीराज्यलक्ष्मी शुभा
तां वन्दे भवभीतिभञ्जनकरीं कन्याम्बिकां श्रीकरीम् ॥

—श्रीमध्वाचार्याः

யா சக்தி: பரதேவதா பகவதீ வாணீ ரமா பார்வதீ
ஸாத்வீ காந்திமதீ ஸதா சுபகரீ ஸ்ரீராஜராஜேச்வரீ ।
ஆர்யாவர்த்தஸுபாலநைகஹ்ருதயா ஸ்ரீராஜ்யலக்ஷ்மீ சுபா
தாம் வந்தே பவபீதிபஞ்ஜநகரீம் கந்யாம்பிகாம் ஸ்ரீகரீம் ॥

—ஸ்ரீமத்வாசாரியார்

எந்தப் பராசக்தி பகவதி என்றும் சரஸ்வதி என்றும் லட்சுமி என்றும் பார்வதி என்றும் போற்றப் பெறுகிறாளோ, எவள் பரமசிவனின் பதிவிரதையோ, எவள் ஒளி மிகுந்தவளோ, எப்போதும் மங்களத்தை அருள்பவளோ, ராஜாதிராஜர்களான பிரம்மா விஷ்ணு ருத்திரன் முதலியோருக்கும் ஈச்வரியோ, பாரத நாட்டை நன்கு போற்றி ரட்சிக்கும் இதயம் உடையவளோ, மங்களமான ராஜ்யலட்சுமியோ, அந்தத் தேவியை, சம்சார பயத்தைப் போக்குகிறவளை, உயர்வற உயர்நலத்தை அளிப்பவளை, கன்னியாகுமரி பரமேச்வரியை நான் வணங்குகிறேன்.

உருவும்நீ அருவும்நீ உலகத் தனைத்தும்
உயர்ந்திடச் செய்பவளும்நீ
திருவும்நீ குருவும்நீ தோன்றாத் துணையும்
தெளிவும்நீ பரிவும் நீயே.
மருவும்நீ மலரும்நீ மதியும்நீ ஒளியும்நீ,
மாசறு செல்வி நீயே.
கருவும்நீ விதியும்நீ கதியும்நீ ஏழையென்
கவலை தீர்த்தரு ளுவாயே.

—கன்யாகுமரி ஸ்ரீபகவதி அம்மன் அஷ்டகம்



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

அக்டோபர் 16, 1882

இன்று திங்கட்கிழமை. வரும் வியாழக்கிழமை சப்தமியன்று துர்க்காபூஜை ஆரம்பமாகும். நரேந்திரர் இன்று தட்சிணேசுவரக் காளிகோயிலுக்கு வந்திருக்கிறார். அது காரணமாக, குருதேவரின் மனம் பேரானந்தத்தில் திளைத்திருந்தது. மேலும் சில நெருங்கிய பக்தர்களும் அங்கு உள்ளனர்.

குருதேவருடன் ராக்கால், ராம்லால், ஹாஸ்ரா ஆகியோர் இருக்கின்றனர். நரேந்திரருடன் பிரம்ம சமாஜ அங்கத்தினரான இரண்டோர் இளைஞர்களும் வந்திருக்கிறார்கள். ம-வும் இன்று வந்திருக்கிறார்.

நரேந்திரர் குளித்துவிட்டு ஸ்ரீராமகிருஷ்ணருடன் மதிய உணவு உட்கொண்டார். உணவுக்குப் பிறகு குருதேவர் தமது அறையிலேயே தரையில் நரேந்திரருக்குப் படுக்கை விரித்துக் கொடுக்கச் சொன்னார். நரேந்திரர் முதலிய பக்தர்கள் ஓய்வெடுத்துக் கொண்டனர். குறிப்பாக நரேந்திரர் ஓய்வெடுத்துக் கொண்டார். பாயின் மீது கம்பளியும் தலையணையும் வைக்கப்பட்டிருந்தன. குருதேவரும் ஒரு சிறு குழந்தையைப் போல நரேந்திரரின் அருகில் படுக்கையின் மீது உட்கார்ந்துகொண்டார். பக்தர்களுடன், அதிலும் குறிப்பாக நரேந்திரருடன், நேருக்கு நேராக நரேந்திரரைப் பார்த்தபடியே சிரித்த முகத்துடன் குருதேவர் மகிழ்ச்சி பொங்கப் பேசினார். தமது நிலையைப் பற்றியும் தமது வாழ்க்கையைப் பற்றியும் ஸ்ரீராமகிருஷ்ணர் கதை சொல்லுவதைப் போலச் சொல்ல ஆரம்பித்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: (நரேந்திரர் முதலிய பக்தர்களிடம்) நான் சமாதியனுபவம் பெற்ற பிறகு, ஈசுவரனைப் பற்றிய பேச்சை மட்டுமே கேட்பதற்கு என் மனம் ஏங்கியது. எங்கே பாகவதம் கேட்கலாம், எங்கே அத்தியாத்தும ராமாயணம் கேட்கலாம், எங்கே மகாபாரதம் கேட்கலாம் என்று நான் தேடியலைந்தேன். கிருஷ்ணகிஷோரிடம், அவர் அத்தியாத்தும ராமாயணம் வாசிப்பதைக் கேட்பதற்கு நான் செல்வதுண்டு.

கிருஷ்ணகிஷோருக்குத்தான் எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது! ஒரு நாள் பிருந்தாவனத்திலே அவருக்குத் தாகம் ஏற்பட்டது. அவர் ஒரு கிணற்றுக்குச் சென்றார். கிணற்றின் அருகில் ஒருவன் நின்றுகொண்டிருந்தான். அவனிடம் அவர் நீர் வேண்டியபோது அந்த மனிதன், "நான் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவன், நீங்களோ பிராம்மணர். நான் எப்படி உங்களுக்காகத் தண்ணீர் எடுத்துக் கொடுக்க முடியும்?" என்று கேட்டான். கிருஷ்ணகிஷோர் அவனைப் பார்த்து, "நீ 'சிவா' என்று சொல். 'சிவ சிவா' என்று பகவானின் நாமத்தைச் சொல்லுவதனால் நீ பரிசுத்தன் ஆகிவிடுவாய்" என்று சொன்னார். அவன் 'சிவ சிவா' என்று ஓதி அவருக்குத் தண்ணீர் எடுத்துக் கொடுத்தான். அவ்வளவு வைதிக ஆசாரம் நிறைந்த கிருஷ்ணகிஷோரும் அந்தத் தண்ணீரைக் குடித்தார்! அவருக்குத்தான் பகவானின் திருநாமத்தின் மீது எவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை!

ஒரு சமயம் கங்கைக் கரையில் ஏடாதா என்னும் படித்துறையில் சன்னியாசி ஒருவர் வந்து தங்கியிருந்தார். அவரை ஒரு நாள் சென்று தரிசித்து வரலாம் என்று நாங்கள் நினைத்திருந்தோம். நான் ஹலதாரியிடம், "கிருஷ்ணகிஷோரும் நானும் சாதுவைப் பார்ப்பதற்குப் போகிறோம். நீயும் வருகிறாயா?" என்று கேட்டேன். அதற்கு ஹலதாரி, "ஒரு களிமண் கூட்டை (அந்தச் சாதுவின் மனித உடலை)ப் பார்க்கப் போவதனால் என்ன பிரயோஜனம்?" என்று பதில் அளித்தார். கீதை, வேதாந்தம் எல்லாம் படித்தவர் அல்லவா ஹலதாரி!

அதனால்தான் அவர் சாதுவை ஒரு மண்கூடு என்று குறிப்பிட்டார். அவர் சொன்னதை நான் கிருஷ்ண கிஷோரிடம் தெரிவித்தேன். உடனே அவர் பெருங்கோபத்தோடு, ''என்ன! ஹலதாரி இப்படியா சொன்னர்? அந்தச் சாது பகவானையே நினைத்துக் கொண்டிருக்கிறர்; ஸ்ரீராமபிரானையே தியானம் செய்துகொண்டிருக்கிறர். அதற்காக, எல்லா வற்றையுமே துறந்தும் இருக்கிறர். இப்படியெல்லாம் இருக்கும்போது அவருடைய உடல் வெறும் ஒரு மண்கூடுதானு? அம்மாதிரி பக்தர் ஒருவருடைய உடல் சின்மய வடிவமானது என்பது ஹலதாரிக்குத் தெரியாதா, என்ன?'' என்று கேட்டார். கிருஷ்ண கிஷோருக்கு ஹலதாரியின் மீது அவ்வளவு கோபம் வந்துவிட்டது! அவர் காளிகோயில் பூந்தோட்டத் திற்குப் பூப் பறிக்க வருவது வழக்கம். அந்தச் சமயங்களில் அவர் ஹலதாரியைச் சந்திக்க நேர்ந்தபோதெல்லாம் தம்முடைய முகத்தையே திருப்பிக்கொண்டுவிடுவார்; ஹலதாரியுடன் பேசவும் மாட்டார்.

ஒரு முறை கிருஷ்ணகிஷோர் என்னிடம், ''நீங்கள் ஏன் பூணூலை எறிந்துவிட்டீர்கள்?'' என்று கேட்டார். எனக்குக் கடவுளின் தரிசனம் கிடைத்த நிலை ஏற்பட்ட அந்த நாளிலே, ஒரு பெரிய சுழற் காற்றைப் போன்ற ஏதோ ஒன்று வந்து என்னை எங்கெல்லாமோ எடுத்துச் சென்றது! என் பழைய நிலைமைக்கு உரிய அடையாளம் எதுவும் மிஞ்சாமல் எல்லாமே மறைந்து போயின. உடல் உணர்ச்சியை முற்றும் இழந்துவிட்டேன். உடுத்திருந்த துணியே என் உடலில் தங்கியிருக்க முடியாதபோது பூணூல் எம்மாத்திரம்! நான் கிருஷ்ணகிஷோரிடம், ''என்னைப் போல உனக்கும் ஒரு முறை கடவுள் பைத்தியம் வருமானல், அப்போது இந்த நிலையை நீயே நன்கு அறிந்து கொள்வாய்'' என்று பதில் சொன்னேன்.

பிறகு உண்மையாகவே கிருஷ்ணகிஷோருக்கு அந்த நிலை ஏற்பட்டது. அவரைக் கடவுள் பித்துப் பிடித்துக்கொண்டது. அப்போது அவர் சதா சர்வ காலமும் 'ஓம், ஓம்' என்று ஜபித்துக்கொண்டு, தன்னந்தனிமையில் யாருடனும் பேசாமல் ஓர் அறையில் உட்கார்ந்திருக்கலானர். அவருடைய உறவினர் அனைவரும் உண்மையாகவே அவருக்கு மூளை கெட்டுவிட்டது என்று நினைத்து, ஒரு மருத்துவரை அழைத்தனர். மருத்துவர் வந்து சேர்ந்தார். கிருஷ்ணகிஷோர் அவரிடம், ''ஐயா, என் நோயைக் குணப்படுத்துங்கள். ஆனல் என் 'ஓம்' ஜபத்தை ஒழித்துவிடாதீர்கள்'' என்று சொன்னர். (அனைவரும் சிரித்தனர்.)

ஒரு நாள் நான் கிருஷ்ணகிஷோருடைய வீட்டுக் குச் சென்றிருந்தபோது, அவர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்ததைக் கண்டேன். ''உனக்கு என்ன நேர்ந்துவிட்டது?'' என்று நான் அவரை விசாரித் தேன். அவர், ''வரி வசூலிப்பவன் இங்கு வந்திருந் தான். நான் வரி செலுத்தாவிட்டால் என் வீட்டி லுள்ள சாமான்களையெல்லாம் ஏலம் போட்டுவிடுவ தாகப் பயமுறுத்தினன்'' என்று தெரிவித்தார். அதற்கு நான், ''சரி, இதைப்பற்றிக் கவலைப்படு வதனல் என்ன லாபம்? அதிகப் பட்சம் அவன் பாத்திரங்களை மட்டும்தானே எடுத்துக்கொண்டு போவான்! நன்றாக, மூட்டை கட்டி எடுத்துக் கொண்டு போகட்டுமே! அதனல் உனக்கு என்ன போயிற்று? உன்னை எடுத்துச் சென்றுவிட முடியாதே! உன் இயல்புதான் 'க (ஆகாயம்)' ஆயிற்றே!'' என்று சொன்னேன். (நரேந்திரரும் பிறரும் சிரித்தனர்.) கிருஷ்ணகிஷோர் தம்மைப் பற்றி, 'நான் க* போன்றவன்' என்று அடிக்கடி என்னிடம் சொல்லுவது வழக்கம். அவருக்கு அந்தக் கருத்து 'அத்யாத்ம ராமாயண'த்திலிருந்து உண்டாயிற்று. நான் அவ்வப்போது அவரை 'நீ ஆகாயம்' என்று சொல்லிக் கேலி செய்வதுண்டு. ஆகவே அன்று புன்சிரிப்புடன் அவரிடம், ''நீ க ஆயிற்றே! வரி உன்னை எப்படிப் பாதிக்க முடியும்?'' என்று கேட்டேன்.

அந்தக் கடவுள்பைத்திய நிலையில் என் மனதில் எழுந்ததை அப்படியே மற்றவர்களிடம் நான் சொல்லிவிடுவது வழக்கம். நான் எதையும் எவரை யும் மதித்துப் பேசுவது கிடையாது. பணக்காரர்க ளிடமும் உண்மையைச் சொல்ல அஞ்சமாட்டேன்

யது மல்லிக் என்பவரின் தோட்டத்திற்கு யதீந்திரர் வந்திருந்தார். அப்போது நானும் அங்கு இருந்தேன். அவரிடம் நான், ''நாம் செய்ய வேண்டிய கடமை எது? பகவானை நினைப்பதுதான் நாம் செய்ய வேண்டிய கடமை அல்லவா?'' என்று கேட்டேன். அதற்கு யதீந்திரர், ''நாங்கள்தாம் சம்சாரத்தில் உழலும் மக்கள் ஆயிற்றே! எங்களுக்கு எப்படி முக்தி கிடைக்கும்? ஆனுைப்

*ஆகாயம் போன்று எங்கும் பரந்தவர், எதற்கும் கட்டுப் படாதவர், ஆன்மா.

பட்ட தர்மபுத்திரருக்கே நரகத்தைப் பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதே!'' என்று பதில் கூறினார். இதைக் கேட்டவுடனே எனக்கு மிகவும் கோபம் வந்தது. "ச்சீ, நீ என்ன ஆள்! தர்ம புத்திரர் நரகத்தைப் பார்த்தார் என்பதை மட்டுமே நீ மனதில் வைத்திருக்கிறாயே! அவரிடம் இருந்த சத்தியம், பொறுமை, தைரியம், விவேகம், வைராக்கியம், கடவுள் பக்தி முதலியவற்றை எல்லாம் கொஞ்சமும் நீ உன் மனதில் வைக்க வில்லையே!'' என்று யதீந்திரரிடம் கோபமாகக் கூறினேன். இன்னும்கூட அவரிடம் ஏதேதோ சொல்ல வேண்டுமென்று இருந்தேன். ஆனால் அதற்குள் ஹிருதய் என் வாயை மூடிவிட்டான். சிறிது நேரம் சென்ற பிறகு யதீந்திரர், தமக்கு ஏதோ கொஞ்சம் வேலை இருப்பதாகச் சொல்லி விட்டுப் போய்விட்டார்.

பல நாட்களுக்குப் பிறகு, நான் கேப்டனுடன் ராஜா சௌரீந்திர டாகுர் என்பவரின் வீட்டுக்குச் சென்றேன். சௌரீந்திரரைப் பார்த்தவுடனே நான், "உங்களை ராஜா கிஜா என்றெல்லாம் என்னால் அழைக்க முடியாது. ஏனென்றால் அப்படிச் சொல்லுவது பொய் சொல்வதாக ஆகும்'' என்று சொல்லிவிட்டேன். என்னுடன் அவர் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார். அதன் பிறகு பல கனவான்கள் அங்கே வருவதும் போவதுமாக இருந்ததைக் கவனித்தேன். சௌரீந்திரர் ரஜோ குணம் படைத்தவர். அப்போது பல காரியங்களில் அவர் ஈடுபட்டிருந்தார். நான் அங்கிருந்து திரும்ப நினைத்து அவருக்குத் தகவல் சொல்லி அனுப் பினேன். அவரோ, "எனக்குத் தொண்டை வலியாக இருக்கிறது'' என்று பதில் சொல்லி அனுப்பிவிட்டார்.

என்னைக் கடவுள்பித்துப் பிடித்திருந்த அதே நிலையில், வேறு ஒரு நாள் பாரநகோரில் கங்கையி லுள்ள படித்துறையில் ஜய முகர்ஜியைக் கண்டேன். அவர் பகவானின் நாமத்தை ஜபித்துக்கொண் டிருந்தார். ஆனால் அவருடைய மனமோ வேறு எங்கோ இருந்தது. அப்போது நான் அவருகில் சென்று அவருடைய கன்னத்தில் இரண்டு முறை அறைந்தேன்.

ஒரு சமயம் ராணி ராஸமணி கோயிலுக்கு வந் திருந்தார். அவர் காளிதேவியின் சன்னிதிக்கும் வந்தார். அன்று பூஜைவேளையின்போது இரண் டொரு பாட்டுக்கள் பாடும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். நான் பாடினேன். ஆனால் ராஸமணி அம்மையார் வேறு சிந்தனையில் ஈடுபட்டுப் பூவைக் கசக்கிக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். உடனே அவருடைய கன்னத்தில் இரண்டு அறை கொடுத் தேன். ராஸமணி தமது நிலைக்கு மனம் வருந்தியவராய், இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டு அங்கேயே அமர்ந்திருந்தார்.

உள்ளதை உள்ளபடியே கூறிப் பிறர் மனதை வருந்தச் செய்யும் என் நிலையைக் கண்டு பயந்த நான், "அண்ணா! இது என்ன, இந்தக் கெட்ட பழக்கம் எனக்கு எப்படி வந்தது? இதிலிருந்து நான் எப்படி விடுபடுவேன்?'' என்று ஹலதாரியிடம் கேட்டேன். பிறகு சிறிது காலம் ஜகன்மாதாவிடம் திரும்பத் திரும்ப மனதாரப் பிரார்த்தனை செய்து முறையிட்ட பிறகு, இந்தப் பழக்கம் என்னிட மிருந்து விலகியது.

இந்தத் தெய்விகப் பரவசநிலையில் நான் லயித் திருந்தபோது கடவுள் சம்பந்தமான பேச்சைத் தவிர வேறு எதுவுமே எனக்குச் சுவைக்கவில்லை. இலௌகிக விஷயங்கள் காதில் விழுந்தால் நான் உட்கார்ந்து கொண்டு அழுவேன். மதுரபாபு என்னைத் தீர்த்த யாத்திரைக்கு அழைத்துச் சென்றபோது, ராஜாபாபுவின் வீட்டில் சில நாள் தங்கியிருந்தோம். ஒரு நாள் மதுரபாபுவோடு நான் வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தேன். அங்கு ராஜாபாபு முதலியவர்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் இலௌகிக விஷயங்கள் பலவற்றைப் பற்றிப் பேசக் கேட்டேன். 'வியாபாரத்தில் எவ்வளவு பணம் நஷ்டம் ஏற்பட்டது?' என்பதைப் போன்ற வியாபார விஷயங்கள் பற்றிய பேச்சுக்களை அவர்கள் பேசினார்கள். இதைக் கேட்டதும் உடனே நான் அழ ஆரம்பித்தேன் : "அம்மா! என்னை நீ எங்கே அழைத்து வந்திருக்கிறாய்? நான் தட்சிணேசுவரக் கோயிலிலே எவ்வளவோ மிக நன்றாக இருந்து வந்தேனே! யாத்திரையாக வந்த இடத்திலும் 'காமம்' 'காஞ்சனம்' பற்றிய பேச்சுத் தானா! ஆனால் அங்கே தட்சிணேசுவரத்திலோ இப்படிப்பட்ட இலௌகிக விஷயங்களைப் பற்றிய பேச்சுக்களைக் கேட்க வேண்டிய வாய்ப்பே இருக்காதே!'' என்று அழுது முறையிட்டேன்.

இப்படிச் சொல்லிவிட்டு, ஸ்ரீகுருதேவர் பக்தர்கள் அனைவரையும், குறிப்பாக நரேந்திரரையும், சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளும்படி பணித்தார். தாமும் சிறிய கட்டிலின் மீது படுத்து ஓய்வு கொண்டார்.



கடவுளைக் காட்டும் பாதைகள்

ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்த மகராஜ்
தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம்—சங்கம்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் பாகவதத்தில், தம் சீடரான உத்தவரிடத்தில், "நான் மனிதர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு ஒன்றுக்கு ஒன்று வேறான மூன்று யோகங்களைப் படைத்திருக்கிறேன். யாரெல்லாம் உலக இன்பங்களில் இயல்பாகவே ஆசை கொள்ளாமல், அவற்றை ஒதுக்கித் தள்ளும் மனப் பக்குவம் படைத்திருக்கிறார்களோ அவர்களுக்காக நான் ஞானயோகத்தைப் படைத்திருக்கிறேன். யாரெல்லாம் இந்த உலகப் பொருள்களிலும், அவை தரும் இன்பங்களிலும் அளவற்ற ஆசை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்காக நான் கர்மயோகத்தைப் படைத்திருக்கிறேன்'' என்று கூறுகிறார். அத்தகைய மக்கள் முதலில் பலன்கருதிக் காரியம் செய்வார்கள். பலனுக்காக, பலனை எதிர்பார்த்து அவர்கள் காரியம் செய்து செய்து ஒரு காலத்தில் பலனை எதிர்பார்க்காமல், காரியத்திற்காகவே காரியத்தைச் செய்யும் மனநிலைக்கு வருவார்கள்.

இந்த நிலைக்கு அவர்கள் வந்து பயனேதும் கருதாமல் செயலாற்றும்போது அவர்களின் மனதில் இருக்கும் ஆசைகள் நீங்கிவிடும். ஆசைகள் நீங்கவே மனம் தூய்மை அடையும். மனம் தூய்மை அடைந்ததும் அவர்களுக்கு, 'உலகில் எது நிலையானது, எது நிலையில்லாதது?' என்பது தெளிவாகப் புலப்படும். அந்தத் தெளிவில் உலகில் அழியும் பொருள்களின் (பொன், பொருள், உற்றார்) மீது வெறுப்பும், நிலையான பொருளான ஆத்மாவின்மீது பெரும் விருப்பமும் தோன்றும்.

இத்தகைய மனநிலை உண்டானவுடனே அவர்கள் தங்களுக்குத் தங்கள் ஆத்மாவை உணரும் வழியில் துணை செய்யக்கூடிய மகான்களை நாடிச் செல்வார்கள். எனவே இந்த உலகப் பொருளில் அளவுக்கு அதிகமான ஆசை வைத்திருப்பவர்களுக்குப் பகவான் கர்மயோகத்தை உருவாக்கியிருக்கிறார்.

இப்படியும் இல்லை, அப்படியும் இல்லை!

ஆனால் மக்கள் தொகையில் பெரும்பாலானவர் பொதுவாக ஞானயோகத்தைப் பின்பற்றும் அளவுக்கு அதிகப் பற்றற்றவர்களாகவோ, கர்ம யோகத்தைப் பின்பற்றும் அளவுக்கு அதிகமான உலகப்பற்று உடையவர்களாகவோ இல்லை. அவர்களில் பெரும்பாலோர் உலகப்பற்று உடையவர்களாக இருக்கும் அதே நேரத்தில், கடவுளிடத்திலும் நம்பிக்கை உடையவர்களாகவும் அன்புடையவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு உலகப் பொருள்களில் உள்ள பற்று மிக அதிகமாக இல்லை. இத்தகைய மனநிலையுடைய மக்களுக்குப் பகவான் கிருஷ்ணர் தாம் பக்தி மார்க்கத்தை உருவாக்கியிருப்பதாகக் கூறுகிறார்.

இதுவே ஏற்றது

இந்தப் பக்தி மார்க்கம்தான் பொதுவாகப் பெரும்பாலான மக்களுக்குப் பொருந்துகிற மார்க்கமாகும். இந்தப் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் மக்கள் பொதுவாகத் தங்கள் சாதனையைக் கடவுள் வேறு, தான் வேறு என்னும் துவைதத்தில் இருந்து துவங்குகிறார்கள். இதில் வெற்றிபெற்றுத் தங்களுடைய இஷ்ட தெய்வத்தைத் தங்கள் ஆத்மாவில் கண்டு அனுபவிக்கிறார்கள். இதன் பிறகு, அந்தத் தெய்வத்தின் அருளால், தன்னிலும் வேறாக நிற்கும் கடவுள்நிலையைக் கடந்து தன்னிலேயே அந்தக் கடவுளைக் காணும் தெய்விக நிலையை அடைகிறார்கள்.

சாதனையின் துவக்கம்

எனவே, கடவுளைக் காண விரும்புகிறவர்கள் தங்கள் சாதனையைத் 'தான் வேறு, கடவுள் வேறு' என்ற துவைதத்தில் துவங்க வேண்டும். இந்தத் துவைத மார்க்கத்தில் மூன்று நிலைகள் உள்ளன; அவை: 1. சடங்குகள், 2. ஜபம் 3. தியானம், என்பவை. சடங்குகள் என்பன, நாம் நமக்கு

விருப்பமுள்ள கடவுளின் சிலை, படம் முதலிய வற்றை வைத்து அவற்றிற்கு மலரிடுதல், சந்தனம் இடுதல், தீப தூபம் காட்டல், நைவேத்தியம் படைத்தல் முதலியவற்றைச் செய்யும் வழிபாட்டுச் செயல்களாகும்.

இவ்வாறு நாம் நம் இஷ்ட தெய்வத்திற்கு மன மொன்றிச் செய்யும் பூஜை நம் மனதை அதற்கு அடுத்த நிலையான ஜபத்திற்குத் தகுதியானதாக்கு கிறது. ஜபம் என்பது நாம் வழிபடும் கடவுளின் பெயரை இரவு பகல் எந்த நேரமும் ஓயாமல் உச்சரித்துக்கொண்டே இருப்பதாகும்.

நாம் இந்த ஜபத்தை நாள்தோறும் மனமொன்றிச் செய்யும்பொழுது நம் மனம் கடவுளைக் காண வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொள்ளு கிறது. முதலில் ஜபம் செய்வது கொஞ்சம் கடின மாகத் தோன்றலாம். அதன்பிறகு, ஜபம் செய்வது என்பது மூச்சு விடுவது போன்று மிகவும் எளிய இயல்பான காரியமாகிவிடுகிறது. ஜபம் செய்வதில் பேரானந்தம் ஏற்படுகிறது.

இவ்வாறு சடங்குமயமான பூஜை நம் மனதை ஜபத்திற்கு ஏற்றதாகச் செய்கிறது. ஜபத்தில் மனம் ஆழ்ந்து ஈடுபட்டு, ஜபத்தில் சொல்லும் கடவுளின் பெயரிலும் அவருடைய உருவத்திலும் ஒன்றிவிடும் போது தியானம் கூடுகிறது. அந்தத் தியானத்தின் உச்சநிலையில் கடவுளை நேருக்கு நேராக உணர்ந்து அறிகிற சமாதி என்னும் பெரிய தெய்விக நிலை உண்டாகிறது. அந்த நிலையில் நாம் கடவுளை நேருக்கு நேரே கண்டு உணர்ந்து அவரோடு ஒன்றி விடுகிறோம்.

இவ்வாறு கடவுளைக் காண நாம் நிதானமாக ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குப் படிப்படியாக ஏறிச் செல்லுகிறோம்.

ஜபம்

ஜபம் என்பது நாம் விரும்பும் நம் இஷ்டதெய் வத்தின் பெயரை நாம் சொல்லும் ஒலிவடிவமாகும். நம் மனதில் தோன்றும் ஒவ்வோர் எண்ணமும் ஓர் ஒலிவடிவம் உடையது என்பதை நாம் அறிவோம். ஒலியும் அந்த ஒலி குறிப்பிடும் பொருளும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாகும்.* அவற்றை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. இது போலவே ஆன்மிக வாழ்வில் சில ஒலிகள், சில குறிப்பிட்ட கருத்துக்களை உணர்த்துவனவாக உள்ளன. அந்த ஒலியும் அதன் பொருளும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன.

ஓம் என்னும் ஒலி

'ஓம்' என்னும் ஒலி உருவமற்ற கடவுளைக் குறிப்பதற்காக அமைந்துள்ளது. அது போல ஒரே பரம்பொருளான பரப்பிரம்மத்தின் பலவேறு வடிவங் களாகத் தோன்றியுள்ள பலவேறு தெய்வங்களுக் கும், அவற்றுள் ஒவ்வொன்றையும் குறிக்கும் பல வேறான பீஜமந்திரங்கள் எனப்படும் பெயர் ஒலிகள் உள்ளன. அந்த மந்திர ஒலிகளோடு அந்த அந்தத் தெய்வங்கள் இணைந்து நிற்கின்றன. அப்படி நாம் நம் சமயத்தில் காணும் பல வடிவங் களோடு உள்ள பலவேறு தெய்வங்களுக்கும் தனித் தனியாக பீஜமந்திரம் உள்ளது. அந்தப் பீஜ மந்திரத்தை நாம் விரும்பும் குறிப்பிட்ட நம் இஷ்ட தெய்வத்தின் பெயரோடு சேர்த்து நாம் ஜபம் செய் கிறோம். அப்படி ஜபம் செய்யும்போது நம் மனம் அந்தக் குறிப்பிட்ட தெய்வத்தில் ஒன்றி நிற்கிறது.

மந்திரம் என்றால் என்ன?

மந்திரம் என்பது என்ன? உலகப் பொருள்களின் மேல் செல்லும் நம் மனதைத் தடுத்து, ஆண்டவன் திருவடிகளுக்கு எது நம்மைத் திருப்புகிறதோ அது மந்திரம். மந்திரங்கள் ஒலிமயமானவை. ஆனால் இவை வெறும் ஒலிகள் அல்ல. இவை தம்மிடம் அள வற்ற ஆற்றலைக் கொண்டுள்ளன. ஒரு விதைக்குள் மரம் முளைத்து எழுந்து வானளாவப் பூவோடும் காயோடும் கனியோடும் நிற்கும் ஆற்றல் மறைந் திருப்பதைப் பார்க்கிறோம். இந்தப் பெரிய மரம், அதன் காய் கனிகள் எல்லாம் அந்தச் சிறிய விதைக்குள் மறைந்திருக்கின்றன. அந்த விதை அவ்வளவு பெரிய மரத்தையும் அதன் காய் கனி களையும் உண்டாக்கும் ஆற்றலைத் தன்னிடம் வைத் திருக்கிறது.

அது போலவே இங்கே குறிப்பிடும் பீஜமந்திரங் களும் விதைகள் போன்றவை. அவை வெறும் ஒலிகள் அல்ல. அவை தம்மிடம் அளவற்ற ஆற்றலைக் கொண்டுள்ளன. அந்த ஆற்றல், அந்த மந்திரத்தை ஜபிக்கும் சாதகனை, அந்த மந்திரத்

* மணி என்று நினைக்கும்போது, அதன் வடிவம் அந்த நினைவோடும், அதன் பெயரை உச்சரிக்கும் ஒலியோடும் இணைந்து நம் நினைவிற்கு வருகிறது.

துக்கு உரிய தெய்வத்தை நேருக்கு நேராகக் கண்டு உணர்ந்து இறுதியில் அதன்மூலம் இந்தத் தெய்வங்களுக்கெல்லாம் மூலவடிவான பரம்பொருளை அவன் அடையுமாறு செய்கிறது.

பீஜமந்திரத்தின் ஆற்றல்

பீஜமந்திரங்கள், அவற்றை நாம் மனமொன்றி ஜபிக்கும்போது, அந்த மந்திரங்களுக்கு உரிய, அந்த மந்திர வடிவமான கடவுளை நாம் காணும்படிச் செய்யும் ஆற்றலைப் பெற்றுள்ளன. தோட்டக்காரன் செடியைப் பயிரிடுவதற்கு முன் நிலத்தைப் பண்படுத்துகிறான்; விதை விதைத்து நீர் பாய்ச்சுகிறான்; உரம் இடுகிறான்; ஆடு மாடுகள் மேயாமல் பாதுகாக்கிறான். விதையில் உள்ள உயிர், குறிப்பிட்ட காலத்தில் நாற்றாக முளைக்கிறது. நாளடைவில் வளர்ந்து பெரிய மரமாகிறது.

அது போலவே இந்தப் பீஜமந்திரத்திலும் உயிர் இருக்கிறது. அந்த உயிர், நம் கண்ணுக்குத் தெரியும் ஆற்றலாக முளைத்து, நன்றாக வளர்ந்து, பெருமரமாகி நாம் விரும்பும் கடவுளின் காட்சியாகிய கனியைத் தரும். அதற்கு விதையை விதைக்கவும் அதைப் பாதுகாக்கவும் தோட்டக்காரன் பாடுபடுவதைப் போல நாமும் பாடுபட வேண்டும்.

சாதனை; சாதகன்

தெய்வத்தைக் காண உழைக்கும் இந்த உழைப்பே ஆத்மசாதனை எனப்படுகிறது. சாதனை செய்பவன் சாதகன் எனப்படுகிறான். சாதனை செய்யும் சாதகனின் உழைப்பும், பீஜமந்திரத்தில் மறைந்துள்ள ஆற்றலும் காலக்கிரமத்தில் ஒன்று சேர்ந்து இறுதியில் சாதகனுக்கு அவன் விரும்பும் தெய்வத்தின் காட்சியைத் தருகின்றன.

இந்த முழு நிகழ்ச்சியும் ஜபம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

ஜபம் செய்யும் முறை; தியானம்

நாம் ஜபம் செய்யும்பொழுது, அந்த ஜபம் குறிப்பிடும் தெய்வத்தின் உருவத்தையும் மனதால் நினைக்க வேண்டும். மந்திரத்தைச் சொல்வது, அது குறிப்பிடும் உருவத்தை நினைப்பது ஆகிய இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும். ஏனென்றால், இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்தனவாகும். இவ்வாறு மந்திரத்தை ஜபித்துக் கொண்டு, அதன் வடிவாகிய தெய்வத்தையும் நினைத்துக்கொண்டே வந்தால் உலகப் பொருள்களின் மீது ஓடும் நம் மனம் அந்தத் தெய்வத்தின் மீது நிலைகொள்ளும். இந்த நிலை தியானம் எனப்படும். மேலும் மேலும் ஜபம் செய்துகொண்டே போக, மனமும் மேலும் மேலும் உலக நினைவுகளிலிருந்து விலகி, நாம் வணங்கும் தெய்வத்தின் திருவடிகளில் முழுமையாகப் பதியும். இப்படியே ஜபத்தை அதிகரித்துக்கொண்டே போனால், நம் ஆன்மாவை உணரும் பாதையில் சிறிது சிறிதாக முன்னேறிக்கொண்டே போகலாம்.

ஆரம்பத்தில்

நாம் இதுபோல ஆன்மிக வாழ்க்கையை ஆரம்பித்ததும் சில நாட்கள் ஜபமும் தியானமும் செய்துவிட்டு, அவையே நமக்கு நம் இஷ்டதெய்வத்தின் மீது மனஒருமையைத் தந்துவிடும் என்று நினைக்கிறோம். இது தவறான எண்ணம். இவ்வளவு காலம் உலகப் பொருள்களின் பின்னால் இரவும் பகலும் ஓடியலைந்த மனம், அவ்வளவு சுலபமாக அதிலிருந்து நீங்கி இறைவன் திருவடிகள்மீது நிலை பெற்றுவிடாது. அப்படி நிலைபெறும்படிச் செய்வது மிக மிகக் கடினமான காரியமாகும். ஆனால் நாம் அதைப் பொருட்படுத்தக்கூடாது. தொடர்ந்து கடினமாகப் போராட வேண்டும். [தொடரும்]



பொய் சொல்லிப் பரிசு பெறுவதைவிட உண்மையைச் சொல்லித் துன்பப்படுவது மேலானது.

—ஸ்வீடன்

மற்றவர்கள் குறை கூறுவது போல் நீ உன்னைக் குறைகூறிக்கொள். உன்னை நீ மன்னிப்பதுபோல் மற்றவர்களை மன்னித்துவிடு.

—சீனா

சென்றவாறு எல்லாம் நமது மனதைச் செல்லவிடாமல் தீமைகளை ஒதுக்கி, நல்லது எதுவோ அதில் மனதைச் செலுத்துவதே சிறந்த அறிவுடைமையாகும்.

—வள்ளுவர்

விஜய தீபம்

'லோகோபகாரி' வி. நடராஜ ஐயர்

சுவாமி விவேகானந்தர் வாழ்ந்த காலத்தில் தமிழ்நாட்டில் மிகவும் பிரபலமாக விளங்கிய தமிழ்ப் பத்திரிகை 'லோகோபகாரி' இது வாரப்பத்திரிகை.

லோகோபகாரியின் உரிமையாளரும் ஆசிரியரு மான வி. நடராஜ ஐயர் மத வாழ்க்கையிலும் சமூக முன்னேற்றத்திலும் மிகவும் ஈடுபாடு உடையவர். தமது 'லோகோபகாரி' பத்திரிகையில் அவர் அரசியல், சமூகம், வரலாறு, கோர்ட்டு விவகாரங்கள், சிறுகதைகள், வேடிக்கைத் துணுக்குகள், புராணக் கதைகள், பக்தர் ஞானிகள் வரலாறுகள், மேலை நாட்டுச் செய்திகள், இந்தியாவின் பல பாகங்களி லும் நடைபெற்று வந்த அரசியல் விவகாரங்கள், பிரபல ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவரும் முக்கியச் செய்திகளின் தமிழாக்கம், வேதாந்தம், சாஸ்திரங்கள் ஆகிய செய்திகளை வெளியிட்டு வந்தார்.

விவேகானந்தரின் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், சிகாகோ சொற்பொழிவுகள், அன்பு மதம், அனுஷ்டான வேதாந்தம் ஆகியவற்றி லிருந்து சில பகுதிகளை வி. நடராஜ ஐயர் தமி ழாக்கம் செய்து 'லோகோபகாரி' பத்திரிகையில் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். தமது பத்திரி கையில் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகிய பெரியோர்களின் வாழ்வில் நடந்த சம்பவங் களையும் அடிக்கடி அவர் எழுதி வந்தார். அனேக மாக ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றியும், சுவாமி விவேகா னந்தரைப் பற்றியும் தமிழில் முதல்முதலாக எழுதி யவர் வி. நடராஜ ஐயர்தாம் என்று சொல்லலாம். 'லோகோபகாரி'யில் தமிழாக்கம் செய்து வெளி வந்த விவேகானந்தரின் கட்டுரைகளை அவர் 'ஞானத் திரட்டு' என்ற தலைப்பில் மூன்று தொகுதி களாக வெளியிட்டார்.

முதல் தொகுதியில் விவேகானந்தர் தியானநிலை யிலுள்ள படமும், விவேகானந்தரின் வாழ்க்கைச் சுருக்கமும் இணைக்கப்பட்டு வெளியாயின.

முதல் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் வி. நடராஜ ஐயர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:—

முகவுரை

ஆரியமணிகாள்!

இச் சிறு புத்தகத்தை இயற்றிய நான் ஆங்கிலத்தி னின்றும் தமிழில் மொழிபெயர்க்கும் என் கல்வித் திறனைக் காட்டுவதற்காக முயன்றவனல்ல. உல கெங்கும் கியாதி பெற்று, ஆங்காங்கே நம்முடைய ஆரியமத சிந்தாந்தங்களையும் வேதாந்தங்களையும் அனுரியர்களும் தெரிந்துகொள்ளுமாறு ஆங்கில பாஷையில் உபன்யஸித்து, நமது ஹிந்து மதத்தின் பெருமையைப் பிற கண்டங்களிலும் விளக்கிக் காட்டிய மகா பரிசுத்தராகிய ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் கருத்துப்படி அவர்களுடைய உபன் யாஸங்களை நமது தமிழ்நாட்டார் எளிதில் உணர வேண்டும் என்ற ஆசையால் மொழிபெயர்த்தேனே யன்றி வேறல்ல. இப் புத்தகத்தில் எதார்த்த மனி தன்—போலி மனிதன் (Real man and Apparent man), இந்து மதம், கர்மயோகம் ஆகிய முக்கிய மான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. கூடிய சீக்கிரத்தில் பெரியோர்களின் ஆசீர்வாத பலத்தால் ஞானத் திரட்டின் 2-வது, 3-வது பாகங்கள் அச் சிட்டு வெளிப்படுத்தப்படும் என்பதைத் தாழ்மை யுடன் தெரிவிக்கலானேன். இப் புத்தகம் வெளி யாகத் தாமதமுண்டானதற்குக் காரணம் இங்கு வந்திருக்கும் விவேகானந்த சுவாமிகளின் பிரதிநிதி யாகிய ஸ்ரீ ராமகிருஷ்ணானந்த சுவாமிகளின் அனுமதியையும் உதவியையும் பெறவேண்டியிருந் ததே. அவருடைய அனுமதியின் பேரில் விவேக னந்த சுவாமிகளின் படத்தைத் தயார் செய்து இப் புத்தகத்தை அவர்கள் அங்கீகரிக்குமாறு அனுப்பி

யிருக்கிறேன். ஆங்கில பாஷையிலிருந்து வேதாந்த விஷயங்களைத் தமிழில் மொழிபெயர்த்த இப் புஸ்தகம்தான் என் பிரதம முயற்சியாகையால் இதிலுள்ள சொற்குற்றம், பொருட்குற்றங்களை இதைப் படிக்கும் கனவான்கள் பாராட்டாமல் என்மீது அன்பு கூர்ந்து என்னை மன்னிக்க வேண்டுகிறேன்.

1-4-1898 வி. நடராஜ ஐயர்

ஞானத் திரட்டின் முதல் பாகத்தை விவேகானந்தருக்கு வி. நடராஜ ஐயர் காணிக்கையாக்கினர். அதை அவர் முன்னுரையின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் முழுப் பக்க அளவில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதன் மூலம் அறிகிறோம்:—

Most Respectfully
Dedicated
To

HIS HOLINESS
SWAMI VIVEKANANDA

By V. NATARAJA AIYAR

ஞானத் திரட்டின் முதல் தொகுதி வெளியான போது வி. நடராஜ ஐயர் அதற்குத் தடபுடலாகப் பெரிய அளவில் விளம்பரம் செய்தார். அதன் சில பகுதிகள் வருமாறு :—

ஞானத் திரட்டு

இத் தலைப்பைப் பெயர் பூண்ட ஒரு தமிழ்ப் புத்தகம் இவ் வருஷம் (1898) ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியன்று அச்சிட்டு வெளியாகியிருக்கிறது. இது உயர்ந்த 16-பவுன் கிளேஸ் காகிதத்தில் (டெம்மி சைஸ்) 100-பக்கங்களுள்ளதாய் அழகான பயிண்டுடன் வெளியானது ...... இதில் சகல கண்டங்களிலும் நமது ஆரியமதத்தின் பெருமையை நிலை நாட்டி உலகமெங்கும் கீர்த்திபெற்று, ஓர் அவதார புருஷன்போல் விளங்கிவரும், ஸ்ரீமான் விவேகானந்த சுவாமிகள் யோகம், ஞானம், பக்தி, கர்மம் ஆகிய வேதாந்த விஷயங்களைப்பற்றி இங்கிலீஷில் ஆங்காங்கே பிரசங்கித்திருக்கிற உபன்யாசங்களையெல்லாம் உருட்டித் திரட்டி வெகு தெளிவான இனிய செந்தமிழ் நடையில் எல்லோர்க்கும் பொருள் விளங்குமாறு மொழிபெயர்த்திருக்கிறோம். சரீரத்துக்கு ஆரோக்கியமான மருந்தைத் தேனிலும் நெய்யிலும் பாலிலும் சர்க்கரையிலும் சேர்த்துப் பெற்றோர்கள் குழந்தைக்குக் கொடுப்பது போல், வேதாந்தமாகிய அரிய மருந்தை ஸமயோசிதமான நற்கதைகளுடனும், அற்புதமான சரித்திரங்களுடனும், திவ்வியமான உதாரணங்களுடனும் விவேகானந்தர் நமக்கு அளித்திருக்கின்றார். ஆதலின் இப் புத்தகத்தைப் படித்தறிவது சற்றுக் கஷ்டமாயிருக்குமென்று கொஞ்சமேனும் நினைக்க வேண்டாம். கீதா சாஸ்திரத்தையும், உபநிஷத்துக்களையும், கற்கண்டைப் போல் திரட்டி, ரஸமான பல உதாரணங்களுடன், சிறுவர்கள்கூட வெகு எளிதில் அறிந்து ஆனந்தம் கொள்ளுமாறு சுவாமிகள் பிரசங்கித்திருக்கிறார். ஆதலின், அவரது உபந்யாசங்களின் மொழிபெயர்ப்பாகிய இந்த ஞானத் திரட்டை ஒவ்வொருவரும் வாங்கிப் படிப்பது அவசியமாகும். சுலபமாயுமிருக்கும்.

குறிப்பு: சர்க்கரை தித்திக்கும் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. அது போல் விவேகானந்த சுவாமிகளின் உபன்யாசங்கள் படிக்கப் படிக்க வெகு இன்பமாக இருக்குமென்பதை ஒவ்வொருவரும் தாமே அறிந்துகொள்வார்கள். இது கேவலம் உபயோகமற்ற வீண் கதைகளடங்கிய புஸ்தகமன்று. வேதாந்த ஸாரங்களடங்கிய கிரந்தம். அதிலும் என் போன்ற ஸாமான்யர்களால் எழுதப்பட்டதல்ல. மகா சமர்த்தராகிய சுவாமி விவேகானந்தரால் செய்யப்பட்ட உபன்யாசங்களின் மொழிபெயர்ப்பு.

இப் புத்தகத்திற்குள் வைத்து அனுப்பப்படும் விவேகானந்த சுவாமிகளின் படம், பார்ப்பதற்கு வெகு அழகாயும் மனோரஞ்ஜமாயுமிருக்கும். அவர்களுடைய முகத்தில் ஜ்வலிக்கும் தேஜஸ்ஸை அப் படத்தில் வியக்தமாய்க் காணலாம்.

இப் புத்தகம் வாங்குகிறவர்களுக்கு மிகுந்த லாபமுண்டு. படத்தை மட்டும் தனியாகப் பெறுவதானால் 8 அணுவுக்கு ஒரு நாளும் குறையாது. 8-அணு விலையுள்ள சுவாமிகளின் படத்தை அவர்கள் புஸ்தகத்துடன் பெறுவதால் தபால் கூலி லாபத்துடன் இரண்டணுவுக்கு அடைகிறார்கள்.

வி. நடராஜ அய்யர்,
மானேஜர், லோகோபகாரி ஆபீஸ்
மதராஸ்

ஞானத் திரட்டின் முதல் தொகுதியை, சென்னையில் இருந்த சுவாமி இராமகிருஷ்ணனந்தருக்கு அனுப்பியதோடன்றி, அப்போது வங்காளத்தில் இருந்த சுவாமி விவேகானந்தருக்கும் வி. நடராஜ ஐயர் அனுப்பி வைத்தார். பிரதியைப் பெற்றுக் கொண்ட விவேகானந்தர் வி. நடராஜ ஐயருக்கு ஒரு கடிதம் எழுதினர். சுமார் மூன்று வருடங்களுக்குப் பிறகு ஞானத் திரட்டின் இரண்டாவது தொகுதி வெளியாயிற்று. இரண்டாவது தொகுதியில், சுவாமி விவேகானந்தர் தமக்கு எழுதிய கடிதத்தையும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பையும் இணைத்து வி. நடராஜ ஐயர் வெளியிட்டார். அதன் பகுதி வருமாறு:—

Ballen Villa,
Darjeeling,
15th April, 1898

Dear Sir,

I have much pleasure to acknowledge of your letter of the 7th instant together with a copy of a free rendering in lucid Tamil of some of my lectures. Indeed you have done a great service to the Tamil speaking people generally and to your anxious subscribers specially. It is no doubt very desirable that there be a broadcast spreading of all that I have said amongst the people, and the best mode of doing it is to render it in all the vernaculars of the country and you are to be congratulated for taking the lead in right ernest.

Wishing you all success in your venture and blessings to you.

I remain yours truly
Vivekananda

பாலன் வில்லா,
டார்ஜிலிங்
15, ஏப்ரல் 1898

அன்பார்ந்த ஐயா,

நிகழும் மாதம் 7-ஆம் தேதியன்று நீர் வரைந்து விடுத்த கடிதத்தையும் எனது உபன்யாஸங்களிற் சிலவடங்கிய ஞானத் திரட்டு என்னும் புஸ்தகத்தையும் மிகுந்த சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டேன். உண்மையாகவே நீர் பொதுவாய்த் தமிழ் பேசும் ஜனங்களுக்கும், முக்கியமாய் எனது பிரசங்கங்களைப் படிக்க விரும்பிய உமது பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கும் பெரிய உபகாரம் செய்திருக்கிறீர். நான் சொன்ன விஷயங்களைச் சகல ஜனங்களும் அறிய வேண்டுமென்பது என்னுடைய முக்கியக் கருத்து. சுதேச பாஷைகளில் என்னுடைய உபன்யாசங்களை மொழிபெயர்ப்பதுதான் அதற்குத் தகுந்த வழி. இவ் விஷயத்தில் நீர் மிகுந்த ஆவலுடன் முயற்சி செய்து, எல்லோருக்கும் முதன்மையாய் எனது உபன்யாஸங்களைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காக உம்மை நான் மிகவும் மெச்சுகிறேன்.

பெருமையைத் தரத் தக்க உம்முடைய பிரயத்தினம் நன்ருகப் பலிக்குமாறு நான் கோருவதுடன் இக் கடிதமூலம் உமக்கு அநேக ஆசீர்வாதமும் செய்கிறேன்.

உமது உண்மையான,
விவேகானந்தர்

இக் கடிதத்தில் சுவாமிஜி, "It is no doubt very desirable that there be a broadcast spreading of all that I have said amongst the people, and the best mode of doing it is to render it in all vernaculars of the country" ("நான் சொன்ன விஷயங்களைச் சகல ஜனங்களும் அறிய வேண்டுமென்பது என்னுடைய முக்கியக் கருத்து. சுதேச பாஷைகளில் என்னுடைய உபன்யாஸங்களை மொழிபெயர்ப்பதுதான் அதற்குத் தகுந்த வழி") என்று குறிப்பிட்டிருக்கிருர். சுவாமி விவேகானந்தரின் எண்ணம் அறுபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, விவேகானந்தரின் நூற்ருண்டு விழாச் சமயத்தில் (1963) ஈடேறவும் செய்தது. சுவாமி விவேகானந்தரின் நூல்கள் முழுவதும் எல்லா இந்திய மொழிகளிலும் வெளிவருவதற்காக இந்திய அரசாங்கம் பொருளுதவி செய்தது. 1963-ஆம் ஆண்டு விவேகானந்தரின் நூல்கள் முழுவதையும் மொழிபெயர்த்து ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் எல்லா இந்திய மொழிகளிலும் சுவாமி விவேகானந்தரின் நூற்ருண்டு விழாத் தொகுதிகளாக மலிவு விலையில் வெளியிட்டிருக்கிறது.

"இந்திய மொழிகளிலேயே விவேகானந்தரின் கருத்துக்கள் தமிழில்தான் முதல்முதலாக மொழிபெயர்க்கப்பட்டு நூல்வடிவில் வெளிவந்தன. அந்தத் திருப்பணியைச் செய்த பெருமை ஞானத்

திரட்டை வெளியிட்ட 'லோகோபகாரி' ஆசிரியர் வி. நடராஜ ஐயர் அவர்களையே சாரும். ஞானத் திரட்டு வெளிவந்த பிறகே வங்கமொழி உட்படப் பிற இந்திய மொழிகளில் விவேகானந்தரின் நூல்கள் வெளிவர ஆரம்பித்தன'' என்ற கருத்தைத் திரு பெ. சு. மணி அவர்கள், 'இந்தியத் தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தமது அரிய ஆராய்ச்சி நூலில் குறிப்பிடுகிறார்..

ஞானத் திரட்டின் முதல் தொகுதி வெளிவந்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இரண்டாம் தொகுதி வெளிவந்தது. இரண்டாம் தொகுதியிலும் விவேகானந்தரின் வாழ்க்கை வரலாறு சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருந்தது. இரண்டாம் தொகுதியின் இறுதிப் பக்கத்தில் 'பின்னுரை' என்ற தலைப்பில் வி. நடராஜ ஐயர் பின்வருமாறு குறிப்பிட்டார்:—

''இப் புத்தகத்தில் ஸ்ரீமான் விவேகானந்த சுவாமிகளின் உபன்யாஸமாகிய பக்தியோகமும், ஞான யோகத்தில் ஓர் பகுதியும் அடங்கியிருக்கின்றன. இப் புத்தகம் முடிவது மிகுந்த பிரயாசையாய்விட்டது. இதற்குக் காரணம் எனக்குண்டான பல லௌகிக காரியங்களே. ஆதலின் ஞானயோகம் முழுவதையும் சாவகாசமாய் மொழிபெயர்த்து அடுத்த வருஷத்தில் ஞானத் திரட்டின் மூன்றாம் பாகமாக வெளியிட நிச்சயித்திருக்கிறேன். ஆகையால் என்னாலுண்டான குற்றங்களைப் பாராட்டாமல், குணத்தை மட்டும் கிரகிக்கக் கோருகிறேன்.

வி. நடராஜன்''

ஞானத் திரட்டின் இரண்டாம் தொகுதி வெளிவந்த பின்பு, இரண்டு தொகுதிகளுக்கும் சேர்ந்து விளம்பரங்கள் வெளிவந்தன. அவை பின்வருமாறு :—

ஞானத் திரட்டு

(முதற் பாகம்)

ஸ்ரீமான் விவேகானந்த சுவாமிகள் ஹிந்து மதம், கர்மயோகம், எதார்த்த மனிதன்-போலி மனிதன், விக்கிரகாராதனை முதலிய பற்பல விஷயங்களைப் பற்றி ஆங்கில பாஷையில் பிரசங்கித்த உபன்யாஸங்களையெல்லாம் ஞானத் திரட்டின் முதற் பாகமாகிய இப் புத்தகத்தில் மொழிபெயர்த்திருக்கிறோம். இப் புத்தகம் சென்னை அட்டிஸன் கம்பெனியில் அச்சிடப்பட்டது. ஒரு காபியின் விலை சகல தபாற் செலவுகளுமுள்பட 12-அணா. இன்னும் சொற்ப காபிகளே கைவசமிருப்பதால் வேண்டியவர்கள் உடனே ஒரு கார்டில் தங்கள் பெயர் விலாசத்தை எழுதி, சென்னை, தங்கசாலை வீதி, 176 நெ. வீட்டிலிருக்கும் லோகோபகாரி மானேஜர் வி. நடராஜ ஐயருக்கென்று அனுப்பிவிடவும்.

இப் புஸ்தகத்தில் விவேகானந்தரின் அழகிய திருவுருவப் படம் இரண்டிருக்கின்றன.*

(இரண்டாவது பாகம்)

இப் புத்தகம் ஸ்ரீமான் விவேகானந்த சுவாமிகளின் பக்தி ஞான யோகங்களின் மொழிபெயர்ப்பு. இதன் அளவும் உருவமும் முதற் பாகத்தைப் போலவேதான். ஒரு காபியின் விலை 8 அணா. வி.பி. சார்ஜ் முதலிய சகல தபாற் செலவுகளுமுள்பட 10-அணாவாகும். 120-பக்கங்கள் கொண்ட அருமையான இத் தமிழ்ப் புத்தகம் சென்னை, தாம்ஸன் அண்டு கம்பெனியில் அச்சிடப்பட்டது.

பக்தியோகம்: வேதத்தில் கர்ம காண்டம், உபாசனா காண்டம், ஞான காண்டம் என மூன்று காண்டங்கள் உண்டு. இவைகளில் உபாசனா காண்டத்தில்தான் பக்தியைப் பற்றிக் கூறியிருக்கிறது. கடவுளின் அருளைப் பெறுவதற்குப் பக்தியே தகுந்த சாதனம். இவ்வித பக்தியைப் பற்றியும் ஞானயோகத்தைப் பற்றியும் விவேகானந்த சுவாமிகள் இங்கிலீஷில் செய்திருக்கிற உபன்னியாஸங்களை ஞானத் திரட்டின் 2-ஆம் பாகத்தில் மொழிபெயர்த்திருக்கிறோம்.

இப் புத்தகத்திலும் விவேகானந்த சுவாமிகளின் அழகிய படம் அமைந்துள்ளது.

முதற் பாகத்தை வாங்கிப் படித்தவர்கள் இந்தப் புத்தகத்தின் அருமையையும் பெருமையையும் அறியக் கூடுமாதலின் நாம் இங்கு அதிகமாய் எழுதவில்லை.

வி. நடராஜ ஐயர் 'ஞானசந்திரிகா' என்ற மாதப் பத்திரிகையின் ஆசிரியராகவும் விளங்கினார். 'லோகோபகாரி' வாரப் பத்திரிகையாகவும், 'ஞான

*ஞானத் திரட்டின் முதல் தொகுதி 1-4-1898 வெளியான போது அதில் சுவாமிஜியின் தியான நிலையிலுள்ள ஒரு படம் மட்டுமே இருந்தது. மூன்றாண்டுகளுக்குப் பிறகு வெளிவந்த இந்த விளம்பரத்தில், சுவாமிஜியின் இரண்டு படங்கள் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அனேகமாக இது ஞானத் திரட்டு முதல் பாகத்தின் இரண்டாம் பதிப்பாக இருக்கக் கூடும். —ஆசிரியர்

சந்திரிகா' மாதப் பத்திரிகையாகவும் வி. நடராஜ ஐயரை உரிமையாளராகவும் ஆசிரியராகவும் கொண்டு ஒரே சமயத்தில் சென்னையிலிருந்து (லோகோபகாரி ஆபிசிலிருந்து) வெளியிடப் பட்டன. 'ஞானசந்திரிகா' பத்திரிகையிலும் லோகோபகாரியின் தரத்தில் அதே விதமான செய்திகளே வெளியிடப்பட்டன. ஞானசந்திரிகா வில் வெளிவரும் செய்திகளை ஒன்பது விதமாகப் பிரித்து, அப் பத்திரிகைக்காக விளம்பரம் ஒன்று வெளியாகியிருந்தது. அவ் விளம்பரத்தில் பின்வரும் ஒன்பது தலைப்புகள் கொட்டை எழுத்திலும் அந்த அந்தத் தலைப்புகளின் கீழ் அதைக் குறித்த சிறு குறிப்பும் காணப்படுகின்றன. 1. ஈசுவர பக்தியைக் குறித்தவை, 2. அரசாங்க முறைமை, 3. பார்லி மெண்ட், 4. சட்ட நிர்ணய சபை, 5. ஆசாரக் கிரமங்கள், 6. சரித்திரம், 7. தேச வர்த்தமானம், 8. விநோதம், 9. சில்லரை விஷயங்கள்.

இந்த ஒன்பது தலைப்புகளில் முதலாவது தலைப்பும் அதன்கீழ்க் கொடுக்கப்பட்ட குறிப்பும் வருமாறு:—

1. ஈசுவர பக்தியைக் குறித்தவை: இதி லுள்ள சங்கதிகள் எந்த மதத்தையும் தூஷித்ததா யிராமல் எல்லா மதங்களுக்கும் பொதுவாயிருக்கும். சுவாமி விவேகானந்தர் முதலிய மகான்களின் அற்புதமான பிரஸங்கங்களை வரிசைப்படுத்தி ஒவ் வொரு தடவையும் வெகு தெளிவான இனிய செந் தமிழ் நடையில் மொழிபெயர்த்து எழுதப்படும்.

சமய உண்மைகள், புராணக் கதைகள், மற்றும் சமயப் பெரியார்களைக் குறித்தும் தாம் பத்திரிகை களில் எழுதிய பகுதிகளை, பிற்காலத்தில் 'ஞான தரிசினி என்ற தலைப்பில் நூலாக வி. நடராஜ ஐயர் வெளியிட்டார். 'ஞானதரிசினி'யில் பெரும் பாலான பகுதிகள் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றன.

'லோகோபகாரி' அந்த நாளில் உண்மையில் லோகத்திற்கு (உலகிற்கு) நல்ல உபகாரம்தான் செய்திருக்கிறான்!*

---

*பேலூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலுள்ள வி. நடராஜ ஐயர் நூல்களை ஆதாரமாகக் கொண்டு இந்தக் கட்டுரை தயாரிக்கப்பெற்றது.

ஸ்ரீராமானுஜர் விரட்டிய பிரம்மராக்ஷஸன்

ஸ்ரீராமானுஜர் தமது முதல் ஞானகுருவாகிய யாதவப்பிரகாசரிடம் படித்துக்கொண்டிருந்த சமயத்தில் நடந்த நிகழ்ச்சி இது :

குருநாதர் ராமானுஜரின் திவ்யதேஜஸையும் புத்தி நுட்பத்தையும் கண்டு பொறாமைப் பட்டுக் கொண்டிருந்தார். அதே சமயத்தில், காஞ்சி மன்னனின் மகள், பேய் பிடித்துக் கொண்டதனால் அனைவருக்கும் கவலையை அளித்து வந்தாள். பல மந்திரவாதிகள் வந்து மந்திரம் போட்டனர். பலன் ஏதும் ஏற்படவில்லை.

அரசனின் அழைப்பினால் யாதவப்பிரகாசரும் தமது சிடர்களுடன் அங்கே வந்து சேர்ந்தார். யாதவப் பிரகாசர் மந்திரத்தைச் சொல்லத் ,தொடங்கியவுடன் அரசகுமாரியின் வாயிலாகப் பேய் பேசத்தொடங்கியது : "உன் வாழ்நாள் முழுவதும் மந்திரங்களை ஜபித்தாலும் என்னை நீ ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனால் நான் விரும்பினால் உன்னை உன் வீட்டிற்கே விரட்டிவிடுவேன். நான் சாதாரணப் பேய் அல்ல; நான் ஒரு பிரம்மராக்ஷஸன்".

யாதவப்பிரகாசர் பயந்து அந்த இடத்தை விட்டு அகன்றார். அப்போது ஸ்ரீராமானுஜர் அந்தப் பெண்ணின் முன்னால் சென்று, "ஐயா! தங்களுக்கு இப்படிப்பட்ட வருத்தத்தைக் கொடுக்கும் உடல் ஏன் கிடைத்தது?" என்று கேட்டார்.

அழுதுகொண்டே பிரம்மராக்ஷஸன் சொன்னான் : "நான் ஒரு சிறந்த பண்டிதனாக இருந்தேன். ஆனால் என் கல்வியை மூடி மறைத்து வைத்திருந்தேன். யாருக்கும் வித்யாதானம் செய்யவில்லை. அதன் பயனாக ராக்ஷஸனானேன். நீங்கள் மிகவும் கெட்டிக்காரர். என்னைக் கண்டுபிடித்து விட்டீர்கள். தாங்கள் தங்கள் திருக்கரத்தை என் தலைமீது வைத்து எனக்கு அபயம் அளிப்பீர்களேயானால் நான் இந்த நிலையிலிருந்து விடுபடுவேன்" என்றான்.

ஸ்ரீராமானுஜர் பகவானை மனதில் தியானித்தபடி ராஜகுமாரியின் தலையில் தன் கையை வைத்தார். அந்தக் கணமே பிரம்மராக்ஷஸன் அந்தப் பெண்ணை விட்டு நீங்கி முக்தி பெற்றான்.

இந்த நிகழ்ச்சியைப் படிக்கும்போது சுவாமி விவேகானந்தர் ஹைதராபாத்தில் நோயாளியைக் குணமாக்கியதும், சென்னையில் சில ஆவிகளுக்கு விடுதலை வழங்கியதும் நினைவுக்கு வருகின்றன.

—'நரேந்திரன்'

பலியிடார்

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்



இறைவன் பிட்சாடனனுகச் செல்லும் செயலைக் காரைக்காலம்மையார் பின்னும் நினைத்துப் பார்க்கிருர். பிச்சைக்காரன் ஆனுலும், துறவியானுலும் அவர்களுக்கு வேண்டியதை இடுபவர்கள் பெண் மணிகளே. இதனுல்தான் பிச்சைக்காரன், ''அம்மா! பிச்சை'' என்று கேட்கிருனேயன்றி, ''ஐயா! பிச்சை'' என்று கேட்பதில்லை. வீட்டுக்கு வெளியே வரும் பிச்சைக்காரர்களுக்கு ஐயமும், வீட்டுக் குள்ளே வரும் விருந்தினர்களுக்கு விருந்தும் இடும் கடமையை உடையவர்கள் மகளிர். ''ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி'' என்று பெண்கள் பாடுவதாகத்தானே திருப்பாவையில் வருகிறது?

சிவபெருமான் பிட்சை வாங்கச் செல்கிருன். அவனுக்குப் பிட்சையிடப் பெண்களே வர வேண்டும். தாருகாவனத்து முனிவர்களின் பத்தினிகள் பிட்சையிட்டதாகப் புராணம் சொல்கிறது.

காரைக்காலம்மையார் இறைவனுக்கு மடவார் பிச்சையிடுவார்கள் என்பதை இப்போது நினைத்துப் பார்க்கிருர்.

பிச்சை வாங்குகிறவர்கள் சாந்தமாகப் போய்ப் பிச்சை கேட்டால் பெண்கள் மகிழ்ந்து பிச்சை இடுவார்கள். சிவபெருமான் எப்படிப் போகிருன்? என்பு மாலையும் புன்சடையும் கொண்டு பிச்சை கேட்கப் போகிருன். கையில் கபாலத்தை ஏந்தி யிருக்கிருன். பெண்கள் பயந்த சுபாவம் உடையவர்கள். மெல்லியலார். அவர்கள் இந்தக் கோரங் களைக் கண்டால் அஞ்சுவார்கள். கபாலமும் எலும்பு மாலையும் அவர்களை ஒன்றும் செய்வதில்லை. அவற்றின் தோற்றம் மரணத்தையும் சுடுகாட்டையும் நினைப்பூட்டிப் பயத்தை உண்டாக்கும்.

அவற்றைக் கண்டும் அஞ்சாமல், 'பாவம்! யாரோ பெரியவர் பிச்சை கேட்கிருர்' என்று மனம் இரங்கிப் பிச்சையிட்டாலும் இடலாம். ஆனுல் மற்றென்று இருக்கிறதே, அதைக் கண்டால் அஞ்சாமல் இருக்க முடியுமா? 'பாம்பென்ருல் படையும் நடுங்கும்' என்பார்கள். படையில் பல சாலிகளாகிய வீரர்கள் இருப்பார்கள். அவர்களே பாம்பைக் கண்டு அஞ்சுவார்களானுல் அபலைகளாகிய பெண்கள் நிலைகுலைந்து பயந்து நடு நடுங்கிவிடுவார்கள் என்று சொல்லவும் வேண்டுமா? நஞ்சு மிக்க நாகப்பாம்பை ஆண்டவன் அணிந் திருக்கிருன். அது படம் எடுத்துச் சீறி ஆடுகிறது. அதைக் கண்டால் பெண்கள் நடுங்கி ஓடி ஒளிந்து கொள்வார்களே! அப்புறம் இறைவனுக்குப் பிட்சை எங்கே கிடைக்கும்?

இவற்றை எண்ணிக் காரைக்காலம்மையார் இறைவனுக்கு ஓர் அறிவுரை கூறுகிருர். தாயின் நிலையில் இருந்துகொண்டு அதைக் கூறுகிருர். அழுக்கான உடைகளை அணிந்துகொண்டு வேலை தேடிப் போகும் மகனைப் பார்த்து, ''இப்படிப் போகாதே அப்பா! இந்த அழுக்கு உடைகளைக் களைந்துவிட்டு நல்ல ஆடையாக அணிந்து செல்'' என்று தாய் கூறுவதைப் போல அமைந்திருக்கிறது, அம்மையார் கூற்று.

இறைவனைப் பார்த்து அவர் கூறத் தொடங்கு கிருர் : 'எம்பெருமானே, நீ பிச்சை எடுப்பது தவறு தான். அதைப்பற்றிச் சொல்லிப் பயன் இல்லை. கண்ட கண்ட இடத்திற்குப் போகாமல் இன்ன இடத்துக்கு மட்டும் போ என்று வரையறை சொல்ல வரவில்லை. உன் விருப்பப்படியே இந்த உலகம் எல்லாம் சென்று இரந்து வா. ஆனுல் ஒன்று சொல்கிறேன்; அப்படிச் செய். அப்போதுதான்

உனக்குப் பிச்சை கிடைக்கும். என்ன செய்ய வேண்டும் தெரியுமா? நீ மிகவும் கொடிய, கெட்ட பாம்பை அணிந்திருக்கிறாய். அதைக் கழற்றி வைத்துவிட்டு எங்கு வேண்டுமானாலும் போ!'

நீ உலகம் எல்லாம் இரப்பினும், நின்னுடைய
தீய அரவு ஒழியச் செல்கண்டாய்.

ஏன் தெரியுமா? உனக்குப் பிச்சையிட வருகிறவர்கள் பெண்கள். அவர்கள் மிகவும் தூயவர்கள். நீ பாம்பை அணிந்துகொண்டு போனால் அது சும்மா அமைதியாக இராது. உன் மேலே தவழ்ந்து மிகுதியாக ஆடும். அதைக் கண்டால் அவர்கள் பயப்படுவார்கள். உன்னுடைய குரலைக் கேட்டுக் கையில் பிட்சையை எடுத்துக்கொண்டு வருவார்கள். சிறிது தூரம் வந்தவுடன் புஸ் என்று சீறி ஆடும் பாம்பைக் கண்டவுடன் அப்படியே உள்ளே ஓடிவிடுவார்கள். உன்னிடத்தில் வந்த பிறகு தானே பிச்சை போட வேண்டும்? அருகிலே வர மாட்டார்களே. கொண்டு வந்த பிச்சையையும் போட முடியாது. நீ எதற்காகப் போகிறாயோ அந்தக் காரியம் பலிக்காது. அவர்கள் பிச்சையிட வேண்டும் என்ற நல்ல எண்ணம் உடையவர்கள்; தூய மனம் உடையவர்கள். பிச்சைப் பொருளைக் கையில் எடுத்து வந்தும் போடாமற் போனதற்கு அவர்கள் இயல்பு காரணம் அன்று. உன்னுடைய செயலே காரணம். உன்னுடைய அருமையான ஆபரணந்தான் காரணமாக இருக்கும். ஆகவே நான் சொல்கிறபடி செய்.

தூய
மடவரலார் வந்து பலிஇடார், அஞ்சி,
விடஅரவம் மேல்ஆட மிக்கு.

'அவர்கள் பிச்சையிட வேண்டும்' என்ற எண்ணத்தோடு இருந்தும் அந்தப் பாம்பைக் கண்டு அஞ்சிப் பிச்சையிடாமல் போய்விடுவார்கள். அந்த அச்சத்துக்கு உரிய காரணம் எதுவோ அதை மாற்ற வேண்டும். நாகப்பாம்பைக் கழற்றிவிட்டுச் செல்ல வேண்டும் என்கிறார் அம்மையார்.

நீஉலகம் எல்லாம் இரப்பினும், நின்னுடைய
தீய அரவுஒழியச் செல்கண்டாய்;— தூய
மடவரலார் வந்து பலிஇடார், அஞ்சி,
விடஅரவம் மேல்ஆட மிக்கு.

இறைவனே, நீ உலகம் எல்லாம் திரிந்து பிச்சை யெடுத்தாலும் (குற்றம் இல்லை); நீ ஆபரணமாகப் பூண்டிருக்கும் நின்னுடைய தீங்கைப் பயக்கும் கெட்ட பாம்பு ஒழிந்து நிற்க, போவாயாக; (ஏனென்றால்) உனக்குப் பிச்சையிடும் தூய மனம் உள்ள பெண்கள் விடம் பொருந்திய பாம்பு உன் மேலே மிகவும் ஆட, அதைக் கண்டு அஞ்சி உன் அருகில் வந்து பிச்சை போட மாட்டார்கள்.

இரப்பினும் என்பதில் உள்ள உம்மை இழிவு சிறப்பும்மை; இரப்பது கூடாது என்ற குறிப்பை உடையது. தீயஅரவு - மரணத்தை உண்டாக்கும் பாம்பு. ஒழிய-விட்டு நிற்க; அது இல்லாமல் என்ற படி. தூய-உள்ளம் தூய மடவரலார்-மடத்தையுடைய பெண்கள். பலி-பிச்சை. விட அரவம் மிக்கு மேல் ஆட மடவரலார் அஞ்சி, வந்து பலியிடார் என்று கூட்டிப் பொருள் செய்க.]

இறைவனிடம் நெருங்கி உரிமையோடு பாடுகிறார் அம்மையார்.

இது அற்புதத் திருவந்தாதியில் 57-ஆவது பாட்டு.



ஒரு மனிதன் இறந்த பின்னர்க் கீழான பிறப்பு எடுக்க நேர்ந்தால் மறுமுறை மனிதப்பிறவி அமைவது மிகவும் கடினம். ஆகவே, நாம் இங்கு வாழும் ஒவ்வொரு நொடியும் நேர்மையான ஆன்மிக நாட்டமுள்ள வாழ்க்கை வாழ வேண்டும்.

—மகாவீரர்

உழைத்து உண்ணாமல் வெறுமனே பொழுது போக்கும் சோம்பேறியைத் தேவர்கள் விரும்புவதில்லை. உழைப்பே கடவுள். அல்லும் பகலும் நற்செயல்களை விளைவித்துக் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் நலம் செய்பவர்களையே கடவுளர் நாடி வருவர். வாழ்வைத் தவமாக்கித் தொழில் செய்பவர்களுக்கே கடவுளர் நண்பராவர். அவர்களுக்கு உதவவே தெய்வங்கள் ஓடி வரும்.

—ரிக் வேதம், 4-13, 8-2.

சுவாமி பிரேமானந்தரின் போதனைகள்

(ஒரு பள்ளி மாணவனுக்கு) உன் மனதில் பதற்றத்திற்கும் திரிசலுக்கும் இடம் கொடுக்காதே. உன் முழுக் கவனத்தையும் படிப்பிற்கே கொடு. அது உனக்கு மிகுந்த நன்மையைத் தரும். தீயவர் தொடர்பை ஒழிக்க வேண்டும். உன் உடலையும் உள்ளத்தையும் சிறிதும் அழுக்கில்லாமல் வைத்துக் கொள். பயப்படாதே. உனக்கு வலிமையையும் பக்தியையும் பகவான் கொடுத்தருள்வார்.

(ஒரு துறவிக்கு) சிரத்தையும் பக்தியுமே வாழ்க்கையில் மிகப் பெரிய பொக்கிஷங்கள். பொருளுடைமை ஒருவனுக்கு எப்போதாவது அழிவை விளைவிக்கக் கூடும்.

பகவான்தான் 'கர்த்தா' என்பதை எப்போதும் நினைவில் வைத்துக்கொள். 'நான் கர்த்தா' என்ற எண்ணம் எப்போது உன் மனதில் எழுகிறதோ அப்போதே பகவான் உன்னை விட்டு விலகிவிடுவார். அதன் பிறகு நீ செய்யும் எல்லாக் காரியங்களும் வீணாகிவிடும். ஆகையால் நான் சொல்வது : துறவியே, கவனத்துடன் இரு. பழுக்காத அகங்காரம் உன் உள்ளத்தில் ஒருபோதும் புக வேண்டாம். இறைவனின் திருவருளால் அவனுடைய கையில் நீ ஒரு கருவியாக மட்டும் இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொள். அப்போதுதான் நீ உண்மையான 'கர்மயோகி' ஆவாய். பிறகு கருமம் உன்னைக் கட்டுப்படுத்தாது.

அறியாமை என்ற நோய் மிகவும் கொடியது. ஆகவே அதைத் தீர்க்க இறைவனாகிய ஒப்பற்ற உத்தம வைத்தியர் தேவை. அவரது பெயரைச் சொன்ன மாத்திரத்திலேயே நோய் விலகிவிடும். உன் முழு உள்ளத்தோடும் பகவானின் பெருமையைப் பாடு.

கடவுளை நம்பிக் காரியம்செய். அப்போது உனக்கு வெற்றி கிடைக்கும். மனிதர்களை நம்பினால் உனக்குத் தோல்விதான் ஏற்படும். உன் அந்தரங்கத்தில், கடவுள்தான் 'கர்த்தா', நீ அவர் கையிலுள்ள கருவி என்பதை உணர்ந்துவிட்டால் நீ எதற்கு அஞ்ச வேண்டும்?

உனக்குப் பகவான் வலிமையையும் பக்தியையும் தர வேண்டும் என்று நான் பிரார்த்தித்துக் கொள்கிறேன். பகவானை வழிபடுகிறவர்களுக்குப் பயம் ஏது? லௌகிகத்தில் மூழ்கிக் கிடப்பவர்கள்தாம் பயத்தால் வாட்டப்படுகிறவர்கள்.

(ஒரு பெண் பக்தைக்கு) ஸ்ரீராமகிருஷ்ணரை உலக குரு என்று நாங்கள் நம்புகிறோம். பகவத் கிருபையால் ஸ்ரீராமகிருஷ்ணருடைய தியானத்தில் நீ ஈடுபட்டால் உன் குருபக்தியும் வளரும். உலகைச் சிருஷ்டித்த பகவான்தான் உண்மையான குரு. அவர்தாம் நமது இலட்சியம்.

தங்களுடைய உடல் மனம் இதயம் ஆகிய எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்யக் கூடியவர்கள் உலகில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அந்த அர்ப்பணத்தைக் கடவுளைத் தவிர வேறு யார்தாம் ஏற்றுக்கொள்ள முடியும்? தங்களுடைய உடலையும் உள்ளத்தையும் முற்றிலும் அடக்கியாளக்கூடிய மனிதர்கள்தாம் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அப்படிப்பட்ட அடக்கம் உள்ளவர்கள் சாதாரண மானவர் அல்லர். ஆனால் உடற் பற்றுடையவர்கள், உடலைப் பற்றியே சிந்திப்பவர்கள், இன்ப துன்பங்களுக்கு ஆளானவர்கள், 'நான், எனது' என்ற அபிமானம் உள்ளவர்கள் சரண் புகுபவர்களை ஏற்றுக் கொள்ளவோ அவர்களைக் கைதூக்கி விடவோ சக்தியுடையவர்களாக ஆகமாட்டார்கள். உள்ளத்தையும் இதயத்தையும் அர்ப்பணம் செய்வதோ அல்லது அந்த அர்ப்பணத்தை ஏற்றுக் கொள்வதோ அவ்வளவு சுலபமாக இருந்தால் இந்த உலகின் துன்பங்களும் கவலைகளும் எப்போதோ மறைந்து போயிருக்கும். அப்போது பூவுலகு வானுலகமாக மாறிவிடும்.

உண்மையில் நீ உன் மனம் இதயம் எல்லாவற்றையும் முழு அளவில் கடவுளுக்கு அர்ப்பித்துவிட்டாயானால் உனக்குக் கடமை ஏதும் இல்லை; அப்போது நீ நீயாக இல்லை. உனக்கு 'உன்னுடையது' என்று சொல்லக் கூடியதும் எதுவுமில்லை. ஆனால், உனக்கு அகங்காரம் இன்னும் இருந்தால், 'நான் கர்த்தா' என்ற எண்ணம் இருந்தால், நீ உன்னைக் கடவுளுக்கு உண்மையில் அர்ப்பணம் செய்தவனாக ஆகமாட்டாய்; அவரும் உன் அர்ப்பணத்தை ஏற்கவில்லை.

உன் குரு சாஸ்திரத்தை மேற்கோள் காட்டியிருக்கிறார். ஆன்மிகச் சாதனம் பழகாத எவரும் சாஸ்திரத்தின் ரகசியத்தை அறிய இயலாது.

இடைவிடாமல் சாதனங்களைப் பழகிக்கொண்டே இரு. ஸ்ரீராமகிருஷ்ணரைத் தியானிப்பவர் உலகை வெல்வர்.

(ஒரு பக்தருக்கு) நீண்ட காலம் ஆத்ம சாதனங்களைப் பழகியவர்களுக்குக்கூடத் தியானகாலத்தில் மனம் சிதறக்கூடும். உன்னுடைய விஷயம் மட்டும் அப்படியன்று. ஆகையால் உன் மனதைக் கட்டிக் காத்துப் பகவானிடம் பிரார்த்தனை செய்துகொண்டே இருக்க வேண்டும். மனது சஞ்சலமடைந்தாலும், கவலைகள் மனதில் எழுந்தாலும், அந்த நிலையிலுங்கூட உன் இஷ்டதெய்வத்தின் சாந்நித்தியத்தைக் காண முயற்சி செய்.

தைரியத்தை ஒருபோதும் இழந்துவிடாதே. இடைவிடாமல் சாதனைகளைப் பழகு. இறைவன் திருவருளால் உன் மனம் ஒருநிலைப்படும்போது சமாதி கிட்டும்.

கடவுளுக்கும் குருவுக்கும் வேற்றுமை காணாதே. இதயக் கமலத்தின் வடிவத்தைப் பற்றிக் கவலைப் படாதே. உள்ளத்தில் குருவையோ இஷ்டதெய்வத்தையோ உன் மனதின் விருப்பப்படி நன்றாகத் தியானம் செய். இஷ்டதெய்வமே குரு என்று நம்பு. குருவிடமும் தெய்வத்திடமும் முறைபிறழாத பக்தி வளரட்டும்.

உள்ளத்தில் எழும் பலவித உணர்ச்சிகளை அடக்குவதும், உடலையும் மனதையும் பரிசுத்தமாக வைத்திருப்பதும், உண்மையைக் கைவிடாமலிருப்பதுமே பிரம்மசரியத்தின் அடையாளங்கள். அஞ்சாதே. ஸ்ரீராமகிருஷ்ணரிடம் பிரார்த்தனை செய். ஞானம் தானாக வரும்.

(ஒரு துறவிக்கு) ஸ்ரீராமகிருஷ்ணருடைய உபதேசங்களை நாளடைவில் உலகம் போற்றி ஏற்றுக்கொள்ளும். உண்மையான இன்பம் எது என்பதை மனிதன் அறிந்துகொள்வான். பகவான்தாம் நன்மை செய்பவர். அவருடைய திருநாமம் தீமைகளை விழுங்கிவிடும். சீவன் சிவன் ஆகிவிடுவான். அறியாதவன் அறிந்தவனாகிவிடுவான். பாவி பரமன் ஆகிவிடுவான். ஆண்டவன் பெயரால் உலகில் அமைதி நிலவும்.

(ஒரு பக்தருக்கு) உன் குறிக்கோளை மறந்தால் நீ அழிந்துபோவாய். ஆகையால் எப்போதும் இலட்சியத்தை உன் பார்வையில் வைத்துக்கொண்டு அதை அடையப் போராடிக்கொண்டே இரு.

சிலருக்கு நன்மை எது என்பதும் தீமை எது என்பதும் தெரிந்தாலுங்கூட அவர்கள் பாவச் செயல்களைச் செய்கிறார்கள். தெரிந்தே பாவச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். அறியாமையால் பாவம் செய்பவர்களைவிட அவர்கள் மிகவும் தாழ்ந்தவர்கள். அறியாதவர்களை ஞானம் புகட்டித் திருத்த முடியும். அறிந்தும் பாவத்திலிருந்து விலக வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவனுக்கு எந்தப் போதனையும் பயன்படாது.

இறைவன் எல்லாரிடமும் இருக்கிறார். அவர் உன் உள்ளத்தில் உறைகிறார். அவரிடம் பிரார்த்தனை செய், அவர் முன் அழு, உனக்கு உற்சாகமும் வலிமையும் வருவதைக் காண்பாய். உன் மனம் தானாகவே அடங்கிவிடும். நல்ல எண்ணங்களால் தான் தீய எண்ணங்களை ஓட்ட வேண்டும்.

✕ ✕ ✕ ✕ ✕

இறைவன் என் பக்கத்தில் இருக்கிறாரா என்பதுபற்றி நான் கவலையுறுவதில்லை; ஆனால் நான் இறைவன் பக்கத்தில் இருக்கிறேனா என்பதுபற்றித்தான் கவலையுறுகிறேன்.

— ஆப்ரகாம் லிங்கன்

தீயவர்களுடைய செல்வமும் புகழும் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் துன்பத்தைக் கொடுக்கும்; ஆனால் நல்லவர்களுக்கு நேரும் கஷ்டங்களுங்கூட அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

—எமர்சன்

காக்கும் கடவுள் கந்தனன்றோ!

'குகப்ரியை'



'சிவனுக்குள்ளே சிவமணம் பூத்தது' என்று சுலபமாகச் சொன்னார் யோகி திருமூலர். அதைவிட எளிமையாக, தமிழ்மணம் வீசும் இடங்களிலெல்லாம் முருகனது புகழ்மணம் வீசுவதைத் தமிழ் வாழுமிடமெங்கும் நாம் கேட்கிறோம், நுகர்கிறோம், சுவைக்கிறோம். எல்லையற்ற அருளின் வடிவான, புகழின் வடிவான அந்தக் குழந்தைக் குமரனைப் பாடாத பாவலர் எவர்?


நீலத்திரைக்கடலோரம்; அங்கே அன்னை கோலக் குமரி மாலையும் கையுமாய், நாட்டையே காப்பவளாய், முனைக்கு ஓர் அணிகலமாகத் தென் திசை இலங்கை நோக்கி அருள்செய்து நிற்கிறாள். மூன்று கடல்களும் சந்திக்கும் அந்த அழகிய காட்சியைப் பாடாதவர் யார்? அங்கே ஒரு புறம் சந்திரோதயம், மறு புறம் கதிரவன் குடதிசையிலே மறைதல்—இந்த அழகிய காட்சியை அருள் ததும்பும் முகத்தோடு பார்த்துக் களிக்கிறாளாம் அன்னை. தாயின் உறைவிடத்தில் அருகே குழந்தை இருப்பது இயல்பே அல்லவா? அங்கே அந்த அழகிய கடற்கரையின் மற்றொரு பகுதியிலே திருச்சீரலைவாய் என்று பெயர்பெற்ற படைவீட்டிலே ஐயன் அற்புதக் கோலத்தில் காட்சி தருகிறான். அந்தத் தலத்தைத் திருச்செந்தூர் என்று இன்று சொல்வர். அங்குள்ள அழகிய பெரிய கோபுரம் வாவென்று அழைக்கும். உள்ளே 'ஷண்முகார்ச்சனை' நடக்கிறது. செந்திலாண்டவனது புகழை, புகழை மட்டுமா, அருளையும் வாரி வாரி வழங்குகிறது கடற்காற்று.

அந்தத் தெய்விகச் சூழ்நிலையிலே பாடிப் பாடிப் பரவசமடைந்த மெய்யடியார்கள்தாம் எத்தனை எத்தனையோ? குமரகுருபரரை நமக்குத் தெரியும். இவரது முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடிய வாய் தேனூறும். ஞானத் தமிழகத்தின் எல்லை வட வேங்கடமன்று, இமயம்தான் என்று நிலைநாட்டியவர் குமரகுருபரர். பிறவி ஊமையான இவரைப் பேச வைத்த பெருமை செந்திலாண்டவனுக்கு அல்லவா உரியது? பேச்சு மட்டுமா? கவிமாரி பொழிந்து வெற்றிவாகை சூடியது எவரது அருள்? மீனாக்ஷியே குழந்தைவடிவாய் வந்து இவர் பாடிய பிள்ளைத்தமிழைக் கேட்டு மெய்ம்மறந்து முத்து மாலையை அரசன் திருமலை மன்னனிடமிருந்து வாங்கி இவர் கழுத்திலே இடுகிறாள். குமரகுருபரரின் வாழ்க்கையில் செந்தூரனது அருள் பேச வைத்ததோடு புகழையும் வெற்றியையும் தந்தது.

இவ்வளவு பெருமைக்கும் அருளுக்கும் உறைவிடமான முருகனைப் பிள்ளைத்தமிழால் பாடிப் பாடி மெய்சிலிர்க்கிறார் பகழிக்கூத்தர் என்ற வீர வைஷ்ணவர். சூலை கொடுத்து இவரை ஆட்கொண்டான் முருகன். அழகிய வீதி. சிறு பெண்குழந்தைகள் மணல்வீடு கட்டி விளையாடுகிற அருமையான காட்சி; இன்று கிராமங்களில் காண முடியாதது; கற்பனையால் மட்டுமே காணக்கூடியதொரு காட்சி. மணலைக் கொண்டு மிகப் பொறுமையோடு கட்டிய சிற்றில். ஒவ்வொரு கோணத்திலும் சென்று நின்று நின்று அழகு பார்த்துப் பார்த்துத் திருத்திக் கட்டுகின்றனர். ஆனால் என்ன?

மெல்லிய குறுநகை ஒலி. காலின் சதங்கை தண்டையணி வெண்டயம் ஒலிக்கிறது. ஒரே ஒரு நொடிதான்! 'அருளின் வேகமா? புயலின் வேகமா?' என்னும்படி ஓட்டமாய் ஓடி வருகிறான் பாலவேலாயுதன். அவ்வளவுதான்! 'குயவனுக்கொரு கடிசூனை தடியனுக்கு ஒருநொடி வேலை' என்பார்களே, அது

போலச் சிற்றில் சிதைந்து தூள்பறக்கிறது. அந்தச் சின்னஞ்சிறு கிளிகள் அவனது அழகிலே ஈடு பட்டுச் சற்றே திகைக்கின்றனர். புன்னகையும் பொன்நகையும், முகத்தில் குமிழியிட்டுப் பொங்கும் வெற்றிச் சிரிப்பும் விஷமச் சிரிப்பும் அவர்களது நெஞ்சைக் குளிர்விக்கின்றன. மிகுந்த பணிவுடன் இறைஞ்சுகின்றனர்.



பொய்யா வளமை தரும் பொருநைத் துறையில், 'தமிழ் கண்டதோர் வையை பொருநை நதி' என்று புகழ்பெற்ற தாமிரவருணியில் அல்லவோ உன்னை நீராட்டினர் உன் அன்னையர்? அது மட்டுமா? எத்தனை வகையான அணிகலன்கள் உன் மார்பிலும் தோளிலும்! சிரத்திலே சூடாமணி, நெற்றியிலே சுட்டி. காலினில் சிலம்பு கொஞ்ச உன் அன்னையர் உன்னை அழகு பார்க்கின்றனர். அது சரி. ஆனால் உன்னை அழகு பார்த்ததோடு அடக்கி யல்லவா வைத்துக்கொள்ள வேண்டும்? இப்படி விளையாட விட்டுவிட்டார்களே! அவர்களை அல்லவா நோக வேண்டும்? நாங்கள் எத்தனையோ கஷ்டப்பட்டு இழைத்த சிற்றில். இதை நொடியிலே துவைத்துத் தூளாக்கிவிட்டாயே! காக்க வேண்டிய நீயே அழித்தால் எப்படி?—என்று படபடக்கிறது அவர்களின் நெஞ்சம். கவிதை தவழ்ந்து வரு கிறது :—

நாங்கள் கையால் இழைத்த சிற்றிலை—நின்
காலால் அழிக்கக் கடன் அல காண்!
ஐயா! உனது வழியடிமை அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத்து எறியும் திருச்செந்தூர் அரசே!
சிற்றில் அழியேலே!

என்று கெஞ்சுகின்றனர். முருகன் என்ன சொல்லு வான்? கலைத்துவிட்டான். குற்றம் அவனுடையது. வெட்கத்தினால் முகம் சிவக்கிறது. 'செம்மான் செவ்வேள்' என்று சிவந்த அவனது நிறம் மேலும் சிவக்கிறது. ஆனால் முகத்திலே அந்த விளை யாட்டுத்தனத்தின் விஷமப் புன்னகை மட்டும் மறையவேயில்லை அவர்கள் முகத்திலே அச்சம். அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும். ஒரு கால் நினைக்கில் இருகாலும் தோன்றும். அந்தச் சிறுமிகள் சிற்றில் சிதைத்ததையும் மறந்து, அவனது பேரழகிலே, ஒப்புயர்வற்ற அந்த ரூப சௌந்தர்யத்திலே மெய்ம்மறந்து வைத்த கண் வாங்காமல் நிற்கின்றனர். அவனது அழகிய மலரடி களும் ஆறுமுகங்களின் புன்சிரிப்பும் கண்டபின் வேறு எதுதான் வேண்டும்? இதைக்காட்டிலும் ஆனந்தம் வேறு ஏது? பகழிக்கூத்தரின் பிள்ளைத் தமிழில் 'முத்தம் தருகவே' என்ற பகுதி அக்ஷர லக்ஷம் பெறும்.

அருள் பெற்ற மெய்யடியார்கள் பலருள் திருவருட்பிரகாச வள்ளலார் முன்னணியிலே நிற் கிறார். இவரைப் 'பழமையையும் புதுமையையும் இணைக்கும் பொற்பாலம்' என்பர் பக்தர்கள். வள்ள லாரது அருட்பா உலகப் புகழ் பெற்றது. தெய்வ பக்தியைப் பரப்பியதோடு, கொல்லாமையை மிகத் தீவிரமாகப் பிரசாரம் செய்தவர். இவரது நெருங் கிய நண்பர்கூட இவரது உடலை முடியக் கண்ட தில்லை. பொன்மேனி பெற்றிருந்தார். ஆகவேதான் எப்போதும் போர்த்தியபடியே காட்சி தந்தார் என்று செவிவழிச் செய்தி சொல்லும். தில்லை நடராஜப் பெருமானைப் பாடிய பாடல்களில் இறைவனை மருந்து என்று குறிக்கிறார். 'அருள் வடி வான மருந்து, பொன்மேனி தந்த மருந்து' என்றும் சொல்லுகிறார். வடலூரிலே சமரச சன்மார்க்க சபையிலே அகண்ட ஜோதி ஒளிர்கிறது. இப்போதும் தைப் பூசத்திலே லட்சக்கணக்கான மக்கள் சென்று வழிபடுகின்றனர். இவர் முதல் முதலில் அருள் பெற்றது சென்னை கந்தகோட்டம் என்னும் கந்தசாமி கோயிலில்.

வள்ளலார் பேசுகிறார். அருணகிரியாரை வய லூரிலே வந்து பாடு என்று பணித்த முருகன் இவ ருக்குக் கந்தகோட்டத்திலே அருள்தருகிறான். "ஏ முருகா! கந்தா! குமரா! கார்த்திகேயா! ஷண்முகா! உன்னை எத்தனை சொல்லி அழைத்தாலும் என் மனம் நிறைவு பெறவில்லையே! அருகிலேயே கிடந்து பணி செய்ய வேண்டும். ஒலிமாலைகளை உன் திரு வடிகளிலே சூட்ட அருள் தா!" என்று உளங் கனிந்து புலம்புகிறார். நக்கீரர், சிதம்பரஸ்வாமிகள், அருணகிரியார் இவர்களது கவிதைகள் திருவருட் பிரகாச வள்ளலாரின் நெஞ்சகத்தே எழுகின்றன. சுவாமிமலையிலே அருணகிரியாருக்குக் காட்சி தந்தது நினைவுக்கு வருகிறது. அவரது கவியையே தாமும் பாடுகிறார் :—

நான் வேறெனாதிருக்க, நீ வேறெனாதிருக்க,
நேராக வாழ்வதற்குன் அருள் கூறாய்!

நீ வேறு எனுதிருக்க, நான் வேறு எனுதிருக்க, இரண்டறக் கலக்கும் அந்த 'அத்வைத தத்துவம்' அவர் மனதில் நிழலாடுகிறது. பாடிப் பாடிப் பரவச மாகிறது அவரது இதயம். கேட்கிருர்: "கந்தா! உன்னைத் தொழுகிறவர்களுக்கு எதுதான் கிட்டாது? இல்லை என்ற கொடுமை உலகில் இல்லையாக வைப் பாய். எனக்கு நீ அருள்வாய் என்று தெரியும். ஒனக்கு எதுவேண்டும் தெரியுமா?

ஒருமையுடன் நினது மலரடி நினைக்கின்ற உத்தமர்தம்
உறவு வேண்டும்;
உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் கயவர் கூட்டம்தானே மலிந்து கிடக்கிறது? உலகம் தவிக்கிறது. அத்தகைய அசுரசக்திகளிலிருந்து என்னை மீட்க வேண்டும். அதற்கு உரிய மதி வேண்டும்; நின் கருணைநிதி வேண்டும்—அது ஒன்றுதான் வேண்டுகிறேன். உன் அருள் கிட்டி விட்டால் வேறு குறைதான் ஏது? நீ அருட்கடல் அல்லவா? 'சீர்திகழ் தோகைமயில் மீதே ஒரு செஞ் சுடர் தோன்றும் திறம் போல' நீ கடற்கரையிலே, கடலே மயிலாகவும், கதிரவனே நியாகவும் காட்சி தரவில்லையா?

மாமயில் ஏறி வருவாண்டி அன்பர்
வாழ்த்த வரங்கள் தருவாண்டி
தீமை யிலாத புகழாண்டி
அவன் கீர்த்தியைப் பாடி அடியுங்கடி

என்று மகளிருக்குக் கும்மி கற்பிக்கும்படி என்னைப் பணிக்கவில்லையா?" என்று பேசுகிருர். பாடப் பணித் தாய்; ஒலிமாலை சூட்டி மகிழ்ந்தேன். உன் அடியா ருக்கு என்ன குறை? எல்லாமே உண்டு என்று வள்ள லார் சண்முகத்தெய்வமணிமாலையிலே பாடுகிருர்.

மாங்காடு காமாட்சி உமையே!

சு. கிருஷ்ணன்



புன்சிரிப் பொன்றுநீ சிரித்தது மின்னலாய்ப்
போயிற்று வானிலம்மா!
பெருஞ்சிரிப் பாகநீ சிரித்தது பூமியில்
பூகம்ப மானதம்மா!
அன்புடன் கனிவாகச் சிரித்ததால் பயிரினம்
அழகாக வளர்ந்ததம்மா!
அதுவிட்டுக் கடுமையாய்ச் சிரித்ததால் சிலநிலம்
பாலையாய் உலர்ந்ததம்மா!
நின்சிரிப் பதனிலே சப்த ஸ்வரங்களின்
நிரவலும் காணுதம்மா!
நீலக் கடல்களின் அலையோசை உன்னுடைய
நகைப்பாகத் தோணுதம்மா!
என்சிரிப் பென்றைக்குக் காண்பதோ, மனதிலே
எனைப்பற்றித் திட்டமேதோ?
மாங்காடு தனிலென்றும் நீங்காமல் உறைகின்ற
மங்கை காமாட்சி உமையே!

பரமார்த்தப் பிரசங்கம்

சுவாமி விரஜானந்தர்

உலக வாழ்க்கையில் ஓர் உண்மையைக் காண லாம். அதாவது, பிராணிகள் மெல்ல மெல்லச் சுவாசிப்பதற்கு ஏற்ப நீண்ட காலம் அவை உயிர் வாழ்கின்றன. அடுத்தடுத்து மிகவும் வேகவேக மாகச் சுவாசிக்கும் பிராணிகள் அற்பாயுள் படைத் திருக்கின்றன.

பண்டைக் காலத்தில் மனிதனின் ஆயுள் சாதா ரணமாக நூறு ஆண்டுகள் என்று இருந்தது. ஏனென்றால் மக்கள் அப்போது இயற்கையுடன் இயைந்து வாழ்ந்தார்கள். வேதங்கள், 'மனிதனின் ஆயுட்காலம் நூறு ஆண்டுகள் (சதாயுர் வை புருஷ:)' என்று கூறியுள்ளன.

ஸ்வரோதய யோகசாஸ்திரம் பின்வருமாறு கூறு கிறது:—

பிராணி	ஒரு நிமிடத்திற்கு விடப்படும் மூச்சுக் காற்றின் எண்ணிக்கை	ஆயுட்காலம்
மனிதன் (பண்டைக் காலத்தில்)	12—13 தடவை*	100 ஆண்டுகள்
யானை	11—12 தடவை	100 ஆண்டுகள்
பாம்பு	7—8 தடவை	120 ஆண்டுகள்
ஆமை	4—5 தடவை	150—155 ஆண்டுகள்
குரங்கு	31—32 தடவை	20—21 ஆண்டுகள்
முயல்	38—39 தடவை	8 ஆண்டுகள்

* * *

மிகுந்த வேகத்துடன் மூச்சுக் காற்றை வெளியே விடுவதற்குச் சாஸ்திரங்கள் தடை விதிக்கின்றன. யோகசாஸ்திரங்கள் சொல்வது போலவே ஒருவன் மூச்சுவிட வேண்டும். உள்ளங்கையில் வைக்கப் பட்ட நுண்ணிய அரிசிமாவுகூடப் பறந்து போகாத வகையில் மிகவும் மெதுவாகவே வெளிமூச்சு விட வேண்டும் என்று யோகசாஸ்திரங்கள் கூறுகின்றன.

* * *

சில சாதகர்கள் தங்களுடைய ஆத்மசாதனத் தின் ஆரம்ப காலத்திலேயே சாஸ்திரங்கள் விதிக்கும் போதனைகளைப் பின்பற்றாமலும், ஞான சாதனங்களை முறையாகப் பழகாமலும், மனதில் புதைந்துள்ள சிந்தனைகளையெல்லாம் காலி செய்து சூனியமாக்க முயல்கிறார்கள்; அவர்கள் இவ்விதம் செய்வதனால் நிர்பீஜம் அல்லது நிர்விகல்ப சமாதி (சுத்த சைதன்யத்தில் பரிபூரணமாக இலய மடைதல்) எனப்படும் மிக உயர்ந்த நிலையை அடை வதற்கு, மனமானது பற்றியிருப்பதற்கு எந்த ஆதா ரமும் அடியோடு இல்லாமல் போகும்படி செய்ய முயலுவதாக நினைக்கிறார்கள்; இத்தகையவர்கள் தங்களைத் தமோகுணத்தின் நிலைக்கே தாழ்த்திக் கொண்டுவிடுகிறார்கள். அதாவது அவர்கள் தங்களை ஜடப் பிண்டமாகவும் மனஉறுதி இல்லாதவர்களா கவும் செய்துகொண்டு விடுகிறார்கள். அவர்களின் மூளை காலியாகிவிடுகிறது. அது காரணமாகச் சூட்சும மான ஆன்மிக உண்மைகளைக் கிரகிக்கும் சக்தி அற்றவர்களாக அவர்கள் ஆகிவிடுகின்றனர்.

• • •

* இக் காலத்தில் மனிதனின் மூச்சுக் காற்று நிமிஷத்திற்கு 15—16 தடவை ஆகும். இதுவே காரணமாக மக்கள் அற்ப ஆயுள் படைத்திருக்கின்றனர்.

சிவ சம்ஹிதை கூறுவதாவது: யோகத்தில் சித்தி பெறுவதற்கு முதல் லட்சணம், 'நான் ஆன்மிக வாழ்க்கையில் நிச்சயம் வெற்றி அடைவேன்' என்ற உறுதியான நம்பிக்கையே ஆகும். இரண்டாவது இலட்சணம், சிரத்தையும் பக்தியும் கூடிய சாதனைகள்; மூன்ருவது இலட்சணம், குருவைப் பூஜிப்பது; நான்காவது இலட்சணம், சமத்துவ நிலையில் (கலங்காத நிலையில்) இருப்பது; ஐந்தாவது இலட்சணம், புலன்களை அடக்குவது; ஆருவது இலட்சணம், கூடுதலும் குறைவும் இன்றி மிதமாக உணவு கொள்வது. இவற்றுக்கும் மேலே ஏழாவது இலட்சணம் என்று எதுவும் இல்லை. அதாவது இந்த ஆறு நிபந்தனைகளும் சரியாக நிறைவேற்றப் பட்டுவிட்டால் வேறு எதுவும் அவசியமில்லை. வெற்றி நிச்சயமாகக் கிடைத்துவிடும். விதிவிலக்கு இன்றி, முக்தியை நாடும் எல்லா முமுட்சுக்களுக்கும் இந்த நிபந்தனைகள் பொருந்துகின்றன.

* * *

மனதை அடக்குவது போன்ற ஒரு கடினமான காரியம் உலகில் வேறு எதுவும் இல்லை. ஸ்ரீராம பிரான் ஆஞ்சனேயரிடம் கூறியதாவது: "ஏழு சமுத்திரங்களையும் ஒருவன் சுலபமாக நீந்திக் கடந்துவிடலாம்; பிரபஞ்சத்தில் உள்ள காற்று முழுவதையும் உறிஞ்சிவிடலாம்; மலையைப் பந்தாக விளையாடிவிடலாம்; ஆனல் இவை எல்லாவற்றையும்விட மிகக் கடினமான காரியம், சஞ்சலம் மிகுந்த மனதை அடக்கி வசப்படுத்துவதாகும்."

இவ்விதம் மனதை வசப்படுத்துவது என்பது கடினமாக இருந்தாலுங்கூட, பயப்படுவதற்கோ மனம் சோர்ந்து போவதற்கோ காரணம் ஒன்றும் இல்லை. வீரனுகிய ஆத்மசாதகன் ஒருவன் இறைவனைச் சரணடைந்து எல்லையற்ற பெருமுயற்சியோடும் திடசங்கல்பத்தோடும் மனப்பூர்வமாக ஆத்மசாதனங்களைப் பழகும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருவானுனல், பகவத் கிருபையால் அவன், இயலாதது என்று தோன்றும் காரியத்தையும் செய்து சாதித்துவிட முடியும்.

* * *

சுவாமி விவேகானந்தர் சம்ஸ்கிருதத்தில் ஒரு கவிதையை எழுதி, அதை அவர் அமெரிக்காவிலிருந்து எழுதிய ஒரு கடிதத்தில் வைத்து, ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் இருந்த தம்முடைய சகோதரச் சீடர்களுக்கு அனுப்பி வைத்தார். அந்தக் கவிதையில் அடங்கிய இரண்டு அடிகளின் கருத்து, கீழே தரப்படுகிறது :

"நட்சத்திரங்களை நாங்கள் மென்று தின்று விடுவோம்; எங்கள் வலிமையால் மூன்று உலகங்களையும் வேரோடு பெயர்த்து எறிந்துவிடுவோம்.

"நாங்கள் யார் என்று உனக்குத் தெரியாதா என்ன? நாங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் தாசர்கள் ஆவோம்!"

இத்தகைய அளவுகடந்த தன்னம்பிக்கையாலும் குருபக்தியாலும் நடக்கவே இயலாத காரியங்களும் நடந்தேறிவிடுகின்றன. சுவாமி விவேகானந்தரிடம் இந்த இரண்டு பண்புகளும் இருந்ததனுல் அவர் உலகையே வென்ருர். இயேசு கிறிஸ்துவும், "கடுகளவு நம்பிக்கை உங்களிடம் இருந்து நீங்கள் இந்த மலையைப் பார்த்து, 'மலையே! இங்கிருந்து பெயர்ந்து அங்கே போ!' என்று கூறுவீர்களானுல் அந்த மலை அப்படியே செய்யும்; நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் உங்களால் இயலாத காரியம் என்று எதுவுமே இருக்காது" என்று கூறியிருக்கிருர்.

நமது பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பலவேறு ஆன்மிக அனுபவங்களும் தெய்வ தரிசனங்களும் பெற்ற பிறகு, அவை உண்மைதாமா என்பதைச் சோதித்து உறுதி செய்துகொள்ளுவதற்காக அவர் ஜகன்மாதாவிடம், "தாயே, நான் பெற்ற இந்த ஆன்மிக அனுபூதிகளெல்லாம் உண்மையாக இருக்குமானுல், இதோ இருக்கும் இந்தப் பெரிய பாருங்கல் மூன்று முறை குதித்தெழ வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அவர் அப்படிச் சொன்னவுடனே அந்தப் பாருங்கல் அப்படியே மூன்று முறை குதித்தது என்று கேள்விப்பட்டிருக்கிருேம். இந்த விஷயங்களெல்லாம் பொருளற்ற வெறும் வார்த்தைகளா என்ன?

* * *

உண்மையாகவே உடலில் ஆறு தாமரைகள் இருக்கின்றனவா? இதைப்பற்றி சுவாமிஜியிடம் கேட்டபோது அவர் பின்வருமாறு பதில் கூறினுர்: "நமது குருதேவர், 'யோகிகள் விவரித்துள்ள தாமரைகள் மனித உடலில் ஸ்தூல அளவிலே உண்மையாகவே இல்லைதான்; ஆனல் யோகசக்தி காரணமாக அவை யோகிகளின் உடலில் உற்பத்தியாகி, அந்த யோகிகளின் ஞானக் கண்களுக்குப் புலனுகின்றன' என்று கூறுவது வழக்கம்."

* * *

ஏசுநாதரின் இந்திய விஜயம்

பேராசிரியர் டி. கே. நாராயணன், M.Sc.



உலகமளாவிய கிறிஸ்தவ சமய ஸ்தாபகரான ஏசுநாதரின் வாழ்க்கையில், அவர் தமது பன்னிரண்டாம் வயதிலிருந்து முப்பதாம் வயது வரையில் திடீரென்று எங்கோ மறைந்துவிட்டார் என்று கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர். அந்தப் பதினெட்டு வருஷ காலத்தில் ஏசுநாதர் எங்கே சென்ருர், என்ன செய்தார் என்பதுபற்றிப் பல நாட்டு அறிஞர்கள் பல வகையான ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றனர். அவர்களது ஆராய்ச்சிகளின் முடிவு ருசிகரமான பல தகவல்களை நமக்குத் தருகிறது. உலகின் ஆன்மிகப் பொக்கிஷமாம் நமது பாரதம் அவரை எங்ஙனம் ஈர்த்தது, அவர் இங்கே எங்கெல்லாம் சென்ருர், என்னவெல்லாம் பயின்ருர் என்பன பற்றிய சில தகவல்கள் இந்தக் கட்டுரையில் தரப்படுகின்றன.

டாக்டர் பால் பிரண்டன் என்ற பேரறிஞர் 'Rationalist' என்ற பத்திரிகையில் வெளியான தமது கட்டுரையில் கூறுகிருர் :—

"தமது பன்னிரண்டாம் வயதிலிருந்து முப்பதாம் வயதுவரை உள்ள காலத்தில் ஏசுநாதர் திடீரென்று மறைந்து போய்ப் பின்னர் மீண்டும் தமது நாட்டில் தோன்றினுர் என்று மக்கள் கருதுகிருர்கள்.

"உள்ளுணர்வின் உந்துதலினுல் அவர் தமது வீட்டை விட்டுப் புறப்பட்டு எகிப்துக்குச் சென்ருர். அங்கே அவர் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து வாழ்ந்தார். பலரிடம் கல்வியும் கற்ருர்.

"மத்தியதரைக் கடற்கரைப் பகுதியில் அலெக்ஸாண்டிரியாவிற்குத் தெற்கே சூயஸ் பகுதியில் அராபிய மற்றும் இந்திய (குறிப்பாகத் தென்னிந்திய)க் கப்பல்கள் அடிக்கடி வருவது வழக்கம். இந்தியாவிலிருந்து பட்டும் தானிய வகைகளும் எகிப்துக்கு ஏற்றுமதியான காலம் அது.

"இந்திய வியாபாரி ஒருவருடன் ஏசுநாதருக்குப் பழக்கம் ஏற்பட்டது. இந்தியாவிற்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் அவரிடம் மிகுந்திருந்ததனுல், அந்த வியாபாரியுடன் அவர் பிரயாணம் செய்து இந்தியாவின் தென்மேற்குக் கடற்கரையை அடைந்தார். அப்போதுதான் அவரது வாழ்க்கையில் மற்றெரு முக்கியமான அத்தியாயம் ஆரம்பமாயிற்று.

"பாரதத்தின் பலவேறு இடங்களுக்கும் ஏசுநாதர் சென்று, பிறகு காசியை அடைந்தார். அங்கு அறிஞர்கள் பலரிடமிருந்து அவர் தத்துவஞானத்தைப் பெற்ருர். அதன் பின் அவர் இமயமலைப் பகுதிக்குச் சென்று, குகையில் ஏகாந்தவாசம் செய்தார். ஆண்டுகள் பல கழிந்தன. சிறந்த யோகியாக விளங்க வேண்டும் என்ற தமது இலட்சியத்தை நிறைவுகூர்ந்து அவர் பாரதத்திலிருந்து புறப்பட்டுத் தம் நாட்டைச் சென்றடைந்தார்."

பாரதத்தில் ஏசு கிறிஸ்து பதினேழு ஆண்டுகள் தங்கி யோகம், ஞானம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ருர் என்பதற்கு ஆதாரபூர்வமான சான்றுகள் பல உள்ளன.

இந்தக் கால அளவைக் குறித்துப் 'பைபிள்' மௌனம் சாதிக்கிறது. ஆனுல் சில ஹிந்து, புத்த மத நூல்களில் அவர் இந்தியாவில் பதினேழு ஆண்டுகளைக் கழித்திருக்கிருர் என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன.

மிகப் பழையதொரு கையெழுத்துப் பிரதியான 'நாதநாமாவளி' என்ற நூலில் இதற்கான சான்று உள்ளது. அது தவிர, ஏசுநாதர் தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்னரும் பாரதத்திற்குத் திரும்பி வந்து, அங்கிருந்த யோகிகளுக்குப் பணிவிடைகள் செய்தார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து பிறப்பதற்குப் பல காலத்திற்கு முன்பே பாலஸ்தீனத்தில் ஹிந்து யோகிகளைப் போன்ற துறவியர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு எஸ்ஸின்கள் என்று பெயர். ஏசுவும் ஓர் எஸ்ஸினே. எனவே ஹிந்து யோகியைப் போலக் குகையில்

தனித்திருந்து தெய்வ அருளைப் பெற அவர் விழைந்ததில் அதிசயம் எதுவுமில்லை.

எஸ்ஸின் என்பது ஈசானி என்ற பதத்தின் மருவுதலாகும். 'ஈசன்' என்பது சிவனைக் குறிக்கும். எனவே எஸ்ஸின் என்பது 'ஈசனை வழிபடுபவர்' அல்லது 'சிவபக்தர்' என்று பொருள்படுகிறது. பாப்டிஸ்ட் ஜானும் ஓர் எஸ்ஸின் ஆவார்.

திபேத்தில் மார்பூர் என்ற இடத்திலுள்ள ஓர் ஆலயத்தில் இருக்கும் ஒரு பழைய சுவடியில், ஏசுநாதர் இந்தியாவுக்கு வந்தார் என்பதற்கான சான்று காணப்படுகிறது. இதன் ஒரு பிரதி பாரத-திபேத் எல்லையில் உள்ள ஹிமிஸ் ஆலயத்தில் இன்றும் உள்ளது. மார்பூரில் உள்ள மூலநூல் பாலி மொழியில் உள்ளது. ஹிமிஸ் ஆலயத்தில் உள்ளது அதன் திபெத்திய மொழிபெயர்ப்பாகும்.

அந்த மொழிபெயர்ப்பின் சுருக்கம் வருமாறு:—

"ஏசு தமது பதின்மூன்றாம் வயதை அடைந்தார். அவரது அறிவைக் கண்டு வியந்து பணக்காரர்கள் பலர் தங்கள் புத்திரிகளை அவருக்கு மணம்முடிக்க முன்வந்தனர். ஆனால் ஏசுவுக்கோ திருமணத்தில் கொஞ்சமும் நாட்டமில்லை. எனவே அதைத் தவிர்க்க வேண்டி அவர் தம் தந்தையின் வீட்டை விட்டு வெளிக் கிளம்பினார். தத்துவஞானத்தைப் பெற்று முக்தி அடைய அவர் விரும்பினார். எனவே வியாபாரிகள் சிலருடன் கிளம்பி அவர் தமது பதினான்காம் வயதில் பாரதத்தை வந்தடைந்தார். ஜைனர்கள் அவரைத் தங்களுடன் இருக்க வேண்டினர். ஆனால் அவர் அதற்கு மறுத்து விட்டார். பின்னர் அவர் பூரி ஜகன்னாதப் பட்டணத்திற்குச் சென்றார். அங்குள்ள அந்தணர்களின் சிஷ்யராகி, வேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்றார். பிறகு சுமார் ஐந்து வருடகாலம் ராஜகிருகம், காசி போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று, கடைசியில் கபிலவஸ்துவை அடைந்தார். அங்கிருந்த புத்தமதத் துறவியருடன் வாழ்ந்து ஆறு வருடகாலம் அவர் புத்தமத நூல்களைக் கற்றார். பின்பு அங்கிருந்து நேபாளம் இமாலயம் முதலிய பகுதிகளுக்குச் சென்று பாரசீகத்திற்குத் திரும்பினார். அப்போது அவருக்கு வயது இருபத்தொன்பது. முப்பதாம் வயதில் அவர் தமது சொந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்று, அங்கே கொடுமைப்படுத்தப் பட்ட தமது உற்றார் உறவினரிடையே ஆன்மிகப் பிரசாரத்தில் ஈடுபட்டார்."

இந்த நூலில் 14 அத்தியாயங்களும், 244 சுலோகங்களும் உள்ளன. ஸ்ரீராமகிருஷ்ண வேதாந்த சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி அபேதானந்தர் இந்த நூலைப் பார்த்திருக்கிறார். அதன் ஒரு பகுதியை மொழிபெயர்த்தும் உள்ளார். ஏசு சிலுவையில் அறையப்பட்ட நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு அந்த நூல் எழுதப்பட்டிருக்கலாம் என்று திபேத்திய லாமாக்கள் கருதுகிறார்கள். அந்த நூலில் ஏசு 'ஈச்' என்று அழைக்கப்பட்டிருக்கிறார். மொழியியல் வல்லுநர்கள் பாலஸ்தீனிய வார்த்தையான 'ஜீஸஸ்' எப்படி இந்திய 'ஈசன்' ஆயிற்று என்று கூறுவார்கள்.

வேதங்களை நன்கு கற்றறிந்த ஏசுநாதர் தம்மைக் 'கடவுளின் திருமகன்' (Son of God) என்று அழைத்ததில் வியப்பு எதுவுமில்லை. ஏனெனில் வேதத்தில்,

'ச்ருண்வந்து விச்வே அம்ருதஸ்ய புத்ரா:'

என்ற மந்திரம் நம் அனைவரையுமே 'அழியாத அமர புத்திரர்கள்' என்று அழைக்கிறது.



ஹிந்து சமயத்திற்கும் ஏசுநாதருக்கும் தொடர்பு உண்டு என்பதைக் கீழ்க்காணும் பவிஷ்யபுராண சுலோகம் விளக்குகிறது :—

யா மூர்த்திர் மே ஹ்ருதி ப்ராப்தா நித்யசுத்தசுபங்கரா |
ஈசாமாசீஷ இதி ச நாம மே ஸுப்ரதிஷ்டிதம் ||

"இதயத்தில் சர்வ மங்கள ரூபியான ஈசனின் தரிசனத்தைப் பெற்றபின் இவ்வுலகில் என் பெயர் 'ஈசாமாசீ' (Eesha the Messiah!) என்பதாக நிலை பெறும்" என்பது இதன் பொருள்.

'தாரிக் எல் ஆஸம்' என்ற அரேபியப் புத்தகத்தில் ஒரு குறிப்புக் காணப்படுகிறது. காஷ்மீர்-ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் 'ஈச தாலாப்' (ஈச குளம்) என்ற பெயருடைய குளம் உள்ளது. அந்த இடத்தில் சித்திரை மாதக் கடைசியில் மகத்தான

சிவபூஜை நடக்கும். அதையொட்டிப் பெரிய தொரு பொருட்காட்சியும் அங்கு நிகழும். ஒரு முறை இந்தக் குளத்திலிருந்து தண்ணீர் அருந்தி ஏசு கிறிஸ்து தமது தாகத்தைத் தணித்துக்கொண் டார் என்றும், அதையொட்டி அவரது சிஷ்யர்கள் அதன் ஞாபகார்த்தமாக அந்த நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.


தீவிரக் கிறிஸ்துவப் பேரறிஞரான ரேனன் என்பவர் ஏசுவைப் பற்றிய வாழ்க்கைச் சரித்திரத்தில், "புத்த மத நூல்களிலுள்ள கதைகளும் பைபிள் கதைகளும் முழுக்க முழுக்க ஒன்று போலவே இருக்கின்றன. இருந்தும் புத்தமதத்தின் பதிவு பின்னதில் இருந்தது என்பதை நிரூபிப்பது கடினம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கிறிஸ்தவ, புத்த சமயச் சடங்குகளுக்கிடையே இருந்த ஒற்றுமையைக் கண்டு அன்றைய அறிஞர் பலர் மிகவும் வியப்படைந்திருக்கின்றனர்.

டாக்டர் பெர்கூஸன் என்பவர் கி. மு. 78-ஆம் ஆண்டைச் சேர்ந்த கார்லி குகைக் கோயிலுக்கும் சர்ச்சுக்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் கண்டு அதிசயித்திருக்கிறார். அது போல் திபேத்திய லாமாக்களின் மடாலயங்களுக்கும் சர்ச்சுகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமை, திபேத்திய லாமாக்களுக்கும் பாதிரியார்களுக்கும் இடையேயுள்ள உடை ஒற்றுமை ஆகியவற்றைக் கண்டு பல கிறிஸ்தவ அறிஞர்கள் தங்களது வியப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் ஆராய்ந்த சில ஐரோப்பிய அறிஞர்கள், 'கிறிஸ்தவ மதம், புத்த மதத்தின் ஒரு நேரடிப் பிரிவே' என்ற முடிவுக்கு வந்திருக்கின்றனர். 'பாப்டிஸ்ட் ஜான் பௌத்தர்' என்பதும், 'ஜோஸிபியினுடைய கதை மறுபெயரிலுள்ள புத்தருடைய கதையே' என்பதும் நிரூபிக்கப்பெற்ற உண்மைகளாகும். புத்த மதமோ ஹிந்து மதத்தின் ஒரு பிரிவு. எனவே கிறிஸ்தவ மதம் அடிப்படையில் ஹிந்து மதத்தின் ஒரு பிரிவே என்று கூறினாலும் அது மிகையில்லை அல்லவா?

'உண்மை ஒன்று; உரைப்பது பல விதம்' என்கிறது வேதம். மிகப் புராதனமான நமது வேத மதமே உலகிலுள்ள அனைத்துச் சமயங்களுக்கும் தாய்மதம் என்பதை நினைவில் இருத்தி, 'நெறிகள் பல, குறி ஒன்று' என்ற உயர்ந்த இலட்சியத்தை எப்பொழுதும் நினைவில் கொள்வோமாக. ✿

சொர்க்கமும் நரகமும் எவை?



ஹக்குயின் என்ற புத்தஞானியிடம், புகழ்பெற்ற ஜப்பானிய வீரன் ஒருவன் சந்தேகம் ஒன்றைக் கேட்டான்: "குருவே, சொர்க்கம் என்றும், நரகம் என்றும் இருப்பது உண்மைதானா?"

ஹக்குயின் அந்த வீரனை நோக்கி, "நீ யார்? என்று கேட்டார். "நான் நமது மாண்புமிகு சக்கரவர்த்தியின் பாதுகாவலன்" என்று வீரன் தெரிவித்தான். "அட முட்டாளே, உன்னைப் பார்த்தால் பிச்சைக்காரன் போல அல்லவா தெரிகிறது! எந்த ராஜா உன்னை வீரன் என்று நினைத்துப் பாதுகாவலனாக வைத்துக் கொண்டான்?" என்றார் ஞானி.

வீரனுக்குக் கோபம் பொங்கியது. உடனே தன் உடைவாளை உருவினான். ஹக்குயின் கூறினார்: "ஓ! கத்தி வேறு வைத்திருக்கிறாயா? நான் பந்தயம் கட்டுகிறேன், என் தலையைக்கூட வெட்ட முடியாத அளவுக்கு அது மழுங்கியிருக்கும் என்று" என்றார்.

வீரனுக்கு மேலும் கோபம் பொங்கியது. உருவிய கத்தியுடன் ஹக்குயின் முன் வந்தான். அப்போது ஞானி கூறினார்: "இப்போது உனக்குப் பாதி பதில் கிடைத்துவிட்டது, நீ இப்போது நரகத்தின் கதவுகளைத் திறந்துவிட்டாய்!"

வீரன் சற்றுப் பின்வாங்கினான். உடைவாளை உறையில் செருகிவிட்டு மகானை வணங்கி நின்றான். ஹக்குயின் சொன்னார்: "இப்போது உன் கேள்வியின் மறுபாதிக்குப் பதில் கிடைத்துவிட்டது. நீ சொர்க்கத்தின் கதவுகளைத் திறந்துவிட்டாய்."

—சக்திதாசன்



ஸ்ரீராமர் செய்த சிவலிங்கப் பிரதிஷ்டை

'நரேந்திரன்'

ஸ்ரீராமபிரான் கடலைக் கடக்கப் பாலம் அமைப்பதற்கு முன்பு எல்லா வேலைகளும் இடையூறு ஏதுமின்றி நடைபெறுவதற்காக நளனை அழைத்து விக்கின விநாயகர், நவக் கிரகங்கள் ஆகியவர்களின் உருவச்சிலைகளை ஸ்தாபிக்கச் செய்தார். அதைச் செய்த பிறகு அவருக்குத் தம் பெயரில் ஒரு சிவலிங்கத்தைக் கடல் சங்கமத்தில் ஸ்தாபிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

அந்த எண்ணத்தை உடனே நிறைவேற்ற முற்பட்டார். அனுமனை அழைத்தார். "வாயுகுமாரா! ஒரு முகூர்த்த நேரத்திற்குள் நீ காசிக்குச் சென்று பகவான் சங்கரரிடம் கேட்டு ஒரு சிவலிங்கம் வாங்கிக்கொண்டு வா. ஆனால் ஒரு முகூர்த்த நேரத்திற்குள் வந்துவிட வேண்டும். ஜாக்கிரதை!" என்று பணித்தார்.

ஆஞ்சனேயர் சமீபத்தில் இலங்கையில் சீதை இருக்கும் செய்தியை அறிந்து வந்திருந்தார். அந்த வீரச் செயலைச் சாதித்த கர்வம் காரணமாக, 'இந்த ராமர் ஒரு முகூர்த்த நேரத்திற்குள் வந்துவிடு என்று என்னைப் பார்த்துச் சொல்கிறாரே! அது எனக்கு அவர் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?' என்று நினைத்துக்கொண்டே க்ஷணநேரத் திற்குள் காசியை அடைந்தார். சிவபெருமானைக் கண்டு வணங்கினார்.

சிவபெருமான் ஆஞ்சனேயரை நோக்கி, "வாயுமைந்தனே! நானும் சில கால மாகத் தெற்கே செல்ல வேண்டும் என்ற விருப்பத்தில்தான் இருக்கிறேன். ஏனென்றால் அகஸ்தியர் விந்தியமலையைத் தாழ்த்துவதற்காக இங்கிருந்து சென்றுவிட்டார். ஆனால் என்னைப் பிரிந்த வருத்தம் அவரை வாட்டுகிறது. அவர் இப்போதும் என்னையே எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார். இந்தா, இந்த இரண்டு சிவலிங்கங்களையும் எடுத்துச் செல். இவற்றில் ஒன்று ஸ்ரீராமபிரான் பெயரிலும், மற்றொன்று என் பெயரிலும் ஸ்தாபிக்கப் பெறும்" என்று கூறினார். இதையெல்லாம் கண்ட அனுமன் உள்ளத்தில் தம்மைப் பற்றிப் பெருமை கொண்டார். வெகு வேகமாகச் செல்லக்கூடிய திறமை குடிகொண் டிருப்பதை நினைத்தவுடன் அவருக்குச் சிறிது கர்வம் தோன்றிவிட்டது.

ஸ்ரீராமபிரான், அருள் உள்ளம் கொண்ட ஆஞ்சனேயன் உள்ளத்தில் தோன்றிய கர்வம் என்னும் வியாதியின் தன்மையைத் தெரிந்துகொண்டார். உடனே அதைப் போக்கவும் மனம் கொண்டார். முகூர்த்த காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. அவர் சுக்கிரீவனை அழைத்துச் சொன்னார் : "சுக்கிரீவா! முகூர்த்த நேரம் முடியப்போகிறது. அனுமனையோ இன்னும் காணவில்லை. ஆகவே மணலினால் சிவலிங்கத்தை அமைக்கப் போகிறேன்."

இவ்விதம் சொல்லிக்கொண்டே முனிவர்களின் அனுமதிபெற்று ஸ்ரீராமபிரான் மணலினால் செய்த லிங்கத்தை ஸ்தாபித்தார். அனைவருக்கும் தானம், தக்ஷிணை முதலியவை தருவதற்காகக் கௌஸ்துப மணியை நினைத்துக்கொண்டார். ஸ்ரீராமபிரான் நினைத்தவுடனே ஆகாய மார்க்கமாகக் கௌஸ்துப மணி சூரியனைப் போன்று வந்து சேர்ந்தது. பிரபு இராமபிரான் அதைத் தமது கழுத்தில் அணிந்துகொண்டார். அந்தக் கௌஸ்துப மணியின் மகிமையால் அங்கே பணம், துணிமணிகள், பசுமாடுகள், குதிரைகள், ஆபரணங்கள் போன்றவை ஏராளமாகத் தோன்றின. உணவு வகைகள் குவியல் குவியலாகத் தோன்றின. அவற்றைக் கொண்டு இராமர் ரிஷிகளை நன்கு கௌரவித்தார். ஆகவே முனிவர்கள் மிகுந்த திருப்தியுடன் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப ஆரம்பித்தனர்.

ரிஷிகள் திரும்பிச் சென்றுகொண்டிருந்தபோது வழியில் அனுமனைக் கண்டனர். ஆஞ்சனேயர் முனிவர்களிடம், ''பெரியோர்களே! தாங்கள் யாரால் பூஜிக்கப்பட்டீர்கள்?'' என்று கேட்டார். முனிவர்கள் அனுமனிடம், ''ஸ்ரீராமபிரான் மிகவும் விமரிசையாக சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தார். அதனால் எங்களுக்குத் தக்ஷிணைகளும் பல உணவு வகைகளுடன் பெரிய விருந்தும் திருப்தியாகக் கிடைத்தன'' என்று தெரிவித்தனர்.



இதைக் கேட்டதும் இராமபிரானின் சங்கல்பத்தால் மாயை காரணமாக அனுமனுக்குக் கோபம் ஏற்பட்டது. அவருடைய உள்ளத்தில் ஆத்திரம் பொங்கி எழுந்தது. ''இந்த இராமர் என்னை வீணாக எவ்வளவு அல்லல்படுத்தி விட்டார், பார்!'' என்று சொல்லிக்கொண்டே, அடுத்த வினாடி இராமபிரானின் அருகில் சென்று வணங்கிக் கூறத் தொடங்கினார்: ''சுவாமி! இலங்கை சென்று சீதையைத் தேடிக் கண்டுபிடித்ததற்கு இதுதான் தாங்கள் தரும் பரிசா? காசிக்குப் போய்ச் சிவலிங்கத்தைக் கொண்டுவரச்செய்து என்னை ஏன் ஏளனப்படுத்துகிறீர்கள்? இவ்வாறு தங்கள் மனதில் என்னைப் பரிகாசம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், என்னை ஏன் சிவலிங்கம் கொண்டுவரக் காசிக்கு அனுப்பி வீணாக அலையவிட்டீர்கள்?'' என்று கேட்டார்.

கருணையின் இருப்பிடமான இராமபிரான் சிரித்துக்கொண்டே, ''வாயுகுமாரா! நீ சொல்வது முற்றிலும் சரிதான். பரவாயில்லை. நடந்தது நடந்துவிட்டது. இப்போது நீ ஒன்று செய்: நான் அமைத்த மணலினாலான இந்தச் சிவலிங்கத்தை எடுத்துவிடு. நான் இப்போதே நீ கொண்டு வந்துள்ள சிவலிங்கங்களை ஸ்தாபித்துவிடுகிறேன்'' என்று அமைதியோடு கூறினார்.

ஆஞ்சனேயர் திருப்தியுடன், ''மிகவும் சரி! அப்படியே செய்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே இராமபிரான் பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்தைத் தம் வாலினால் சுற்றினார். அதை வேகத்துடன் இழுத்தார். தம்மால் ஆனமட்டும் இழுத்து இழுத்துப் பார்த்தார். ஆனால் என்ன ஆச்சரியம்! சிவலிங்கத்தை வேருடன் பறிப்பதா? அதைச்

சிறிதும் அசைக்கவே முடியவில்லை. மாருக அனுமனின் வால்தான் அறுந்துவிட்டது. வீரர்களின் திலகமாகிய ஆஞ்சனேயர் சோர்ந்துபோய் மூர்ச்சித்துத் தரையில் விழுந்தார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த மற்ற வானரர்களுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. கொல்லென்று சிரித்தார்கள். ஆஞ்சனேயர் மூர்ச்சை தெளிந்து மெல்லக் கண்விழித்தார். அவருடைய உள்ளத்தில் இருந்த கர்வம் அறவே மறைந்துவிட்டிருந்தது. தாம் கர்வம் கொண்டது தவறு என்பதையும் புரிந்துகொண்டார். உடனே எழுந்து பிரபு இராம பிரானின் கால்களில் விழுந்து தம்மை மன்னிக்கும்படி பிரார்த்தித்தார்.

சரணுகதி வத்ஸலராகிய இராமர் எப்போதோ ஆஞ்சனேயரை மன்னித்துவிட்டிருந்தார். பக்தனின் உள்ளத்தில் கர்வம் என்ற மகா பயங்கரமான நோய் தோன்றிய அந்த நேரத்திலேயே அதைச் சுத்தமாகப் போக்கிவிட்டார்.

அதன் பிறகு அவர் முறைப்படி தாம் ஸ்தாபித்த சிவலிங்கத்திற்கு வடக்கில் விஸ்வநாத லிங்கம் என்ற பெயருடன் அனுமன் கொண்டு வந்த இரண்டு சிவலிங்கங்களையும் ஸ்தாபிக்கச்செய்து, "எவன் ஒருவன் அனுமனுல் கொண்டு வரப்பட்ட இந்த இரண்டு விஸ்வநாத லிங்கங்களையும் முதலில் வணங்கித் துதிக்காமல் என்னுல் ஸ்தாபிக்கப்பட்ட ராமேசுவர லிங்கத்தைப் பூஜை செய்கிருனே அவனுடைய பூஜைக்கு எந்தவிதமான பலனும் இருக்காது" என்ற வரத்தையும் அருளினுர். பிறகு அனுமனை நோக்கி, "நீயும் இந்த இடத்தில் வாலறுந்த நிலையில், மறைந்த பாதங்களுடன் கூடிய உருவத்தில் கர்வமில்லாமல் வசிப்பாயாக" என்று கூறினுர்.

இராமபிரான் கூறியபடியே சொல்லின் செல்வன் சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்தார். பிறகு வாலறுந்து, மறைந்த கால்களுடன், கர்வமற்ற தன்மையைக் காட்டும் முகபாவத்துடன் கூடிய தமது சிலையையும் அமைத்துப் பிரதிஷ்டை செய்தார். அது இன்றுகூட அங்கே காணப்படுகிறது. —ஆனந்த ராமாயணம்



கடவுளின் காது ஒரு நாளும் செவிடாவதில்லை. மனிதன் இதயம்தான் ஊமையாகி விடுகிறது.

—ஓர் அறிஞர்

பிரார்த்தனைக்கு இதயம்தான் முக்கியமே தவிர வார்த்தைகள் அல்ல. இதயமற்ற வார்த்தைகளால் பலன் இல்லை. ஆனுல் வார்த்தை இல்லாத இதயத்தால் எவ்வளவோ சாதிக்க முடியும்.

—பனியன்

நம்முடைய பிரார்த்தனையும், கடவுளுடைய அருளும் கிணற்றின் ராட்டையில் தொங்கும் இரண்டு வாளிகள் போலாகும். ஒன்று மேலே போகும் போது, இன்னென்று கீழே இறங்குகிறது.

—ஹாப்கின்ஸ்

திராட்சை குலையில் நிறைய பழங்கள் உள்ள கொத்து, தாழ்வாக குனிந்து இருக்கும். பழங்கள் குறைவாக உள்ள கொத்து நிமிர்ந்து நிற்கும். அதைப்போல், ஒருவன் எவ்வளவுக்கு எவ்வளவு பெரியவனே அத்தனைக்கு அத்தனை அடக்கமாக இருப்பான்.

—ஒரு யூதப் பழமொழி



குழந்தை முனியின் உள்ளம்

பி. ஸ்ரீ.

வெள்ளித் தாடியும் ஜடாமகுடமுமாய்த் தியானத்தில் அமர்ந்திருக்கிறார் பெரியவர். மக்கள் பயபக்தியுடன் ஒதுங்கி நிற்கிறார்கள். கூட்டத்திலிருந்து ஒரு குழந்தை தப்பி ஓடித் தாடியைப் பிடித்து இழுக்கிறான். "உன்னைப் போல் எனக்கு எப்போது நீண்ட தாடி வளரும், தாத்தா?" என்பது குழந்தையின் கேள்வி. "பாப்பா, உன்னைப் போல் நான் எப்போது ஆக முடியும் என்றல்லவா தவம் கிடக்கிறேன்?" என்று, கண்களில் நீர்ததும்பப் பதில் சொல்லுகிறார் யோகியார்.

ரவிந்திரரின் கவிதையிலும் புகுந்துவிட்ட பிரசித்தமான ஒரு கதை இது. குழந்தையாக மாறிப் பிறந்தாலன்றிப் பரமபத ராஜ்யத்தில் புகுந்துவிட இயலாது என்ற கிறிஸ்தவ சமய மகாவாக்கியம் ஒன்றை நினைவூட்டும் கதை. குழந்தையுள்ளம் பெற்றுப் பரமபதத்தைச் சொந்தமாக்கிக்கொண்ட பெரியோர்களின் திருக்கூட்டத்திலே 'குழந்தை முனி' என்று சிறப்பித்துக் கூறப்படும் நம்மாழ்வாருக்குச் சிறப்பான இடம் உண்டு.

கறந்த பால் போலே

'பால்போல் ஒழுக்கத்தவரே மேல் உலகம் எய்துபவர்' என்பது ஒரு ஜைன கவியின் வாக்கு. நம்மாழ்வாரோ தம் திருவாய்மொழியைப் 'பால் ஏய் (ஒத்த)தமிழர் பரவும் ஆயிரம்' என்று அறிமுகப்படுத்துகிறார். கறந்த பால் போலக் கள்ளங்கபடற்ற குழந்தையுள்ளம் படைத்த தமிழர்கள் திருவாய்மொழியைப் போற்றுகிறார்கள் என்பது பொருள்.

தமிழர் எப்படி வாழ்ந்தால் உண்மைத் தமிழர் ஆவர் என்ற குறிப்பையும் நம் குழந்தை முனியின் வாக்கிலே காண்கிறோம். 'கள்ளம் போனால் உள்ளம் காணும்' என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர் அனைவரும் தமிழர்களே என்று நாம் உறவு கொண்டாடுவதற்கு உரியர் ஆவர் என்ற குறிப்பைக் கூட இங்கே காணலாம் என்று தோன்றுகிறது.

குழந்தையுள்ளம் இம்மையிலும் நல்வாழ்வைத் தரக் கூடியது, இவ்வுலகிலேயே பேரின்பத்தை அளிக்க வல்லது. இது நம்மாழ்வார் கண்டு காட்டும் பேருண்மைகளில் ஒன்று.

இந்தக் குழந்தை முனியின் பெருநம்பிக்கையில் பிறந்திருக்கிறது, 'நன்னெஞ்சே! நம்பெருமான் நமக்கு அருள்தான் செய்வானே' என்ற நற்செய்தி. நெஞ்சு நன்னெஞ்சாக இருக்க வேண்டும்; அதில் கோயில் கொண்டு நம்பெருமான் அருள்செய்த வண்ணமாக இருப்பானும். ஆழ்வாரின் இளகிய நெஞ்சிலிருந்து தமிழ்ப் பிரபந்தங்களாக லோகோபகாரமாய்த் தன்னைப் புலப்படுத்திக் கொண்டானும். இப்படி 'என்னெஞ்சத்து உள்ளிருந்து' அருள்புரிந்தவன் வன்னெஞ்சத்து இரணியனை அந்த நெஞ்சைப் பிளந்துதான் ஆட்கொள்ள நேர்ந்தது என்கிறார். இறைவனது அறக் கருணை அருளாளரை ஆட்கொள்ளும்; அசுர நெஞ்சை மறக் கருணை ஆட்கொள்ளும். இது இவர் கொள்கை.

எப்படியும் இறைவன் எல்லாருக்கும் அருள்புரிகிறான் என்கிறார்; எல்லாருக்கும் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கிறார். 'பராநர்த்தம் நெஞ்சிலே படுகையாலே நாட்டுக்காகத் தாம் மன்றுடுகிறார்' இந்த ஆழ்வார் என்பார் வியாக்கியான சக்கரவர்த்தி பெரியவாச்சான்பிள்ளை.

அற்புதம் எது?

ஞானக் குழந்தையாக மாறிப் பிறந்து ஒரு பிறவியை இரு பிறவி ஆக்கிக்கொள்வதைவிட ஓர் அற்புதம் இருக்க முடியுமா? இயற்கைச் சட்டங்களை மீறி நிகழும், அல்லது நிகழ்வதாகக் கருதப்படும் நிகழ்ச்சிகளையே அற்புதங்கள் என்று மதிக்கிறார்கள் சாதாரண மக்கள். ஆனால் இத்தகைய அற்புதங்களின்மீது உள்ள நம்பிக்கை மூடநம்பிக்கையாகி முக்தி நெறியையும் பக்தி நெறியையும் இலவசமாக்கிவிடக் கூடும். இதை நன்கு உணர்ந்த அறிஞர் ஒருவர் ஒரு கற்பனைக் கதை புனைந்திருக்கிறார், மூட பக்தர்களுக்கெல்லாம் ஓர் எச்சரிக்கையாக.

நம்மைப் போல் கிறிஸ்தவர்களும் அற்புதங்களை நம்புகிருர்கள். கிறிஸ்து பகவான் குஷ்டரோகியைக் குணப்படுத்தினர், கண்கெட்டவனுக்குக் கண்ணைத் தந்தார் என்று சொல்லுகிருர்கள் அல்லவா? கர்த்தரின் அருளுக்குச் சாட்சிகள் வேண்டுமே என்று இத்தகைய அற்புதங்களை நிகழ்த்தினுர் என்பர்.



ஆனல் இந்தச் சாட்சிகள் எதிர்பார்த்தவாறு தேவகுமாரர்கள் தெய்வ அருளுக்குச் சான்ருக வாழ்ந்தனரா? இப்படி ஒரு வினவை எழுப்புகிறது மேலே சொன்ன கற்பனை.

சாட்சிகளைச் சரிபார்க்க மீண்டும் பூமிக்கு இறங்கி வந்தாராம் உலக ரட்சகர். பழைய குஷ்டரோகியின் இருப்பிடத்திற்கு வந்தார். மாளிகையில் படாடோபமாக வாழ்ந்து வந்த அவன் குடிவெறியில் மதி மயங்கியிருந்தான். "நான் யார், தெரியவில்லையா?" என்று கேட்டார் பெருமான். "குஷ்ட நோயைப் போக்கி ஆரோக்கியம் தந்த உபகாரியை மறப்பேனு?'' என்று பதில் வந்தது. "இதுவோ உன் வாழ்க்கை இப்போது?'' என்ருர் அவர். "ஆரோக்கியம் அளித்திரே, அந்த ஆரோக்கிய வாழ்வை அனுபவிக்க வேண்டாமா?'' என்று பதில் வந்தது.

"மற்ற இரண்டு சாட்சிகளையும் காண்போம்' என்று புறப்பட்டார் பெருமான். இருவரையும் ஒரே இடத்தில் சந்திக்க நேர்ந்துவிட்டது. பாவ மன்னிப்புப் பெற்ற பாவையைப் பின்தொடர்கிருன் கண்பெற்ற பாக்கியசாலி! "தெரிகிறதா?'' என்ற கேள்விக்கு, "நன்ருய்த் தெரிகிறது; கண்கொடுத்தவர் அல்லவா?'' என்று பதில் வருகிறது. கண் படைத்த பயனைப் பெற்றுவிட்டதாகவும் ஒப்புக்கொள்கிருன் அவன். அவளுக்கோ மனம், பாவம் துடைத்த சுத்தமான கற்பலகையாகிவிட்டது; மீண்டும் எழுத வேண்டியதுதானே!

இந்தக் கற்பனை, 'அற்புதங்களால் மட்டும் சமயம் நிலைபெறுவதில்லை' என்ற பாடத்தை எல்லாச் சமயிகளுக்கும் பொதுவாகக் கற்பிக்கிறது எனலாம். இந்தக் கருத்தை ஒட்டி நம்மாழ்வார், 'ஒரு பிறவியிலேயே இரு பிறவி பெற்று விடுபெறுவதற்கு எவ்வளவோ பாடுபட்டுத் தவங்கிடந்துதான் வழி காண முடியும்' என்கிருர்.

நன்ருய் ஞானம் கடந்துபோய், நல்இந்திரியம்
எல்லாம் ஈர்த்து,
ஒன்ருய்க் கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பில்
அதனை உணர்ந்துணர்ந்து,
சென்ருங்கு இன்ப துன்பங்கள் செற்றுக் களைந்து
பசையற்ருல்,
அன்றே அப்போதே விடு, அதுவே விடு விடாமே.

கடுந்தவம் கிடந்துதான் முத்திநெறி காண முடியும் என்று கூறுகிறவர் அந்தத் தவநெறியையும் அருள்நெறியாகக் காட்டுகிருர். அருள்நெறியில் துன்பமும் இன்பமாகிவிடுகிறது; காதலும் பக்திக் காதலாகித் துறவுநிலையின் தூய்மையைப் பெற்று விடுகிறது. இந்த நிலையில் பக்தனுக்குக் கைங்கரியமே நற்றவமாகிறது.

மேகங்களின் உபதேசம்

நம்மாழ்வாரின் தூய தவநெறிக் கொள்கையையும் அருள்நெறிக் கொள்கையையும் ஒருங்கே காண்கிருேம் ஓர் அழகிய பாசுரத்திலே. 'திருமாலின் திருமேனி ஒக்கும் பாக்கியம் மேகங்களுக்குக் கிடைத்திருக்கிறதே, அதற்கு அவை செய்த தவந்தான் என்ன?' என்பது கேள்வி. இந்த வினவையும் விடையையும் இதோ பாருங்கள்:

மேகங்களோ! உரையீர்: திருமால் திருமேனி
ஒக்கும்
யோகங்கள் உங்களுக்கு எவ்வாறு பெற்றீர்?
உயிர் அளிப்பான்
மாகங்கள் எல்லாம் திரிந்து நன்னீர்கள் சுமந்து
நுந்தம்
ஆகங்கள் நோவ வருத்தும் தவமாம் அருள்
பெற்றதே!

இலவசமாகவோ அற்புதமாகவோ தங்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைத்துவிடவில்லை என்கின்றனவாம் மேகங்கள். திருமாலைப் போல் உயிரைக் காக்கும் பணியில் மேகங்களும் தங்களை முழுக்க இழந்துவிடுகின்றன. இந்த லோகோபகார கைங்கரியமாகிய தவத்தைத் 'தவமாம் அருள்' என்று குறிப்பிடுவது கூர்ந்து நோக்கத் தக்கது.

ஒரு மெல்லியல் தன் உடல் நோவக் குடத்தில் நன்னீர் சுமந்து போய், தாகம் உள்ளவர்களுக்கெல்லாம் பட்சபாதமின்றி அதை வழங்குவது போல், மேக கன்னிகைகளும் 'ஆகங்கள் நோவ வருத்தும் தவமாம் அருள் பெற்று'ப் பணிபுரிகிருர்கள் என்ற கவிச்சித்திரத்தின் பொலிவும் பொருளும் உணர்ந்து உணர்ந்து அனுபவிக்கத் தக்கவை.

மேகங்களைப் போல் பக்தர்கள் 'காராலுமேனிக் கருணுகர மூர்த்தி'க்கு உகப்பான லோகோபகார

மான கைங்கரியத்தை நற்பெருந் தவமாகக் கொள்வர். அதனால் பக்தர்களும் பகவானை ஒக்கும் பாக்கியசாலி ஆகிறார்கள். இந்தத் தனிப்பெருங் கொள்கையை மேகங்களின் ஒழுக்கமாகவும் உபதேசமாகவும் கண்டு காட்டுகிறது நம்மாழ்வாரின் குழந்தையுள்ளம்.

இப்படித் தொண்டர்கள் ஒழுகுவார்களானால் இந்த உலக வாழ்க்கை எத்தகைய பொலிவு பெற்று விடும் என்பதையும் குழந்தை முனி ஒரு தீர்க்க தரிசனமாகக் காட்டியுள்ளார்.

'பொலிக, பொலிக, பொலிக!
போயிற்று வல்லுயிர்ச் சாபம்'

என்று தொடங்கும் பதிகத்திலே.

இத்தகைய வாழ்க்கையில் மரண பயம், நரக பயம் முதலான அச்சங்களுக்கு இடமே இல்லை. கலியுகம் போய்க் கிருதயுகம் என்ற பொன்யுகம் உடனே பிறந்துவிடுமாம். ஒரு பிறவியிலேயே குழந்தையாக மாறிப் பிறக்க வழி காட்டுகிறவர், கலியுகத்திலேயே கிருதயுகம் கண்டு புதுமைப் பெருவாழ்வு வாழவும் ஒரு நல்ல பெருவழி காட்டுகிறார் எனலாம். ✩

கிரீஷ் எழுதிய நாடகம்

R. நிவேதிதா, M.A.,

சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையாகிய சகோதரி நிவேதிதை ஒவ்வோர் ஆண்டும் துர்க்காபூஜை விடுமுறைக்கு, தார்ஜிலிங் போவது வழக்கம். அதுபோன்று நிவேதிதை 1911-ஆம் ஆண்டு, தார்ஜிலிங் போவதற்கு முன்பு, வங்காளத்தில் புகழ்பெற்ற நாடக ஆசிரியரான கிரீஷ் பாபுவைச் சென்று பார்த்தார். கிரீஷ்பாபு ஸ்ரீராமகிருஷ்ணரின் பக்தர்; குருதேவருக்காகவே தம்மை முற்றும் அர்ப்பித்துக்கொண்டவர். வயதான கிரீஷ்பாபுவின் வீடு சகோதரி நிவேதிதையின் இருப்பிடத்திற்குச் சற்றுத் தூரத்தில் இருந்தது.

கிரீஷ்பாபுவும் சகோதரி நிவேதிதையும் நீண்ட நேரம் ஸ்ரீகுருமகராஜ், சுவாமிஜி ஆகியோரைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். கிரீஷ்பாபுவுக்கு அப்போது உடல்நலம் சரியில்லை; என்றாலும் அவர் அப்பொழுது 'தவப்பயன்' என்ற தமது கடைசி நாடகத்தை எழுதிக் கொண்டிருந்தார்.

கிரீஷ்பாபுவின் புதிய நாடகங்கள் வெளிவந்து அரங்கேற்றம் ஆகும்பொழுதெல்லாம் மிகவும் மகிழ்ச்சி அடையக் கூடியவர் நிவேதிதைதாம். அதுபோன்று அன்றும் அவர் கிரீஷ் பாபுவைச் சென்று பார்த்தபோது, "தயவுசெய்து நீங்கள் சீக்கிரம் இந்தத் 'தவப்பயன்' நாடகத்தை எழுதி முடியுங்கள். நான் தார்ஜிலிங் போய்விட்டு வந்தவுடன் படிக்கிறேன்" என்று கூறினார். ஆனால், சகோதரி நிவேதிதை தார்ஜிலிங்கிலிருந்து திரும்பி வரவே இல்லை. அவர் தார்ஜிலிங்கில் 1911-ஆம் ஆண்டு அக்டோபர் 13-ஆம் தேதி தமது பணியை முடித்துக்கொண்டு விண்ணுலகம் எய்தினார்.

தார்ஜிலிங்கிலிருந்து நிவேதிதை திரும்பி வந்து தமது நாடகத்தைப் படிக்காததனாலும், அவரைத் தமது குழந்தையாகவே பாவித்து மிகவும் அன்பு செலுத்தியதனாலும் கிரீஷ்பாபு தம்முடைய அந்தக் கடைசி நாடகத்தை நிவேதிதைக்கே அன்புக் காணிக்கை ஆக்கிவிட்டார்.

கிரீஷ்பாபு 'தவப்பயன்' நாடகத்தை அன்புக் காணிக்கையாக நிவேதிதாதேவிக்குச் செலுத்திய விதம் வருமாறு :—

குழந்தாய் தூய நிவேதிதா!

என்னுடைய புதிய நாடகங்கள் அரங்கேறும் போதெல்லாம் நீ மகிழ்ச்சி அடைவாயே; இப்போது என்னுடைய இந்தப் புதிய நாடகம் அரங்கேறியுள்ளது; ஆனால் நீ எங்கே இருக்கிறாய்? நீ தார்ஜிலிங் போவதற்கு முன்பு என்னை வந்து பார்த்தாயே; அப்போது நான் உடல்நலமின்றி இருந்தேன். நீ மிகவும் அன்புததும்ப, 'நான் திரும்பி வந்து உங்களை நல்ல முறையில் பார்க்கிறேன்' என்று கூறினாய். நான் இன்றும் உயிருடன் இருக்கிறேன். ஆனால் என் குழந்தையே, ஏன் நீ இன்னமும் என்னை வந்து பார்க்கவில்லை? உன் மரணப்படுக்கையில் என்னை நீ மிகவும் நினைத்தாய் என்று கேள்வியுற்றேன். இப்பொழுது கடவுளுடைய காரியத்தில் ஈடுபட்டிருக்கும் உனக்கு என் நினைவு இருக்குமேயானால், என் கண்ணீருடன் கூடிய இந்த மனமார்ந்த அன்பளிப்பை ஏற்றுக்கொள்.

—கிரீஷ்சந்திர கோஷ்

மனிதனது உண்மை நிலை

சுவாமி அமரானந்தர், திருவண்ணாமலை

ஜகத், ஜீவன், ஈசுவரன் என்ற முப்பொருள் உண்மையை உலகில் பெரும்பாலான மக்கள் ஒப்புக்கொள்கிறார்கள். எல்லா மதங்களும் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்கின்றன.

ஒருவன் இவ்வுலகில் தெய்வபக்தியுடன் சிறந்த பண்புகளுடன் வாழ்ந்து இறைவனடி சேர்வதே வாழ்க்கையின் இலட்சியம் என்பது இந்தக் கொள்கை. இது பெரும்பாலானவர்கள் ஏற்கும் துவைத மதக் கொள்கையாகும். ஆனால் அத்வைதம், 'ஜகத், ஜீவன், ஈசுவரன் ஆகிய முப்பொருள்களும் ஒரே பெரும்பொருளாகிய பரம்பொருளின் திரிவுபட்ட தோற்றம், அதாவது மங்கிய ஒளியில் கயிறு பாம்பாகத் தோன்றுவது போன்றது' என்று கூறுகிறது.

மனிதன் இறைவனை வழிபட்டு அவனது திருவடிகளை அடைந்து வாழ்ந்தாலும் அவனிடம் சிறிதளவு ஜீவவியக்தி எஞ்சியிருக்கிறது. அது முடிவான அவனுடைய உண்மைநிலை ஆவதில்லை. போக்கும் வரவும் புணர்வும் இல்லாத புண்ணியநிலை ஆவதில்லை. சாலோக்யம், சாமிப்யம், சாரூப்யம் ஆகிய மூன்று நிலைகளை அடைந்தாலும் சாயுஜ்யமாகிய நாலாவது நிலையை அடையும் வரையில் ஜீவன் ஓய்ந்திருக்க முடியாது. அந்த நாலாவதாகிய பெருநிலையே மனிதனது உண்மைநிலையாகிய நிஜசொரூபம் ஆகும். அதாவது தன்னை யாரென்று ஆராய்ந்து தன் உண்மைநிலையை அடைந்து இன்புற்று இருப்பதே முடிவான இலட்சியமாகும்.

இனி அந்த உண்மைநிலையை அறிவதற்கு வழி என்ன என்று கேட்கலாம். தன்னிலை நின்ற நமது சமயச் சான்றோர்கள் அருள்நூல்களின் வாயிலாக அதற்கான வழியை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றுள் தமிழ் மொழியில் உள்ள ஒரு நூல் 'கைவல்ய நவநீதம்'. அந்த நூல் பின்வருமாறு குறிப்பிடுகிறது :—

வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்தி றந்து
தீராத சுழற்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
பேராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் போதம்
ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே.

[உற்ற-சிக்கிய; பேராத-ஒழியாத; காலநேமி காலசக்கரம்; பிரமையில்-மயக்கத்தில்; போதம்-அறிவு, பேரறிவு.]

அறிவைக்கொண்டு தன்னை யாரென்று ஆராய்ந்து தன் நிஜசொரூபத்தை உணரும் வரையில், தனது உண்மை நிலையை மறந்த ஜீவன், சுழற்காற்றில் அகப்பட்ட துரும்பு போன்று, முடிவுபெறாத ஜனன மரணத்தில் சிக்கி, ஒழியாத காலசக்கரத்தின் மயக்கத்தில் கட்டுண்டு உழன்றுகொண்டிருப்பான்.

மனதுக்கும் அறிவுக்கும் ஏற்படும் உரையாடலே குருவுக்கும் சீடனுக்கும் ஏற்படும் உரையாடலாக இந்நூலில் அமைந்திருக்கிறது. வயதுமுதிர்ந்த ஒருவரும் வாலிபனும் நெருங்கிப் பழகும்போது தந்தை மகன் என்ற உறவு ஏற்படுகிறது. இங்கு அறிவில் முதிர்ந்த ஆசானுக்கும் அதற்குத் தயாராகும் சீடனுக்கும் தந்தை மகன் என்ற ஐக்கியம் அமைந்துவிடுகிறது. சீடனை, 'மகனே!' என்று குரு அழைக்கிறார்.

ஜீவாத்மா ஒருவன் கற்பனையில் வந்த தன் கர்ம பந்தத்தினால், புல் பூடு மரம் புழு பாம்பு பறவை மிருகம் முதலிய பல பிறவிகள் எடுத்துக் கடைசியில் மனிதனாகப் பிறக்கிறான். அவன் தானே கற்பித்துக் கொண்ட வினையில் கட்டுண்டு இருப்பதனால் தன்னை அந்த அந்த உடல்சொரூபமாகவே நினைத்துத் தன் உண்மைநிலையை மறந்துவிடுகிறான். மனிதப் பிறவியில் விவேகம் விரிவடைந்து, தன்னைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கிறான். விசாரணையின் மூலம் தன்னை யாரென்று அறிபவன், தன் உண்மைச் சொரூபத்தை உணர்ந்துகொள்கிறான். விசாரணையில் ஈடுபடாதவன், சுழற்காற்றில் அகப்பட்ட செத்தை போல, காலசக்கரத்தின் சுழற்சியில் சிக்குண்டு, மீண்டும் மீண்டும் பிறப்புக்கும் இறப்புக்கும் ஆளாகிறான். சுழற்காற்று அடிக்கும்போது அந்தக் காற்று அங்குள்ள குப்பைகூளங்களை வாரி எடுத்து ஒரு வடிவம் அமைக்கிறது. அந்தக் காற்று நகரும் போது, அந்தச் செத்தைகளையும் அடித்துக் கொண்டு, வேறு இடத்துக்குப் போய் அங்கும் வேறொரு வடிவம் எடுக்கிறது. ஜீவாத்மாவாக நினைத்துக்கொண்டிருக்கும் தன்னை, யாரென்று

ஆராயாதவனுக்கு, சுழற்காற்றுப் போன்ற வினை, பிறப்பையும் இறப்பையும் உண்டாக்குகிறது. சுழற்காற்று குப்பைகூளங்களை எடுத்துக்கொண்டு சுழல்வது போல, இந்தப் பிறப்பில் உள்ள வினை, பிராண சக்தியில் சிக்குண்டு இந்த உடலை விட்டு உயிர் நீங்கும்போது, அத்துடன் கூடவே போய் வேறொரு பிறவியை எடுக்கிறது. காற்று, நறுமணம் துர்நாற்றம் ஆகிய இரண்டையும் எடுத்துக்கொண்டு சுழல்வது போல, ஜீவாத்மாவை நல்வினை தீவினை ஆகிய இரண்டும் தொடருகின்றன. தன்னை ஆராய்ந்து அறியும் அளவிற்கேற்ப இந்தத் தோற்றத்திற்கு அதாவது ஜனன மரணம் ஆகிய காட்சிக்கு மறைவு உண்டாகிக்கொண்டே இருக்கும். அதாவது ஆத்ம விசாரத்தில் இருக்கும்போது, சில சமயம் அந்த விசாரத்தினால் உண்மை விளங்குவதாகவும், பிறகு அறியாமையினால் அந்த உண்மை மறைவதாகவும் இருக்கிறது. விசாரணையின் மூலம் தெளிவடைந்து, தன்னை முற்றும் அனுபூதியில் தானே பரவஸ்து என்று உணரும்போது வினை ஒய்ந்து, பிறப்பு இறப்பு நீங்கிவிடுகிறது.

ஆத்மவிசாரத்தின் முடிவை 'அவ்வளவும் தானே' என்ற சொல்லில் விளக்கியிருக்கிறார் ஆசிரியர். அறியாமையில் தன்னைப் பந்தப்பட்ட ஜீவன் என்று நினைத்துக்கொண்டிருப்பவன், விசாரணையின் மூலம் தான் பந்தப்பட்டவன் அல்ல என்பதை உணர்ந்து, தானே அகண்ட பரவஸ்து என்பதை அனுபவபூர்வமாக அறிய வேண்டியதுதான் முக்தி என்பதை எடுத்துக் காட்டுகிறார். 'நான் யார்?' என்னும் ஆராய்ச்சி இந்த முடிவுக்கு அழைத்துச் செல்லுகிறது.

'நான் யார்?' என்னும் விசாரத்தை மேலும் சற்று ஆராயலாம். ஒருவன் தனக்குச் சொந்தமாக உள்ள சொத்துக்களுக்கெல்லாம் ஒரு நாள் திடீரென்று நஷ்டம் வந்துவிட்டால், 'ஐயோ! நான் செத்தேன் அதாவது தொலைந்தேன்' என்கிறான். உண்மையில் அங்கே தொலைந்தவை அவனுடைய சொத்துக்கள் தாம்; அவனல்ல. தன் உடைமையைத் தான் என்று தவறாக நினைத்துக்கொண்டிருப்பதனால் உடைமைக்குக் கேடு வந்தவுடனே தானே தொலைந்ததாக நினைக்கிறான். உடைமையும் உடையவனும் வெவ்வேறானவை ஆகின்றன. இவ்விதம் உடல் முதலிய அந்தக்கரணங்களும் இவனுக்கு உடைமை மட்டுமே ஆகின்றன.

ஒருவன் தன் வீட்டுக்குள் இருக்கும்போது வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு, அந்த வீட்டோடு சேர்ந்து அதிலுள்ள மனிதர்கள் மற்றப் பொருள்கள் எல்லாம் வீடு என்ற பொருளில் அடங்குகின்றன. வீடு மட்டும் பார்வையில் இருக்கிறது. வீட்டின் உரிமையாளன் அந்த வீட்டிலிருந்து பிரிந்து வெளியே வந்துவிட முடிகிறது. அந்த வீட்டைத் தன் சொந்த வீடு என்று உரிமை பாராட்டி அதைத் தன் உடைமையாக நினைக்கிறான். இங்கு உடைமையும் உடையவனும் வெவ்வேறானவை என்பது தெளிவாக விளங்குகிறது. அது போலவே உடலுக்கு நோய் முதலானவை உண்டாகும்போது, 'என் உடம்புக்குச் சரியில்லை' என்கிறான். 'என் கண்கள் மங்கிவிட்டன' என்றும், 'காதுகள் மந்தமாகிவிட்டன' என்றும் கூறுகிறான். மனச்சங்கடம் ஏற்படும் போது, 'என் மனம் சங்கடப்படுகிறது' என்றும், தவறுதல் ஏற்படும்போது, 'என் புத்தியைச் சரியாய் உபயோகிக்கவில்லை' என்றும் சங்கடப்படுகிறான். சில சமயங்களில், 'என் உயிர் போனாலும் விடமாட்டேன்' என்று வீறுப்புப் பேசுகிறான். சபதம் செய்யும்போது, 'என் பெயரையே மாற்றி வைத்துக் கொள்கிறேன்' என்கிறான். ஆக இந்த உடல், கண், காது முதலிய இந்திரியங்கள் மனம் புத்தி முதலிய அந்தக்கரணங்கள், உயிர், பெற்றோர் இட்ட பெயர் ஆகியவை விசாரிப்பவனுடைய உடைமைகள் ஆகிவிடுகின்றன.

வீட்டை விட்டு வெளியே செல்லுவதைப் போல, ஸ்தூலமாக இவற்றை விட்டுத் தனியாகப் பிரிந்து விட இயலாவிட்டாலும், விசாரணையின் மூலம் இவை எல்லாம் தானல்ல என்று உணர்ந்து ஒதுக்கிவிட முடிகிறது. கனவில் இந்த ஸ்தூல உடலை ஒதுக்கிச் சூட்சும உடலில் இருப்பதும், தூக்கத்தில் இந்தக் கனவு நினைவு ஆகிய இரண்டு உடல்களையும் ஒதுக்கிவிடுவதும் அனைவருடைய அனுபவம் ஆகும். இப்படி விசாரணையின் மூலம் எல்லாவற்றையும் ஒதுக்கிவிடும் தருணத்தில், முடிவில் விசாரிக்கும் தன் அறிவே எஞ்சுகிறது. அதுவும் இந்த உடல் முதலியவைகளை ஒதுக்கிவிட்டு, இவற்றைக் கடந்து இருப்பதனால், வீட்டை விட்டு வெளியே வந்த மனிதன் போன்று, இவற்றில் கட்டுப்படாமல் இவற்றினின்று முற்றும் வேறாகிவிடுகிறது. விசாரிக்கும் அறிவுக்கு வேறாக அங்கே எதுவும் இல்லாததனால், உடல் முதலியவற்றில் கட்டுப்பட்ட குறுகிய வஸ்துவாக இல்லாமல், அந்த அறிவு

அனைத்தினின்றும் விடுபட்டுப் பேரறிவாக அகண்ட சொரூபம் ஆகிவிடுகிறது.

அது நிர்மலமாய், நிர்க்குணமாய், நிராகாரமாய், நிர்ாமயமாய், நிர்த்தோஷமாய், நிர்விகாரமாய், நிரஞ்ஜனமாய் உள்ள பெரிய பொருள் ஆகிவிடுகிறது. அதுவே பரவஸ்து, பரப்பிரம்மம், பரமாத்மா, மெய்ப் பொருள், மெய்ஞ்ஞானம், பிரம்மஞானம் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. உண்மையில் அந்த நிலையில் அது எந்தப் பெயரும் உருவமும் இல்லாத பெரிய பொருளாகவே இருக்கிறது. அந்தப் பெரிய பொருளுக்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. காலம் தேசம் இடம் ஆகியவற்றைக் கடந்து நிலைத்த பொருளாய், எந்தவித விவகாரமுமின்றித் தன்னில் தானாய், பேரமைதியுற்று, சாந்தி பெற்று விளங்குகிறது. இதுவே மனிதனது நிஜசொரூபம் என்னும் உண்மைநிலையாகும்.

“தான் கட்டிய கூட்டிலேயே பட்டுப் புழு கண்டுண்டு போகிறது. அது போல உலக மக்கள் தங்களுக்குத் தாங்களே உண்டு பண்ணிக்கொண்ட பந்த பாசங்களில் கட்டுண்டு உழல்கின்றனர்.”

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

குணம் நாடி

இந்திரன் ஒரு நாள் தேவலோகத்தில் அவையில் வீற்றிருந்தான். அப்போது அவன், “மனிதர்கள் வாழும் உலகில் தற்சமயம் கிருஷ்ணதேவன் என்னும் அரசனே மிகவும் நல்லவன். அவனைப் போன்ற குணசாலிகள் எங்குமே இருக்க முடியாது. அவனே எல்லோரை யும்விடச் சிறந்தவன்” என்று கூறினான்.

இவ்விதம் கிருஷ்ணதேவனைத் தேவேந்திரன் புகழ்ந்து பேசியது அங்கிருந்த ஒரு தேவனுக்குப் பிடிக்கவில்லை. அவன், ‘கேவலம் ஒரு மனிதனைத் தேவராஜன் புகழுவதா? அப்படி என்ன கிருஷ்ணதேவனிடம் பெரிய சிறப்பு இருக்கிறது? அதையும் பார்த்துவிடுகிறேன்’ என்று தீர்மானித்துக் கிருஷ்ணதேவனைச் சோதிப்பதற்குப் புறப்பட்டான்.

தேவன் ஓர் இறந்த நாயின் வடிவத்தில் கிருஷ்ணதேவன் வரும் வழியில் விழுந்து கிடந்தான். அந்த உடலிலிருந்து சகிக்கவே முடியாத அப்படி ஒரு துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. நாயின் வாய் வேறு கிழிந்து அவலட்சணமாகக் காணப்பட்டது.

கிருஷ்ணதேவன் அந்த வழியாக வந்தான். வழியில் கிடந்த அழுகிய நாயின் உடலைக் கண்டான். “ஆகா! இந்த நாயின் பல்வரிசைதான் எவ்வளவு அழகாக இருக்கிறது! எத்தனை சுத்தமாகவும் வெண்மையாகவும் இருக்கின்றன! முத்துக்களைப் போல் அல்லவா பிரகாசிக்கின்றன!” என்று வாய்விட்டுக் கூறினான்.

கிருஷ்ணதேவனின் கவனம் நாயின் அழுகிப்போன உடலைப் பற்றியோ அல்லது அதிலிருந்து வீசிய துர்நாற்றம் பற்றியோ செல்லவில்லை. ஆனால் அதில் காணப்பட்ட ஒரே ஒரு சிறிய நல்ல விஷயம் இருப்பினும் அதைப்பற்றியே சென்றது அல்லவா? இதுதான் அந்த மன்னனின் சிறப்பு.

கிருஷ்ணதேவனின் குணத்தைக் கண்டு மகிழ்ந்த தேவன் நாயின் உடலை விடுத்து, அவன் எதிரே சுய உருவத்தில் தோன்றினான். “அரசே! உண்மையிலேயே தங்களிடம் குணத்தை மட்டுமே நாடும் தன்மையும், நல்லனவற்றை மட்டும் எடுத்துக்கொள்ளும் உயர்ந்த பண்பும் காண்கின்றன. இந்த உலகில் தங்களைப் போன்ற குணவான்களே சுகமாக வாழ்கிறார்கள்” என்று கூறிக் கிருஷ்ணதேவனை ஆசீர்வதித்துவிட்டுத் தேவலோகம் திரும்பினான்.

—விவேகானந்ததாசன்



ஆலயம்

திருமுருக கிருபானந்தவாரியார்

அறிவு நிறைந்த ஆன்றோர்கள் நமது பாரத தேசத்தில் ஆலயத்தை அமைத்து அன்புடன் வழிபாடு புரிந்தார்கள். பண்டைக் காலத்து மன்னர்கள் தமது அரண்மனையினும் பெரிதாகத் திருக்கோயில்களைப் புதுக்கிப் பாரதநாட்டிற்கு அழியாத புகழை நிலைநாட்டினார்கள்.

மலையே இல்லாத சோழவள நாட்டில் உள்ள தஞ்சையில் ராஜராஜசோழன் வானளாவிய கோபுரத்தையும் திருமதில்களையும் மண்டபங்களையும் என்றென்றும் அழியாத நிலையில் சிலையினால் புதுக்கினான். இன்று தஞ்சையில் ராஜராஜ சோழன் அரண்மனை இருந்த அடிச்சுவடுகூடத் தெரியவில்லை. அவன் புதுக்கிய ஆலயம் அழியாப் புகழுடன் விளங்குகிறது. அதேபோல் மதுரையில் பாண்டிய மன்னர்கள் வாழ்ந்த அரண்மனையோ அரண்மனையின் தூண்களோ காணப்படவில்லை. பாண்டிய மன்னர்கள் கட்டிய மீனாட்சி அம்மையின் கோயில் ஒன்றே நிலைத்து நிற்கிறது.

சுந்தரமாற பாண்டியன் திருவானைக்கா என்னும் திருக்கோயில் நான்காவது சுற்றுப் பிராகாரத்தில் தெற்கு மதில் புதுக்கினான். சுந்தரமாற பாண்டியன் வாழ்ந்த வீடோ அணிந்த அணிகலன்களோ இன்று காணப்பெறவில்லை. அவன் புதுக்கிய மதில் இன்றும் நின்று காட்சி தருகிறது. இவனை அருணகிரிநாதரும் தமது திருப்புகழில் வியந்து கூறுகிறார் :—

‘‘துங்க கஜாரணி யத்திலுத்தம
சம்பு தடாக மடுத்த தட்சின
சுந்தரமாறன் மதிட்புறத்துறை பெருமானே?’’

கச்சியம்பதியில் பல்லவ மன்னன் புதுக்கிய கைலாசநாதர் திருக்கோயிலின் அளவுபடுத்த முடியாத வித்தகச் சித்திரப் பதுமைகளை இன்று மேனாட்டவரும் கண்டு வியந்து புகைப்படமெடுத்துச் செல்வதை எண்ணும்போது உள்ளம் இறும்பூதெய்துகிறது. இன்று பாரதநாட்டில் அழியாத செல்வங்களாக, சமயச் சின்னங்களாக நமது ஆலயங்கள் அமைந்திருக்கின்றன.

இனி, பொன்னும் வெள்ளியும் ஏராளமாக இருந்த பண்டைக் காலத்து மன்னர்கள் லக்ஷாதிலக்ஷம் நாணயங்களைச் செலவழித்து ஐந்து பிராகாரங்கள், ஏழு பிராகாரங்கள், ஆயிரங்கால் மண்டபம், கோபுரம் முதலியவற்றை அமைத்துப் பலப் பல ஆலயங்களைப் புதுக்கினார்கள். இவ்வண்ணம் புதுக்கிய மன்னர்கள் மூலஸ்தானத்தில் திருவுருவம் கல்லினாலும், எழுந்தருளும் உற்சவமூர்த்தி செம்பினாலும் அமைத்தார்கள். எத்தனையோ லட்சம் செலவழித்துக் கோயில் புதுக்கிய மன்னர்கள் தங்கத்தாலும் வெள்ளியாலும் உருவங்களை அமைத்திருக்கலாம் அல்லவா? அவர்களிடம் தனமும் மனமும் இருந்தும் தங்கத்தாலும் வெள்ளியாலும் திருவுருவங்களை அமைக்காமல் கல்லாலும் செம்பாலும் அமைத்த காரணம் யாது? கூர்த்த மதியுடையோர் இதனை ஆய்ந்து உண்மை காணும் கடமையுடையவராவர்.

இறைவன் ஒளி உருவாக விளங்குகிறான். ‘‘சோதியே! சுடரே! சூழொளி விளக்கே! ஒளிவளர் விளக்கே! மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்! தீப மங்கள ஜோதீ நமோ நம! பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பு’’ என்ற திருவாக்குகளினால் அறிக.

உலகில் காணப்படும் பொருள்களில் கல்லில் நெருப்பு அதிகமாகத் தங்கியிருப்பது கண்கூடு. ஒரு கல்லை மற்றொரு கல்லால் தட்டினால் வேள்வி வளர்த்து அந்தச் சிவ வேள்வியில் எழும் சிவ வொளியை நிறைகுடமாகிய கும்பத்தில் சேமித்து அந்தக் கும்ப நீரால் நெருப்பு நிறைந்துள்ள கல் விக்கிரகத்தை அபிஷேகம் புரிந்து, பெரியோர்கள் கல் விக்கிரகமாகிய கடவுளை நிறுவினார்கள். எனவே சோதிமயமான ஒளியின் ஆற்றல் அந்தக் கற்சிலையில் அமைந்திருக்கிறது.

இனி, திருவிதியில் எழுந்தருளி வரும் உற்சவ மூர்த்தி செம்பினால் அமைந்துள்ளது. ஊருக்கு வெளியே அமைந்துள்ள மின்ஆற்றலை (Electricity) ஊருக்குள்ளே பாய்ச்சும் கம்பி செம்பினால் அமைந்திருப்பதைக் காண்க. செப்புக் கம்பிக்குப் பாய்ச்சும்

ஆற்றல் உள்ளது. ஆகவே மூலஸ்தானத்தில் சேமித்துள்ள தெய்வ மின்சார ஆற்றலை ஆன்மாக்களின் உய்வு கருதித் திருவீதியில் பாய்ச்சுகிற உற்சவமூர்த்தியைச் செம்பினல் அமைத்த நம் முன்னேர்களின் மதிநலத்தை உன்னும்பொழுது உள்ளம் உருகுகிறது. இன்று கண்கூடாக விளங்கும் இந்தச் சாதனங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்னமேயே பல ஆண்டுகளுக்கு முன் தாமிர விக்கிரகத்தைச் செய்து செய்து அதன் மூலம் ஆன்மாக்களுக்கு நம் முன்னேர் நன்மை புரிந்தார்கள்.

மேலும், 'இறைவன் எங்கும் நிறைந்திருக்கிருன். ஆதலால் இறைவனை ஆலயத்தில் சென்றுதான் வணங்க வேண்டுமா? இருந்த இடத்திலிருந்தே வணங்கினல் போதாதா?' என்று கூறுவோரும் உள்ளனர்.

இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும் ஆலயங்களிலுள்ள திருவுருவத்தில் விளங்கித் தோன்றுகிருன். பசுவின் உடல் முழுவதும் பால் நிறைந்திருக்கிறது. பாலைப் பெற முயலுகிறவன் அதன் கொம்பையோ காதுகளையோ வாலையோ வருடினல் பால் கிடைக்குமா? என்ன கிடைக்கும் என்பதை கூற வேண்டாமே! எனவே பால் பெற விரும்புவோன் பசுவின் மடியை வருடிப் பால் பெறுவது போல், இறைவன் அருளைப் பெற விரும்புவோன் ஆலயத்தில் சென்று இறைவன் திருமுன் நின்று வழிபட்டுத் திருவருளைப் பெறுதல் வேண்டும்.

இனி, கம்பிகளில் மறைந்து நிற்கும் மின்சார ஆற்றல் மின்சார விளக்கின் மூலம் வெளிப்படுவது போல, எங்கும் மறைந்து நிறைந்திருக்கிற இறைவன் திருவருளைத் திருக்கோயிலின் திருவுருவங்கள் மூலம் பெறுவது எளிய முறை என்று உணர்க.

எனவே நம் முன்னேர்கள் கல்லையும் செம்பையும் கடவுளெனக் கருதி மூடநம்பிக்கையினல் வழிபட்டார்கள் எனக் கருதுவது பேதைமையாகும். கல்லிலும் செம்பிலும் அமைந்துள்ள அருளாற்றலையே அவர்கள் கடவுள் என்று கருதி வழிபட்டார்கள். கடவுளின் திருவருளைப் பெற்றுக் கடவுளுடன் உறவாடிய நால்வர்களும் ஆழ்வாராதிகளும் தலங்கள் தோறும் நடந்து சென்று, கோயில் வழிபாடு செய்தார்கள் என்ருல் அதன் பெருமை அளவிடற்கரிய தன்ருே? ஆலயங்கள்தோறும் சென்று வழிபடுவோர் உள்ளத்தை ஆண்டவன் தனக்கு ஆலயமாகக் கொண்டு எழுந்தருளுகிருன். திருமூலர் எளிதாகத் தெரிவிக்கிருர்:—

காடும் நகரமும் கற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமா னென்று
பாடுமின், பாடிப் பணிமின், பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கோள்வானே!

திருவருள் பெற்ற அனுபூதிச் செல்வர்களும் நியதியாக ஆலயஞ் சென்று வழிபட்டார்கள் என்று உணர்க. பாண்டிய நாட்டின் முதலமைச்சராகத் திகழ்ந்த மணிவாசகப் பெருந்தகையார், "புத்தேளிர் கோமான் நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்" என்று கூறுகிருர்.

மனிதனைப் புனிதனுகச் செய்வது ஆலயம். தெய்வ அருளாற்றல் அங்கே நிலவிக்கொண்டு இருக்கிறது. அங்கே சென்று வழிபடுவோரது வினைகளாகிய பஞ்சுப் பொதிகள் திருவருளாகிய அனற்பொறியால் வெந்து சாம்பராகின்றன. மார்க்கண்டேயராதி மாதவரும் சீலமுடன் ஆலய வழிபாடு செய்தனர். சிவ ஞானபோதம் 12-ஆம் சூத்திரம், அருட்பயன் பெற்ற ஆன்ருேரும் வாசனுமலம் தாக்காதிருப்பதற்கு ஆலய வழிபாடு புரிவது இன்றியமையாதது என்று இயம்புகின்றது:

செம்மலர் நோன்ருள் சேர லொட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மடிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே.

*

காட்டுத் தீயானது பாம்பைச் சுட்டுச் சாம்பலாக்கி விடுவதைப்போல, தன்னைவிடப் பெரியது ஒன்றில்லாத ஹரிபக்தியானது உயர்நலம்மிக்க வித்யா சக்திகளை எழுப்பி அவித்தையை விரைவில் எரித்துவிடுகிறது.

—பத்மபுராணம்

மதங்களில் குறியீடுகள்



பிரம்மசாரி முத்துக்குமார்

ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு விதமான குறியிடுகள் (symbols) வழக்கத்தில் இருந்து வருகின்றன. நுட்பமான உண்மைகளை நமது புலன்களைக் கொண்டு பார்த்தும் கேட்டும் புரிந்து கொள்ளும் ஒரு சாதனமாக இந்தக் குறியிடுகள் விளங்குகின்றன.

புற உலகத்துடன் நாம் கொள்ளும் தொடர்புகள் அனைத்தும் ஏதாவது ஒரு விதத்தில் அடையாளங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. நமது எண்ணங்களைச் சொற்களாக வெளிப்படுத்த உதவும் மொழியும் அந்த மொழிக்கு வரிவடிவம் கொடுக்கும் எழுத்துக்களும் அடையாளமே ஆகும்.

நமது கலைகள், கவிதைகள், காவியங்கள் ஆகிய எல்லாமே அடையாளங்கள்தாம். குறியிடுகள் மூலமே சிந்திக்கவும் செயற்படவும் பிறவற்றை அறியவும் செய்யும் நாம் குறியிடுகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மூச்சு விடாமல் உயிர்வாழ முடியாது. அதுபோல மனதின் சிந்தனைகள் இல்லாமல் நம்மால் எதையும் நினைக்கவும் இயலாது. நம் சிந்தனைகளுங்கூட நுட்பமான ஒருவிதக் குறியிடுகளாகவே இருந்து வருகின்றன.

“ஒருவிதத்தில் பார்க்கும்போது பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் அனைத்துமே அடையாளங்களாக மதிக்கப்படத் தக்கன. பிரபஞ்சம் முழுவதும் ஒரு லிங்கமாகவும், இறைவன் அந்த லிங்கத்தினால் குறிக்கப்படும் லிங்கியாகவும் ஆகிறான்” என்று சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகிறார்.

நாம் பிறந்து இந்த உலகைப் புரிந்துகொள்ள ஆரம்பித்ததிலிருந்து தெரிந்தோ தெரியாமலோ உருவங்களையே மையமாக வைத்து வாழ்கிறவர்களாகவும் வழிபடுகிறவர்களாகவும் இருந்து வருகிறோம். இது மனித இயல்பிலேயே உள்ள ஓர் உண்மையாகும். தெய்வநிலைக்கு உயர்ந்து பரிபூர்ண நிலையைப் பெற்ற மகான்களைத் தவிர மற்றவர் அனைவரும் ஏதாவது ஒருவகையில் உருவ வழிபாடு செய்பவர்களாகத்தான் இருக்க முடியும். பெயர்களும் உருவங்களும் நிறைந்துள்ள இந்தப் பிரபஞ்சத்தை நம் கண்முன்னால் காணும் வரையிலும், நம்மை நாம் உடல் என்று நினைக்கும் அறியாமை அழியும் வரையிலும், உருவ வழிபாட்டைத் தவிர்க்க இயலாது.

உண்மை என்னவென்றால், மனித வாழ்க்கை அடையாளச் சின்னங்களுடன் பின்னிப் படர்ந்து, பிரிக்க இயலாத வகையில் அமைந்திருக்கிறது.

எதற்கும் உருவகம் கொடுப்பது மனித இயல்பு. ஆகவே சமயத் துறையிலும் குறியீடுகள் மிகவும் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றன. பொதுவாகச் சாதாரண மனித அறிவுக்கு எட்டாமல் அதீதமாக விளங்கும் நுட்பமான ஆன்மிக உண்மைகளை எளிய முறையில் விளக்க உதவும் முயற்சியாகவே உருவங்களும் குறியீடுகளும் அமைந்திருக்கின்றன. ஆகவேதான் அடையாளச் சின்னங்களை அதிகமாகக் கையாள்வதோடு முக்கியத்துவம் கொண்டவையாகவும் மதங்கள் கருதுகின்றன.

“சிலுவை அடையாளம் கிறிஸ்துவ மதத்துடன் தோன்றியது என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் உலக வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்பே, மோஸஸ் என்பவரின் காலத்திற்கும் முன்பே, வேதங்கள் தோன்றிய காலத்துக்கும் முன்பே, மனிதஇனம் தன் எண்ணங்களை எழுத்தில் எழுதி வெளிப்படுத்திக் காட்டுவதற்கும் முன்பே, சிலுவை என்னும் சின்னம் இருந்திருப்பது தெரிய வரும். பண்டைக் காலத்திலேயே வட்டம் என்னும் சக்கர அடையாளமும் உலகம் முழுவதும் பரவி இருந்திருக்கிறது. எல்லா நாடுகளிலும் பரவியிருந்த ‘ஸ்வஸ்திக’ அடையாளம் புத்த மதத்தினரால் உலகில் பரப்பப்பட்டது என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஸ்வஸ்திக அடையாளம் புத்தமதம் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எங்கும் பரவியிருந்தது என்பது இக்கால ஆராய்ச்சி

யாளர்களின் முடிவு ஆகும்'' என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

மதத்துறையில் மக்கள் பயன்படுத்திவரும் குறியீடுகள் அனைத்தும் மனிதர்களால் உண்டாக்கப் பட்டவை அல்ல. மனிதகுலத்தின் நன்மைக்காகக் கடவுளே அவற்றை அருளியுள்ளார் என்பதுதான் மகான்கள் கண்ட உண்மை ஆகும்.

கிறிஸ்துவ மதம்

கிறிஸ்துவ மதம் கொள்கையளவில் உருவ அடையாளங்களை ஏற்க மறுத்திருக்கிறது. ஆனால் நடைமுறையில் அதிகமான அளவில் உருவங்களை யும் சித்திரங்களையும் கிறிஸ்தவர்கள் தங்கள் கோவில்களிலும் வீடுகளிலும் பயன்படுத்தி வருவதைப் பார்க்கலாம். உண்மை என்னவென்றால் இந்து மதத்துக்கு அடுத்தபடியாகக் கிறிஸ்துவ மதத் தில்தான் அதிகமான அளவில் அடையாளங்களும் உருவகங்களும் வழக்கத்தில் இருந்து வருகின்றன.

பண்டைக் காலத்தில் வாழ்ந்த அகஸ்டின் (Augustine) போன்ற கிறிஸ்தவத் துறவிகளும் தங்கள் மத உண்மைகளைக் குறியீடுகளின் மூலம் விளக்கியிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவும் புத்தரைப் போலவே உருவகக் கதைகளின் மூலம் மத உண்மைகளை விளக்கியிருக்கிறார். இது போலப் பல மதங்களையும் சேர்ந்த சான்றோர் உருவகக் கதைகளைத் தங்கள் கொள்கைகளை விளக்கும் சாதனமாகக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் சீடர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும் வகையில் கிறிஸ்துவ ஆலயங்களில் அந்தச் சீடர் களின் சித்திரங்களை வைத்திருக்கிறார்கள். ஜான் (St. John) கழுகுடனும், பீட்டர் (St. Peter) இரண்டு திறவுகோல்களுடனும், அந்திரேயர் (St. Andrew) சிலுவையில் சாய்ந்திருப்பது போல வும், பால் (St. Paul) ஒரு வாளையும் ஒரு புத்தகத் தையும் கையில் ஏந்தியிருப்பது போலவும் அமைந்த சித்திரங்களைக் கிறிஸ்துவத் தேவாலயங்களில் காண்கிறோம்.

க்ஷேத்திரகணித உருவங்களையும் (Geometrical figures) கிறிஸ்துவ மதத்தினர் அடையாளங் களாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். வட்டம் (circle) நித்திய வாழ்க்கையையும் (Eternal Life), சமமுக்கோணம் (Equilateral triangle) திரித்துவம் —பிதா, குமாரன், பரிசுத்த ஆவி (Trinity) எனப் படும் தத்துவத்தையும், எண்சதுர வட்டம் (Octagon) பாவ விமோசனம் அல்லது இரட்சிப் பையும் குறிப்பிடுகின்றன.

பைபிளில் இடம் பெற்றுள்ள வாக்கியங்களின் அடிப்படையில், நுட்பமான உண்மைகளை எளிய முறையில் விளக்குவதற்கும் எண்களைக் குறியீடு களாகக் கிறிஸ்துவ மதத்தினர் பயன்படுத்தி வருகிறார்கள்.

எண் ஒன்று என்பது, கடவுள்-ஜீவன் ஐக்கியத் தையும், எண் இரண்டு என்பது, உலகம்-ஜடப் பொருள்—உலகில் காணப்படும் பலவேறு வேற்றுமைகளையும், எண் மூன்று என்பது, பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்று வழங்கப்பெறும் திரித்துவத்தையும் குறிப்பிடுகின்றன என்று கூறப் படுகிறது.

பிற்காலத்தில் கிறிஸ்துவ மதத்தில் குறியீடுகள் பல்கிப் பெருகி வளர்ச்சியடைந்தன. இயேசு நாதரைக் குறிப்பிடும் வகையில் மீன்*, கிரீடம், தீபம் போன்ற அடையாளச் சின்னங்கள் வழக்கத் திற்கு வந்தன.

புரு பரிசுத்த ஆவியையும், நங்கூரம் கடவுள் நம்பிக்கையையும், காளைமாடு தன்னையே இறை வனுக்குச் சமர்ப்பிப்பது, அமைதி ஆகியவற்றையும், மயில் உயிர்த்தெழுவதையும், வண்ணத்துப் பூச்சி அமரத்துவத்தையும், நட்சத்திரம் குழந்தை இயேசுவைக் கிழக்கிலிருந்து மூன்று அரசர்கள் சென்று தரிசனம் செய்ததைக் குறித்துக் கொண் டாடப் பெறும் இபிபானி (Epiphany) என்னும் விழாவையும் நினைவுபடுத்தும் சின்னங்களாகக் கிறிஸ்துவ மதத்தினர் போற்றி வருகிறார்கள்.

கிறிஸ்துவ மதத்தில் ஏராளமான குறியீடுகள் இருந்தாலும் அவற்றுள் சிலுவையே முக்கியமானது. அது இயேசுநாதரின் துயரத்தையும் தியாகத் தையும் மக்களிடம் கொண்ட அன்பையும் குறிப் பிடுகிறது. சிலுவையில் இயேசு கிறிஸ்து மரண வேதனையை அனுபவித்ததைப் போல, அவரைப் பின்பற்றுபவர்களும் அவருக்காகத் துன்பத்தையும் துயரத்தையும் அவமானத்தையும் அமைதியுடன் தாங்கிக்கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் சிலுவை அடையாளம் உணர்த்துகிறது.

இயேசுநாதர் சிலுவையில் சிந்திய இரத்தம் மனி தனின் மூலப் பாவத்தை(Original Sin) அழிக்கிறது

* இயேசு கிறிஸ்து, தேவகுமாரன், இரட்சகர் என்னும் இயேசுநாதரின் மூன்று அம்சங்களை உணர்த்தும் கிரேக்க மொழித் தொடர்பான வார்த்தை.

என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலும் சிலுவை மனிதனைப் பாவத்திலிருந்து மீட்கும் அடையாளமாகக் கருதப்படுகிறது. மேலும், சிலுவையின் குறுக்காகக் காணப்படும் அமைப்பு தேவகுமாரனையும், நெடுக்காகக் காணப்படும் அமைப்பு பரிசுத்த ஆவியையும் குறிப்பிடுவதாகவும் கூறப்படுகிறது. கிறிஸ்தவ உலகில் மிகவும் புனிதமாகக் கருதப்படும் சிலுவைச் சின்னத்திற்கு வேறு சில விளக்கங்களும் உண்டு என்று கூறப்படுகிறது.

கிறிஸ்துவத் தேவாலயங்கள் பொதுவாக மாதா கோயில்கள் என்றே அழைக்கப்படுகின்றன. கத்தோலிக்கத் தேவாலயங்களில் கிறிஸ்துபெருமானின் உருவத்துடன் அவரது அன்னையாகிய மேரி மாதாவின் உருவமும் மிகவும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கிறிஸ்தவர்கள், குறிப்பாகத் தமிழ் பேசும் கிறிஸ்தவர்கள், மேரி மாதாவைப் பனிய மாதா, சகாய மாதா, தேவமாதா, வேளாங்கண்ணி மாதா, ஆரோக்கிய மாதா முதலிய பல பெயர்களில் அழைத்து வருகிறார்கள்.

சமீபத்தில் அன்னை பாத்திமாவின் உருவம் விசேஷ விமானத்தின் மூலம் பல நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டதையும், 1978 ஏப்ரல் 23-ஆம் நாள் அந்த உருவம் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் பக்தி சிரத்தையுடன் வரவேற்றதையும் அன்பர்கள் செய்திப் பத்திரிகைகளில் படித்திருப்பார்கள்.

மத்தியக் கிழக்கு நாட்டுச் சமயங்கள் (Semitic Religions)

இஸ்லாமிய மதம் ஆரம்பகாலத்தில் எந்தவித அடையாளச் சின்னத்தையும் உருவத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், நாளடைவில் இளம்பிறையும் நட்சத்திரமும் இந்த மதத்தின் அடையாளச் சின்னங்களாக இடம் பெற்றன என்று சொல்லப்படுகிறது.

இஸ்லாமிய அரசர்கள் தங்கள் ஆட்சியின் வல்லமையைப் பல நிறங்களைக் கொண்ட கொடிகளின் மூலம் உணர்த்தினர். இந்தியாவில் மொகலாய அரசர்கள் சித்திரக் கட்டடக் கலைக்குப் பெரிதும் ஆதரவு காட்டினர்.

பொதுவாக மதங்களில் கொள்கையளவில் அடையாளச் சின்னங்களுக்கு எதிர்ப்பு இருந்தபோதிலும், அடையாள உருவ வழிபாடுகள் அறிந்தோ அறியாமலோ மதவழிபாடுகளுள் இடம் பெற்றுவிடுகின்றன.

இஸ்லாமியர்கள் மசூதியில் வழிபடும்போது (நமாஸ்) உடல் உறுப்புக்களால் குறியீடுகள் செய்து வழிபடும் முறைகள் உண்டு. இவை நுண்ணிய கருத்தை உணர்த்தும் முத்திரைகள் என்று இஸ்லாமிய அறிஞர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

உதாரணமாக, தொழுகையின்போது இஸ்லாமியர்கள் இரண்டு கைகளையும் மேலே உயர்த்திக் கொண்டு தொழுவது ஒரு முறை. இந்தத் தொழுகை முறை, 'எல்லா உடைமைகளையும் விட்டு, எல்லாம் வல்ல ஆண்டவனைச் சரணாகதி அடைதல்' என்ற உண்மையை விளக்குவதாகக் கூறுகிறார்கள்.

சுவாமி விவேகானந்தர் தமது பக்தியோகச் சொற்பொழிவுகளில் இஸ்லாமிய மதத்திலும் அடையாளச் சின்னங்கள் உண்டு என்பதை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுகிறார்: "ஒவ்வொரு வைதிக இஸ்லாமியனும் எங்கோ பிரார்த்தனை செய்தாலும் தான் காபா[1]வுக்கு முன்னால் நிற்பதாகப் பாவிக்க வேண்டும். யாத்திரையாகக் காபாவுக்குப் போகும்போது மசூதியின் சுவரிலுள்ள கருங்கல்லை அவன் முத்தமிடல் வேண்டும். இலட்சக்கணக்கான யாத்திரிகர்களால் அந்தக் கல்லின் மீது பதிக்கப்பட்டுள்ள முத்தங்கள் எல்லாம் தீர்ப்புச் சொல்லும் இறுதிநாள்[2] அன்று (Day of judgement) நம்பிக்கையுள்ளவர்களின் நன்மைக்காக எழுந்து நின்று சான்று சொல்லும். இன்னும் 'ஜிம் ஜிம்' என்னும் கிணறு ஒன்று இருக்கிறது. அந்தக் கிணற்றிலிருந்து ஒரு சிறிது நீரை இறைப்பவன் எவனும் தன் பாவங்களிலிருந்து மன்னிக்கப் பெறுவான்."

யூத சமயம்

யூத மத சம்பிரதாயத்திலும் அடையாள முத்திரைகளும், நுண்பொருள் உண்மைகளை விளக்கும் இலச்

---

1 மெக்காவில் உள்ள இஸ்லாமியர்களின் புனித ஸ்தலம்.

2 உலகம் அழிந்தபிறகு இறந்தவர்கள் அனைவரும் கல்லறைகளிலிருந்து எழுந்திருப்பார்கள்; கடவுள் வந்து அவரவர் செய்த புண்ணிய பாவத்துக்கு ஏற்பச் சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் அவர்களை அனுப்பி வைப்பார்; சுவர்க்கத்துக்குச் செல்பவர்கள் என்றென்றைக்கும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்; நரகத்துக்குச் செல்பவர்கள் அனைவரும் முடிவில்லாத நரகவேதனையை அனுபவிப்பார்கள் என்று இஸ்லாம் கருதுகிறது.

ஆர்க்காடு ஸ்ரீராமகிருஷ்ண-விவேகானந்த மன்றத்தின் ஆதரவில் நடந்துவரும் ஸ்ரீராம கிருஷ்ண வித்யாலயா நர்சரிப் பள்ளி கட்டிட நிதிக்காக 24-9-78 ஞாயிற்றுக் கிழமையன்று திரு.சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் இன்னிசைக் கச்சேரி நடந்தது. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றியும் சுவாமி விவேகானந்தரைப் பற்றியும் மற்றும் பல தெய்விகப் பாடல்களையும் பாடினார். செங்கல்பட்டு ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி யதிராஜானந்த மகராஜ் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்கள். நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சிலைகளும் உண்டு. யூதர்கள் உருவ வழிபாட்டை ஏற்றுக் கொள்ளாத போதிலும், உருவ வழிபாட்டுடன் தொடர்பு கொண்ட கொள்கைகளின் ஆதிக்கம் யூத மதத்தையும் விட்டு வைக்கவில்லை. அவர்கள் தங்கள் கோவில்களில் ஒரு பெட்டிக்குள் சமயச் சட்டப் புத்தகங்களையும், பெட்டிக்கு மேல் இறக்கையை விரித்துக்கொண்டு இரண்டு தேவதைகளின் உருவங்களையும் வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு தேவதைகளுக்கும் மத்தியில் கடவுள் மேகம் போல வியாபித்திருக்கிறார் என்பது அவர்களின் கொள்கை.

பாரசீகர்களும் ஈரானியர்களும் அக்கினியைச் சூரியனின் பிரதிநிதியாகப் பாவித்து வழிபடுகிறார்கள்.

கிழக்காசிய நாட்டுச் சமயங்கள்

புத்த மதம்

இந்து மதத்தின் சில உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்டு நிறுவப்பட்ட மதம் புத்த மதம் என்று சொல்லலாம். புத்த மதத்திலும் அடையாளங்களும் குறியீடுகளும் நிரம்ப உண்டு. புத்தர் நிர்வாணம் அடைந்து சில ஆண்டுகளுக்குள்ளாகவே அவரைப் பின்பற்றியவர்கள் அவரது நினைவாக ஸ்தூபிகளையும் ஆலயங்களையும் எழுப்பினார்கள். ஆலயங்களில் உயர்ந்த பீடங்கள் அமைத்துப் புத்தரின் கருணை ததும்பும் கவர்ச்சிகரமான சிலைகள் நிறுவப்பட்டன. ஆலயச் சுவர்களில் புத்தரின் வாழ்வைச் சித்திரிக்கும் ஓவியங்கள் வரையப்பட்டன. மஞ்சள் அங்கியும் பிட்சாபாத்திரமும் அரசமரமும் புத்தரை நினைவுபடுத்தும் புனிதச் சின்னங்களாக வழங்கி வருகின்றன. பௌத்த மன்னர்கள் புத்தபிக்குகளின் ஆலோசனையின்படி பெரும் விஹாரங்களைக் (தாதுகோபம்)* கட்டினார்கள். எகிப்து நாட்டுப் பிரமிட்டுகள் போன்ற வானளாவிய பெரும் விஹாரங்களை இலங்கையில் புத்தமத அரசர்களின் பழைய நகரங்களில் இன்றும் காணலாம். இத்தகைய விஹாரங்களைப் பௌத்தர்கள் பகவான் புத்தரின் பெருமையை விளக்கும் அடையாளமாகக் கருதுகிறார்கள்.

புத்தரின் மறைவிற்குப் பிறகு நாளடைவில் எழுந்த பௌத்த ஆலயங்களில் பூஜைகள் திருவிழாக்கள் என்றெல்லாம் கிரியைகளும் குறியீடுகளும் பெருகின. பண்டைக்கால இந்து மதத்தில் ஆலயங்களோ விக்கிரக வழிபாடோ இருந்ததில்லை. இந்துக்கள் இயற்கை வனப்புடன் கூடிய பரந்த வெளி, நதியோரம், மலைச்சாரல் போன்ற இடங்களில் பரம்பொருளைத் தியானித்தார்கள். புத்தமதத்திலிருந்தே ஆலயங்களையும் உருவ வழிபாட்டு முறைகளையும் திருவிழாக்களையும் இந்துமதம் ஏற்றுக் கொண்டது. இந்து மதத்திலுள்ள கிரியைப் பகுதிகளையும் புரோகிதர்களையும் எதிர்த்து எழுந்த புத்தமதமே இந்து மதத்திலும் தன்னிடமும் மேலும் மேலும் கிரியைகளும் புரோகிதர்களும் பெருக வழி செய்தது.

புத்த ஆலயங்களில், குறிப்பாக இலங்கையில், பௌத்த ஆலயங்களில் இந்துமத தெய்வங்களாகிய சிவன் விஷ்ணு விநாயகர் முருகன் போன்ற வேறு பல தேவர்களின் உருவங்கள் இடம் பெற்றுள்ளன.

எட்டு ஆரங்களையுடைய தர்மசக்கரம் புத்தர் பிரான் போதித்த அஷ்ட சீலங்களை** உணர்த்துகிறது. நமது நாட்டின் தேசீயக் கொடியிலும் தர்ம சக்கரம் இடம் பெற்றுள்ளது. பண்டைக் காலம் முதலே உலகின் பல பாகங்களிலும் பரவியிருந்த ஸ்வதிக அடையாளமும் தற்காலத்தில் புத்த மதத்தின் அடையாளங்களில் ஒன்றாகக் கருதப் படுகிறது.

---

* புத்தரின் அல்லது விசேஷப் பெருமை பெற்ற புத்தபிக்குகளின் அஸ்திகளைக் கருவாகக் கொண்டு உலோகத்தால் அமைக்கப்பட்ட சிறு மலைக்குன்று போன்ற அமைப்பு.

** அஷ்ட சீலங்களாவன: நல்அறிவு, நல்நினைவு, நற்பேச்சு, நற்செயல், நல்வாழ்வு, நன்முயற்சி, நல்விழிப்பு, நல்ஒருமை.



பரமஹம்சரும் பட்டதிரியும்

'உபன்யாசக ரத்னம்' B. சுந்தரராமன்
B.A., B.Ed.

பாகவதத்தின் சாரமாகவும் பக்தி ததும்புவதாக வும் அமைந்துள்ள ஸ்ரீமத் நாராயணியத்தை இயற்றிய மேப்பத்தூர் நாராயண பட்டதிரியும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும் தம்தம் கருத்துக்களில் பல இடங்களிலும் ஒன்றுபடுகிறார்கள்.

பரமஹம்சரிடம் அம்பாளின் சக்தி நேரிடையாகப் பேசியது. பட்டதிரியுடன் குருவாயூர் அப்பன் நேரில் பேசினான். 'அரியலால் தேவியில்லை' என்ற உயர்ந்த தத்துவத்தை இவ்விரு சான்றோர்களும் முற்றும் உணர்ந்தும் உபதேசித்தும் இருக்கிறார்கள்.

'பிரம்மமாகிய சமுத்திரத்தில் ஈசுவரன் அமிழ்ந்து ஓரிடத்தில் கிளம்பும்போது கிருஷ்ணன் என்றும், மறுபடியும் மூழ்கி வேறு இடத்தில் கிளம்பும்போது இயேசு கிறிஸ்து என்றும் அழைக்கப்படுகிறார்' என்கிறார் பரமஹம்சர். இதையே பட்டதிரி,

> தத்ரேச்வரஸ்து ஸ விகுண்டபதஸ் த்வமேவ
> த்ரித்வம் புநர் பஜஸி ஸத்யபதே த்ரிபாகே[1] |

என்கிறார். மூன்றாக இருக்கும் பிரம்மலோகம், வைகுந்தம், சிவலோகம் ஆகியவற்றில் குருவாயூரப்பனே பிரம்மா, விஷ்ணு, சிவனாக இருக்கிறார் என்பது இந்தச் சுலோகத்தின் பொருள்.

"தேனீ சேகரித்துவைத்த தேனையெல்லாம் உலக மக்கள் அபகரித்தனர். அதைப் பார்த்த அவதூதத் துறவி, நாளைக்கு என்று எதையும் தேடி வைக்கக் கூடாது என்ற பாடத்தைக் கற்றுக்கொண்டார்" என்று பரமஹம்சர் தெரிவிக்கிறார். இதையே பட்டதிரி,

> மாபத்தம் யோஷிதாதேள சிகிநி சலபவத் ப்ருங்கவத் ஸாரபாகீ
> பூயாஸம் கிந்து தத்வத் தநசயநவசாந் மாஹமீச ப்ரணேசம்[2] |

என்பார். "குருவாயூரப்பா! புஷ்பங்களிலிருந்து சாரத்தை மட்டுமே கிரகிக்கும் வண்டு போல நான் இருப்பேனாக. ஆனால், நான் அந்த வண்டு போல் பொருளைத் திரட்டுவதிலும் சேமிப்பதிலும் ஈடுபட்டு நாசமடையாமல் இருக்க வேண்டும்" என்பது இந்தச் சுலோகத்தின் பொருளாக அமைந்திருக்கிறது.

"சாதகன் ஒருவன் தனிமையில் இருந்து ஆத்ம சாதனைகள் பழக வேண்டும். அது அவனுக்கு மிகுந்த நன்மையைத் தரும்" என்று பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஏகாந்த நாமஜபம் பற்றிப் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கிறார். இதே கருத்தைத் தமது நாராயணியத்தில் பட்டதிரி,

> பவத்பாதாம்போஜஸ்மரணரஸிகோ நாமநிவஹாந்
> அஹம் காயம்காயம் குஹசந விவத்ஸ்யாமி விஜநே[3] |

என்று, "தங்களுடைய தாமரை போன்ற சரணங்களை ஸ்மரிப்பதிலேயே ஈடுபட்டவனாகத் தங்கள் பெயர்களைப் பாடிப் பாடி எங்காவது ஏகாந்தத்தில் வசித்து வருகிறேன்" என்று கூறுகிறார்.

"ஒரு மனிதனுடைய எண்ணத்துக்கும் நோக்கத்துக்கும் தக்கபடி அவனுக்கு வெகுமதி கிடைக்கிறது. ஈசுவரன் பக்தர்கள் விரும்புவனவற்றை எல்லாம் கொடுக்கும் கற்பக விருக்ஷம் போன்றவன்" என்று பரமஹம்சர் தமது உபதேச மொழிகளில் தெரிவிக்கிறார். இதையே பட்டதிரி,

1. ஸ்ரீமத் நாராயணியம், தசகம் 90, சுலோகம் 2.
2. ஸ்ரீமத் நாராயணியம், தசகம் 3, சுலோகம் 2.
3. தசகம் 3, சுலோகம் 2.

இத்தம் நிச்சேஷலப்யோ நிரவதிகபல: பாரிஜாதோ
ஹரே த்வம்
க்ஷுத்ரம் தம் சக்ரவாடித்ருமமபிலஷதி
வ்யர்த்தமர்த்திவ்ரஜோயம்[4] |

என்ற சுலோகத்தில், ''குருவாயூரப்பனுகிய பாரிஜாத மரம் (கற்பகத்தரு) எல்லாராலும் அடையக் கூடியது. பக்தர்கள் விரும்பாத பொருள்களையும் போகங்களையும்கூடத் தருகிறது. இது அனைவராலும் சுலபமாக அடையத் தகுந்ததாயும் இருக்கிறது. அளவு கடந்த பயன்களையும் கொடுக்கிறது. இவ்விதம் இருக்கும்போது, யாசகர்களின் கூட்டம் வீணுக இந்திரலோகத்திலுள்ள பாரிஜாத மரத்தை விரும்புகிறது'' என்ற கருத்தை விளக்குகிருர்.

பரமஹம்சதேவர், ''அஷ்ட சித்திகளைக் கண்டாலே எனக்குத் திகில் உண்டாகிறது'' என்று கூறியிருக்கிருர். மேலும் அவர், ''தாழ்ந்த சுபாவம் உள்ள மக்கள்தாம் வியாதிகளைக் குணமாக்குவது, நீதி மன்றத்தில் தொடுக்கும் வழக்குகளில் வெற்றி பெறுவது, தண்ணீர் மேல் நடப்பது முதலிய சித்திகளை நாடி ஓடுவார்கள். உண்மையான பக்தன் இறைவனின் தாமரைத் திருவடிகளில் பக்தி செலுத்துவதைத் தவிர வேறு எதையுமே நாடுவதில்லை'' என்கிருர். சித்திகளைப்பற்றிப் பட்டதிரியும் பின்வருமாறு கூறுகிருர் :—

இத்தம் த்வத்த்யாநயோகே ஸதி புநரணிமாத்யஷ்ட-
ஸம்ஸித்தயஸ் தா:
தூரச்ருத்யாதயோபி ஹ்யஹமஹமிகயா ஸம்பதேயுர்
முராரே |
த்வத்ஸம்ப்ராப்தௌ விலம்பாவஹமகிலமிதம் நாத்ரியே
காமயேஹம்
த்வாமேவாநந்தபூர்ணம் பவநபுரபதே பாஹி மாம்
ஸர்வதாபாத் ||

இதன் பொருள் : ''முரனைக் கொன்ற கிருஷ்ணு! தங்களைத் தியானிப்பதாகிய யோகத்தைப் பழகும் போது அணிமா முதலிய எட்டுப் பெரிய சித்திகளும், வெகு தூரத்தில் பேசுவதைக் கேட்கும் சித்தி, வெகு தூரத்தில் நடப்பதைப் பார்க்கும் சித்தி ஆகியவை 'நான் முந்தி, நீ முந்தி' என்று என்னிடம் வந்து அடையும். தங்களை அடைவதில் இடையூறு விளைவிக்கும் அவை எல்லாவற்றையும் நான் ஆதரிக்கமாட்டேன். ஆனந்தபூர்ணராகிய தங்களையே நான் விரும்புகிறேன்.''[5]

ஸ்ரீராமகிருஷ்ண பகவான், ''பறவையின் கண்ணைக் குறிவைத்து அர்ஜுனன் அம்பு எய்த போது, அவன் உள்ளத்திலிருந்து ஏனைய எல்லா எண்ணங்களும் அகன்றுவிட்டன. குறியும் குறி வைத்தவனும் ஒன்றுபட்டுவிட்டார்கள். ஆதலால் அந்த இலக்கை அவனுல் அடிக்க முடிந்தது. எவனுக்குப் பகவான் மட்டுமே இலக்கு ஆகிருரோ அவனது உள்ளத்திலிருந்து ஏனைய எண்ணங்களெல்லாம் அகன்றுவிடுகின்றன'' என்று கூறுகிருர். இந்தக் கருத்தைப் பட்டதிரியும், ''த்வச்சித்தோ நாவடித்யை பரமிஷுக்ருதிவ ச்க்ஷ்மாப்ருதாயாந-கோஷம்'' என்று குறிப்பிடுகிருர். ''குறிவைத்து அம்பு போடுபவன், அரசன் வரும்போது ஏற்படும் வாத்திய முழக்கத்தை எவ்விதம் அறியமாட்டானே, அவ்விதம் தங்களையே நினைப்பவனுக வேறு ஒன்றை நினைக்காமல் இருப்பேனுக!'' என்று பட்டதிரி குருவாயூரப்பனைப் பிரார்த்திக்கிருர்.

ஸ்ரீராமகிருஷ்ணதேவர் சிருஷ்டியை வேதங்கள்* சிலந்தியின் செயலோடு ஒப்பிடுவதைக் கூறுகிருர். ''சிலந்திப்பூச்சி தன்னிடமிருந்து வலை ஒன்றைத் தோற்றுவித்து, அந்த வலைமீது அமர்ந்திருக்கிறது. இறைவனும் தன்னிடமிருந்தே பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து, அந்தப் பிரபஞ்சத்திலேயே அந்தர்யாமியாக இருக்கிருர்'' என்பது ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள்வாக்கு. இதைப் பட்டதிரி,

த்வய்யேவ த்வத்க்ருதம் த்வம் க்ஷபயஸி
ஜகதித்யூர்ணநாபாத் ப்ரதீயாம் |

''தங்களால் சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தைத் தங்களிடத்திலேயே லயிக்கச் செய்கிறீர்கள் என்பதை, நூல் போன்றதால் வீடு கட்டிய பிறகு அதைத் தானே இழுத்துக்கொள்ளும் சிலந்திப் பூச்சியிடமிருந்து அறிந்து கொள்ளுவேன்''[6] என்கிருர்.

பொன்னுல் வெவ்வேறு ஆபரணங்கள் செய்யப்படுகின்றன. மண்ணுல் வெவ்வேறு பாண்டங்கள் செய்யப்படுகின்றன. ஒரே ஆத்மா வெவ்வேறு உடல்களில் பிரகாசிக்கிறது. ஒரே சப்த ஸ்வரங்கள் தாம் ஊருக்கு ஒரு வகையாக இசைக்கப்படுகின்றன. அது போன்று ஒரே கடவுள் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிருர். இந்த உண்மையைப் பரமஹம்சரும் பட்டதிரியும் அனுபூதியின் மூலம் உணர்ந்திருந்தார்கள். தமது வாழ்வாலும் வாக்காலும் ஸ்ரீராமகிருஷ்ணதேவர் அதை மிகவும் எளிய முறையிலும் மனிதகுலம் முழுவதும் ஏற்கும் வகையிலும் தெளிவாக விளக்கினுர். ✩

4. ஸ்ரீமத் நாராயணீயம், தசகம்1, சுலோகம் 8.
5. நாராயணீயம், தசகம் 95, சுலோகம், 10.

* எப்படிச் சிலந்திப்பூச்சி தன்னிடமிருந்தே நூலை உண்டாக்கித் தனக்குள்ளேயே இழுத்துக்கொள்ளுகிறதோ, எப்படிப் பூமியில் செடிகொடிகள் உண்டாகின்றனவோ, எப்படி ஜீவபுருஷனிடம் (உயிருள்ள உடலில்) உரோமம் முயற்சியின்றித் தானே வளர்கிறதோ அப்படியே அட்சரப் பிரம்மத்திலிருந்து இந்த உலகம் உண்டாகிறது—முண்டக உபநிஷதம்.

6. நாராயணீயம், 93-8.

ஜீவ யாத்திரை



கவியோகி சுத்தானந்த பாரதியார்

உடல் உயிர் ஆராய்ச்சியே அறிவின் அடிப்படையாக விளங்குகிறது. ‘உடலுக்குள் இருப்பது எது? எப்படி இருக்கிறது? இறப்பது எது? எப்படி இறக்கிறது? உடலை நீப்பது எது?’ என்று ஆராய்ந்தால், ஸ்தூல உடலில் சுத்தான்மா இருப்பது புலனாகும்.

சுத்தான்மா பிறப்பற்ற தூய சுதந்திரப் பொருள். அதற்கு உடல் இல்லை, மனம் இல்லை, விருப்பு வெறுப்பு என்ற இரு விகாரங்கள் இல்லை. மனதின் பலவித விகாரங்களே சுத்தான்மாவைப் பிறவிக்கும் மரணத்துக்கும் இழுத்தடிக்கின்றன. உடல்தான் உண்மையில் பிறக்கவும் இறக்கவும் செய்கிறது. உடலை உதறிச் செல்லும் ஆன்மாவுடன் சூட்சும சரீரமாகிய மனம் தொடர்கிறது. மனம் சங்கற்ப மூட்டை; அந்த மூட்டையில் முன்வினைகள் அனைத்தும் குவிந்து கிடக்கின்றன.

பிராணனுடன் பொறி புலன்களால் மனதில் படிந்த வினைகளும் தொடரும். இந்த வினைத் தொகுதியே மறுபிறவிக்கு வித்தாக அமைகிறது. சூட்சும சரீரத்தில் சொல் செயல் சிந்தனைகளால் செய்த வினைகளுடன் புலன் உணர்வுகளும் கூடச் செல்லும். ‘நீர் சூழ்ந்து செல்லும்’ என்கிறார் வியாசர். உடலில் பெரும்பகுதி நீர். அந்த நீருடன் வான், காற்று, தீ ஆகிய மூன்று பூதங்களும் கலந்திருக்கின்றன. “இறப்பவனுடைய குரல் அக்கினியிலும், உயிர்ப்பு காற்றிலும் லயமாகும்; ஆன்மாவுடன் பிராணசக்தியும் தொடரும். அத்துடன் மனம் பொறி புலன்களும் தொடரும்” என்று பிருகதாரண்யகம் குறிப்பிடுகிறது.

ஒவ்வொருவரும் அவரவர் வினைப்பயனுக்கு ஏற்ற நிலையைப் பெறுகின்றனர். இறந்து போன ஆன்மாவை, ‘நீ என்ன சாதி? என்ன மதம்? என்ன படித்திருக்கிறாய்? உனக்கு என்ன பட்டம் பதவி சொத்து?’ என்று யாரும் விசாரிக்கமாட்டார்கள். இந்த விவகாரமெல்லாம் உடலுடன் சரி. ‘நீ உலகில் வாழும்போது இன்னது செய்தாய்; அதன் பயனை அனுபவி’ என்பதுதான் தீர்ப்பாக அமைகிறது. புண்ணியம் செய்த சுத்தாத்மாக்கள் மேலான நிலையில் பேரின்பம் பெறுகின்றன.

‘ஆன்மாக்கள் தேவர்களுக்கு உணவு’ என்கிறது சாந்தோக்யம். அதனால் தேவர்கள் ஆத்மாக்களை அள்ளி விழுங்கும் அரக்கர்கள் என்று நாம் நினைத்து விடக் கூடாது. ஆன்மாக்கள் பக்குவத்திற்கு ஏற்றபடி தெய்வத்தன்மை பெற்று, தேவருடன் ஒன்றாகி இன்புறுகின்றன. ஆத்மா சூட்சும சரீரத்தைக் கொண்டு புண்ணிய பலனை நுகர்கிறது. அவ்விதம் புண்ணிய பலனை அனுபவித்த பிறகு மீண்டும் உலகில் வந்து பிறக்கிறது. புண்ணியம் பாவம் என்ற இரண்டு விதத் தளைகளும் நீங்கப்பெற்று, தானே தானான சுத்த முக்த சமத்துவ நிலையைப் பெறும் வரையிலும், ஆன்மா வினைப்பயன்களை நுகர்வதற்காக அங்கும் இங்கும் அலைந்து திரிகிறது. “வானிலும் கர்மபலனை அனுபவித்த பின்பு ஆன்மாக்கள் உலகிற்குத் திரும்புகின்றன.” (சாந்தோக்யம்)

வினைப்பயனை அனுபவிப்பதே வாழ்க்கையாகும். மனிதனின் அந்தக்கரணங்களில் வினைத்திரள் மலை மலையாகக் குவிந்து கிடக்கிறது. ஒரு வினைப்பயனை நுகர்ந்தானதும் இன்னொரு வினை பிடித்திழுக்கிறது. ஒரு புண்ணியச் செயலால் சுவர்க்க இன்பம் நுகரும் ஆன்மா, அந்தப் புண்ணியம் தீர்ந்தவுடன் தன்னுள் அடைந்து கிடக்கும் சஞ்சித, ஆகாமிய, பிராரப்த கர்மங்களில் மீதியை அனுபவிக்க மீண்டும் பிறவியில் உந்தித் தள்ளப்படுகிறது. எஞ்சியுள்ள கர்மத்தின் இயல்பிற்கு ஏற்பப் பிறவியும் தொடருகிறது. தெய்வபக்தியும் ஒழுக்கமும் கொண்ட ஆன்மா சன்மார்க்கிகளின் வீட்டில் பிறந்து முன்பு விட்ட தவக்குறையை நிறைவேற்றுகிறது. தீவினை புரிந்த ஆன்மா அதை அனுபவிக்கத் தீய பிறவியைப் பெறுகிறது. வினையிலிருந்து யாரும் தப்பிவிட முடியாது. இரகசியமாகவோ தந்திரமாகவோ யாருக்கும் தெரியாமல் செய்துவிட்டோம் என்று மகிழ்ச்சியடைய முடியாது. மனச்சாட்சி நம்முள் என்றும் விழித்திருந்து வழி காட்டுகிறது. ஓசைப்படாமல் திருடினால் ஊரை ஏமாற்றலாம். ஆனால் மனச்சாட்சி, ‘அடே திருட்டுப் பயலே! உன் பாவத்தை அனுபவி’ என்று நரகவேதனையில் தள்ளும்.

ஆகவே எல்லா மதங்களும் தீமையை விலக்கி நன்மையே செய்ய வற்புறுத்துகின்றன. சுவாமி விவேகானந்தர் தெளிவாக எடுத்துக்காட்டியதைப் போல, தெய்வபக்தியும் பொதுநலத் தொண்டுமே வாழ்க்கையின் இலட்சியங்களாகும். இந்த இரண்டிலும் கருத்தும் செயலும் ஊன்றி வாழும் ஆன்மா நற்பேறு பெறுகிறது.

ஆணவத்திமிரும் போர்க்கோலமும், கொலையும் புலையும், காமவேட்கையும், வஞ்சகமும் கொள்ளையுமாக வாழ்ந்த ஆன்மாவுக்கு உய்வில்லை. அது இங்கும் அங்கும் நரகத்தை அனுபவித்துத் தீய வினைகளைச் சுமந்து அலைகிறது. அது தீவினைச் சிறையின் கைதியாகித் துன்ப விலங்கைச் சுமக்கிறது.

கடவுளுக்காகவும், கடவுள்மயமாகிய உயிர்களுக்காகவும் தானம் தவம் வேள்வி முதலியவற்றை மேற்கொள்ளும் ஆன்மா சுவர்க்கானுபவம் பெறுகிறது. பொதுநல வேள்விகளின் பயனைச் சந்திரலோகத்தை நுகர்கிறது.

சுயநலத் திமிரும் பேராசையும் பொறாமையும் கொண்ட ஆன்மா, யமனிடம் சிக்கி நரகவேதனைப் படுகிறது. யமனிடம் சிக்குவதற்கும் முன்பே உலக வாழ்க்கையிலேயே அதை மனச்சாட்சி ரம்பம் போல அறுக்கிறது. 'அட பாவிப் பழிகாரா!' என்று சுடுகிறது. அதோடு உலகமும் பாவியைப் பழித்துப் பேசுகிறது. ஆதலால் இருவினைப் பயன்களை மனிதன் இங்கேயும் அனுபவிக்கிறான். சித்திரகுப்தனின் கணக்குக்கு யாருமே தப்ப முடியாது. சித்திரகுப்தன் எங்கு இருக்கிறான்?

அவரவர் சித்தமே சித்திரகுப்தனின் இருப்பிடம்; அவரவர் சித்தவிருத்திகளே கணக்கு. கனவிலும் இந்த வினைச் சித்திரங்கள் வந்து நாடகமாடுகின்றன. மரணத் தறுவாயில் ஒருவனுள் இந்தச் சித்திர நாடகம் வெகு விரைவாகச் சலனப்படம் போலச் சுழன்றோடும். முன்பு செய்த வினைகளெல்லாம் உருக்கொண்டு விளையாடும். எந்த வினை அதிகமோ அதுவே அடிக்கடியும் வரும்; நினைவில் தாண்டவமாடும். எந்த வினைச் சித்திரம் அதிகமாக நினைவில் விளையாடுமோ அதில் அந்தக்கரணசக்தி பாய்கிறது. அதிலேயே தோய்ந்த ஆன்மா அதற்கு ஏற்ப மறுபிறவியை எடுக்கிறது.

கொலையிலேயே கொழுத்த ஒருவன் மரணசமயத்திலும் கொலைக் காட்சிகளையே காண்கிறான். அவனது ஆன்மாவும் ரௌரவாதி நரகத்தை அடைந்து கொடிய வினைப்பயனை அனுபவிக்கிறது என்கிறது சாந்தோக்யம்.

சுவர்க்கம் சென்றவர்களும் நல்வினைப் பயனை நுகர்ந்த பிறகு மண்ணுலகம் திரும்புகிறார்கள். அங்கே செல்பவர்கள் குறைவு; அங்கிருந்து திரும்பி வருபவர்களே அதிகம்.

அறிவு, செயல் ஆகிய இரண்டும் நினைவை இயக்குகின்றன. நினைவே மனிதன்; நினைவே வாழ்க்கை. தன்னறிவும் நற்செயலும் கொண்டவர்கள் இவ்வுலகிலும் புண்ணிய விண்ணுலகிலும் இன்புறுவார்கள். வினை மிச்சம் இருந்தால் அதற்கு ஏற்ற பிறவியை அடைவார்கள். நல்வினை கொண்ட ஆன்மா சூட்சுமமாகச் சூட்சும ஆகாசத்தில் ஏறிச் சென்று நல்வினைக்கு ஏற்ற பயனைச் சந்திரலோகத்திலோ இந்திரலோகத்திலோ அனுபவித்து வினைமிச்சத்தை நுகர உலகில் பிறக்கிறது.

தீவினை கொண்ட ஆன்மா நரகத்தை அனுபவித்து மீண்டும் தீவினையை அனுபவிக்க உலகில் புல் புழு பூச்சி பாம்பு பல்லி பறவை ஆடு மாடு முதல் மனிதன் வரையிலும் எந்தப் பிறவியிலும் உந்தித் தள்ளப்பட்டுத் துன்புற்று, தனு கரண புவன போகாதி பழுத்துப் பரிபக்குவம் அடைந்து, படிப்படியாகத் தன்னுணர்வு பெற்று மேலேறுகிறது. இந்த அசுத்தப் பிறவிகளில் சுத்தான்மா கட்டுப்பட்டதா என்றால் இல்லை. வினை நுகர்ச்சிகள் வினையால் பெறப்படும் உடலுக்கே அமைகின்றன. நாடகத்தில் உடலும் உணர்வும் நவரசம் போட்டு நடிக்கின்றன. அரசனாக நடிப்பவன் தான் அரசனல்ல என்பதை உணர்வான். அரிச்சந்திரத் தோட்டியாக நடிப்பவன், தான் தோட்டியுமல்ல, அரிச்சந்திரனுமல்ல; சத்தியாவின் கணவனாகிய மாதொருபாகனே தான் என்பதை நன்கு அறிவான். அது போலவே, அறிவு முதிர்ச்சி பெற்றவன், தான் இந்த உடலோ மனமோ அல்ல; தான் நிரஞ்ஜனமான சுத்தான்மா என்பதை அறிவான். இந்த அறிவு வந்தால், அதிலேயே அந்தக்கரணம் ஊறினால், வினைகள் தீர்ந்த மனப்பரிபாகம் பெற்றால், பிறவியை வென்று சுத்தமுக்தி பெறலாம். ☆

கடவுள் எங்கோ வெகு தொலைவில் இருக்கிறார். ஆனால், பிரார்த்தனையோ அவரைப் பூமிக்கு இழுத்துக்கொண்டு வருவதுடன், அவருடைய சக்தியையும் நம்முடைய முயற்சியையும் இணைக்கிறது.

—மாட் டி காஸ்பெரின்

தியான வேளையிலே....

எப்.ஜே.அலெக்சாண்டர்

1

தியான வேளையிலே மனித வடிவில் வந்த தெய்வமாகிய குருவின் குரல் கூறுகிறது:—

"இதோ பார்! நான் என்றென்றும் எப்போதும் உன்னுடனேயே இருக்கிறேன். நீ எங்கே சென்றாலும் சரி, உனக்கும் முன்னால் நான் அங்கே இருக்கிறேன். நான் உனக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கிறேன். நான் தேடிச் சேர்த்த அனுபூதியாகிய செல்வம் முழுவதையும் உனக்கே மரபு உரிமையாக உன் பொறுப்பில் ஒப்படைக்கிறேன். நீயே எனது இதயப் பொக்கிஷமாகவும் கண்ணின் மணியாகவும் விளங்குகிறாய்.

"கடவுளிடம் நீயும் நானும் ஒன்றாகவே இருக்கிறோம். பரம்பொருளைச் சாட்சாத்கரித்து அனுபூதியில் உணர்ந்துகொள்ளுவதுதான் நமது வேலை. ஆகவே இந்தப் பயனற்ற உலகமாகிய காட்டிலும் சந்தேகங்களிலும் உன்னைத் தள்ளிவிட நான் பயப்படவில்லை—அவ்வளவு தூரத்திற்கு மிகத் தெளிவாகவே நீயும் நானும் ஒன்றுதான் என்பதை அனுபவபூர்வமாக உணர்கிறேன். காரணம், உன் சக்தியின் அளவை நான் அறிந்திருக்கிறேன். ஓர் அனுபவத்துக்குப் பிறகு மற்றோர் அனுபவம் என்று இப்படிப் பலவிதமான அனுபவங்களை நீ பெறுவதற்காகவே நான் உன்னை அனுப்பி வைத்தேன். ஆனால் அவ்விதம் அனுபவங்களைப் பெறுவதற்கு எங்கெல்லாம் நீ அலைந்து திரிந்தாலும் என் கண் உன்னைத் தொடர்ந்தே வருகிறது. நீ பாவம் செய்கிறாயா? அப்படியானால் நீ அதை என் முன்னிலையில் தான் செய்கிறாய். நீ புண்ணியச் செயல்களில் ஈடுபடுகிறாயா? அதையும் நீ என் முன்னிலையில்தான் செய்கிறாய். உன் செயல்கள் எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். உன் மன நிலைகள் (உயர்ந்தவையாயும் தாழ்ந்தவையாயும் சித்தத்தில் எழும் விருத்திகள், எண்ணங்கள்) எல்லாவற்றையும் நான் அறிவேன். நம் இருவரையும் பிணைத்திருக்கும் பந்தத்தை (குருவுக்கும் சீடனுக்கும் இடையே ஏற்படும் புனிதமான தெய்விகம் ததும்பும் உறவை, தொடர்பை), பல திறப்பட்ட எல்லா அனுபவங்களின் மூலமும் சிந்தனைகளின் மூலமும் இறுக்கி நான் பலப்படுத்துகிறேன்.

"முக்தி பெறுவதில் நீயும் பங்கு கொண்டால் அல்லாமல், நான் என் சொந்த விடுதலையை, மோட்சம் பெறுவதைப் பொருட்படுத்த மாட்டேன். வேறு ஒரு வடிவத்தில் உள்ள என் ஆத்மாவாகவே நீ இருக்கிறாய்.

"நீ என் புனிதமான ஞானதிருஷ்டியை (Vision) உணர்ந்து, அதை நீ உன் வசமாக்கிக்கொண்டு அதிலேயே தோய்ந்து போய்விடு; எவ்வளவுக்கு எவ்வளவு இதை நீ செய்கிறாயோ அவ்வளவுக்கு அவ்வளவு ஏகத்துவம் என்ற ஆன்மிக ஞானமாகிய ஒருமைப்பாட்டில் வளர்ந்து, தெய்விக வாழ்க்கையில் நாம் ஒன்றுபட்டு வருவதைக் காண்பாய். அந்த நிலையில் தனித்துவம் என்னும் பொய்யான ஜீவவியக்தியின் திரைகள் வீழ்ந்து மறைந்துவிடும்; அப்போது நீ என் சொந்த ஆத்மாவாகவே இருப்பதையும் நான் உன் சொந்த ஆத்மாவாகவே இருப்பதையும் உணர்ந்துகொள்ளுவாய். நம் இருவருக்கும் உள்ள தொடர்பு அவ்வளவு நெருக்கமாக இருந்துகொண்டிருக்கிறது. உன்னிடம் எனக்கு உள்ள உறவை மரணமோ, தனியாகப் பிரிந்திருக்க நேர்வதோ தடுத்து நிறுத்த இயலாது. அவற்றுக்கு இந்த உறவைத் துண்டிக்கவோ அதன்மீது ஆதிக்கம் செலுத்தவோ ஆற்றல் கிடையாது. ஏனென்றால், நீ என்னை விட்டு வெகு தூரத்திற்கு அப்பால் எங்கேயாவது ஓர் இடத்தில் பிறந்திருந்தாலும் சரி, நான் கொண்டிருக்கும் ஸ்தூல வடிவத்தை நீ காணாமலே இருந்தாலும் சரி—இப்படி எல்லாம் இருந்தாலும்கூட நீ எனக்குச் சொந்தமானவனே ஆவாய்.

''சிஷ்யத்துவம் (discipleship) என்பது நீ என் உருவத்தைப் பார்த்திருக்க வேண்டும் என்ற நியதியில் அடங்கியிருக்கவில்லை; மாறாக என் விருப்பம் (Will) இன்னது என்பதை நீ புரிந்து கொண்டிருப்பதில்தான் அடங்கியிருக்கிறது. பரம் பொருளை மையமாகக் கொண்டு நான் விரித்துள்ள ஆன்மிக வலையிலிருந்து நீ ஒருபோதும் தப்பித்துச் செல்லவே முடியாது.

''என்னுடைய விருப்பம் (இச்சை, சங்கல்பம், Will) என்ன என்பதை ஆராய்ந்து தெரிந்துகொள். எந்த உபதேசத்தை என் பிரபுவாகிய குரு எனக்கு அருளினாரோ, நான் உனக்குத் தந்த அதே போதனைகளைப் பின்பற்று. இவ்விதம் செய்து நான் பெற்றுள்ள என் ஆன்மிக அனுபவங்களை நீயும் பெறுவாயாக. அப்படிச் செய்வாயானால், நான் எடுத்த எண்ணற்ற ஸ்தூல உடல்களின் அருகில் நீ இருந்திருந்ததைக்காட்டிலும், மிகமிக நெருக்கமாக என்னிடம் ஒன்றியிருப்பாய்.''

''சீடனாக இருப்பது என்பது, என் சிந்தனைக்கும் இச்சைக்கும் இடையறாமல் பக்தி பூண்டொழுகு வதில்தான் அடங்கியிருக்கிறது. நம் இருவருக்கும் இடையில் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லவே முடியாத அளவுகடந்த ஆழ்ந்த அன்பு நிலவுகிறது. எனவே மனச் சாந்தியுடன் செல்வாயாக. குரு வுக்கும் சீடனுக்கும் அமைந்துள்ள உறவாகிய தெய்விகப் பிணைப்புகள் தகர்க்க இயலாத கடின மான கல்லைக்காட்டிலும் உறுதியாக இருக்கின்றன. அவை மரணத்தையும்விட மிக்க வலிமை கொண்டவை. ஏனென்றால், அந்தப் பிணைப்புகள் அளவிடற்கரிய அன்பினாலும் தெய்விகத்தினாலும் சர்வசக்தி வாய்ந்த பரம்பொருளினாலும் பிணைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன.''

ஓம் தத் ஸத்!

2

இது வரையிலும் குருவின் குரலைக் கேட்ட சீடன் குருவைத் துதித்து வணங்கி நன்றி கூறுகிறான்:—

''ஓ என் பிரபுவே, என் தெய்வமே, எனக்கு எல்லாமுமாக இருப்பவரே! இப்படித்தான் நான் கற்பிக்கப்பட்டிருக்கிறேன். குரு தெய்வமேதான். அவர் தெய்விகமயமான பரம்பொருளில் தோய்ந்து அதிலேயே அமிழ்ந்து ஒன்றிவிட ஆவலுடன் ஏங்கிப் பரிதவிக்கிறார். அவருடைய நோக்க மெல்லாம், கனவெல்லாம், நினைவெல்லாம், சிந்தனை எல்லாம், அனுபவங்கள் எல்லாம் கடவுளுடையன வாகவே அமைந்திருக்கின்றன. என் ஆத்மா கடைத்தேற (salvation) வேண்டும் என்பதில் அவ ருக்கு உள்ள குன்றாத ஊக்கமும் ஆவலும் களைப்போ சலிப்போ அறியாதவை.

''குருவின் ஞானக்கண்களின் மூலமாக நானும் கூடத் தெய்விகத்தைக் காண்கிறேன். உண்மையான அன்பு என் மரணத்தைவிட அதிக வலிமை படைத்தது; ஏன், பிறப்பையும்விட அந்த அன்பு மிகவும் வலிமை வாய்ந்தது என்றே சொல்ல வேண்டும். என் பிறப்பும் இறப்பும் அவருடைய சந்நிதானத்திலிருந்து என்னைப் பிரிக்கலாம். ஆ! நான் என்ன சொல்லுகிறேன்? பொய், பொய், முழுப் பொய்! குருவே தெய்வமில்லையா? தெய்வத்தினிட மிருந்து எப்போதாவது பிரிந்துவிடுவது என்பது சாத்தியமா என்ன! இறைவனின் திருநாமத்தைக் கைக்கொண்டு, காரிருள் சூழ்ந்த இந்தப் பிறவிக் கடலைக் கடந்து, எல்லா ஞானமும் பிரகாசமும் பொருந்திய மறுகரைக்குச் செல்லப் பாடுபட்டுப் போராடுவேன். கடக்க முடியாத, ஒழிந்து தொலைந்து போகாத மித்யை (மாயை, illusion) என்னும் முடிவற்ற இந்தக் காட்டில் பயமே இல்லாமல் நான் முன்னேறிச் செல்லுவேன்; ஏனென்றால் என் செயல்கள் போக்குவரத்துக்கள் எல்லாவற்றையும் என் குருவாகிய பெருமான் ஊன்றிக் கண்காணித்துக்கொண்டிருக்கிறார். நான் விழுந்துவிட நேர்ந்தால் அவர் என்னைக் கைதூக்கி விடுவார். என் பாதையில் முட்கள் இருக் கின்றனவா? இதோ! அவர் அவற்றை ஒருபுறமாக ஒதுக்கித் தள்ளிவிடுவார். சந்தேகங்களும் ஆசை மயக்குகளும் (temptations) ஆகிய காட்டு மிருகங்கள் என்னைச் சுற்றி வளைத்துக்கொள்கின் றனவா, இதோ ஒரு நொடியில் அவர் அவற்றைக் கொன்று தீர்த்துவிடுவார். அல்லது, ஒருவேளை, அவற்றின் வழியிலே நான் வீழ்ந்து அகப்பட்டுக் கொள்ளும்படியும் அவர் என்னை விட்டுவிடலாம். இவ்விதம் நான் அவற்றுடன் போராடும்படி செய் வதன் மூலம், என்னிடம் எப்படிப்பட்ட சக்திகள் இருக்கின்றன என்பதை நானே அறிந்து கொள்ளும்படி அவர் செய்யலாம். ஒருவன் தன்னைத் தானே சோதித்து அறிந்துகொண்டாலன்றி அவன் குருவின் சக்திகளை எப்படி அறிந்துகொள்ள முடியும்?

''பிறப்பும் இறப்பும் எனக்கு ஒரு பொருட்டே அல்ல. எல்லா வரம்புகளையும் (limitations) நான் தூள்தூளாகத் தகர்த்துத் தள்ளிவிடுவேன். எல்லாப்

பந்தங்களையும் நான் கடந்து செல்வேன். என் பெருமானிடம் தெய்விகம் பிரகாசிப்பதைக் காண்பேன். தெய்விகமயமான எந்தப் பரம்பொருள் என்னிடம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறதோ, அதே பரம்பொருள், ஓ குருமகராஜ்! தங்களிடமும் ஒளி விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் ஞான சூரியன்; நான் அதனுடைய கிரணமாக இருக்கிறேன். இது போலவே நான் ஞானசூரியன்; தாங்கள் அதன் கிரணமாக விளங்குகிறீர்கள். உபநிஷதங்கள் வெளிப்படுத்திய பேருண்மையாகிய மகாவாக்கியம், 'தத் த்வம் அஸி—நீ அதுவாக இருக்கிறாய்' என்பது தங்களுக்குப் பொருந்துகிறது; எனக்கும் அந்தப் பேருண்மை பொருந்துகிறது. ஆ! சொற்களால் விளக்க இயலாத அந்த ஏகத்துவத்தின் (ஜீவ பிரம்ம ஐக்கியம் என்னும் ஒருமைப்பாட்டின்) உணர்வு!

"குருவைக் குருவாகப் பாவித்துப் போற்றுகிறேன், வணங்குகிறேன். குருவைச் சாட்சாத் பகவானாகவே பாவித்துப் போற்றுகிறேன், வணங்குகிறேன்."

ஓம் தத் ஸத்.
தத்த்வமஸி.
அஹம் ப்ரஹ்மாஸ்மி.

நாரதரின் ஐயம்

பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

நாரதர் என்ற பெயரைக் கேட்டவுடனே அவருடைய கலகம்தான் நினைவிற்கு வரும். நாரதரின் கலகம் மிகவும் புகழ் பெற்றது. ஆனால் அவரது கலகங்கள் யாவும் பிறர் நன்மையைக் கருதியே என்பதும் பிரசித்தமானது.

மூவுலகிலும் தடையின்றிச் சஞ்சரிக்கும் தேவரிஷியாகிய நாரதருக்குத் திடீரென்று ஒரு நாள் ஒரு சந்தேகம் வந்தது. 'இந்த உலகிலேயே எல்லோரையும்விடப் பெரியவர் யார்?' என்பதே அவருக்கு ஏற்பட்ட சந்தேகம்.

தமது சந்தேகத்தைப் போக்கிக்கொள்ளாமல் நாரதரால் அமைதியாக இருக்க முடியவில்லை. 'பகவான் விஷ்ணுவிடமே செல்லுவோம். அவர்தாம் இதற்குச் சரியான விடை தரக்கூடியவர்' என்று தீர்மானித்தார். "நாராயணா!" என்று ஜபித்துக்கொண்டே நேராக வைகுண்டம் சென்றார். பரந்தாமனைத் தரிசித்துத் தமது சந்தேகத்தைத் தெரிவித்தார்.

நாரதரின் வினா மாயவனின் முகத்தில் ஒரு புன் சிரிப்பை மலர விட்டது. மகாவிஷ்ணு முனிவரைப் பார்த்து, "நாரதா! இந்த உலகம்தான் எல்லாவற்றையும்விடப் பெரிதாகக் காணப்படுகிறது. ஆனால் அது கடலால் சூழப்பட்டிருக்கிறது. எனவே உலகம்தான் எல்லாவற்றையும்விடப் பெரியது என்று சொல்வதற்கில்லை.

"சமுத்திரம்தான் உலகத்தைச் சூழ்ந்துள்ளது. ஆகவே அதையே பெரியது எனக் கொள்ளலாம் என்றால், அதைக் குறுமுனிவரான அகத்தியர் ஒரு சமயம் குடித்துவிட்டார். அப்படிப்பட்ட சமுத்திரம் எப்படிப் பெரியதாக இருக்க முடியும்? குறு முனிவரின் பெருமையின் முன்பு சமுத்திரம் ஒரு பொருட்டானதா?

"எல்லையற்றுப் பரந்து விரிந்திருக்கும் ஆகாயத்துடன் ஒப்பிட்டால் அகத்தியர் அந்த வானத்தில் இருக்கும் ஒரு விண்மீன் என்ன, ஒரு மின்மினிப் பூச்சிக்கு ஒப்பாவார். ஆகையால் அகத்தியரையும் பெரியவர் என்று சொல்லிவிட முடியாது.

"இப்போது ஆகாயத்தையே மிகவும் பெரியது என்று கருதலாம் என்றால், பகவான் வாமனாவதாரம் எடுத்தபோது தமது சிறிய காலின் ஓர் அடியாக அல்லவா அதை அளந்துவிட்டார்? இதனால் பெரியது என்று ஆகாயத்தையும் கருத முடியாது.

"இவ்விதம் பார்த்துக்கொண்டே வந்தால் பகவான் ஸ்ரீவிஷ்ணுவே எல்லோரையும்விடப் பெரியவராகக் காணப்படுகிறார். ஆனால் அவரையும் கூட மிகவும் பெரியவர் என்று கருதிவிட முடியாது. ஏனெனில், அவரோ அனவரதமும் உன் இதயத்தில் கட்டைவிரல் அளவு நீளமான இடத்தில் காணப்படுகிறார். ஆகையால், நாரதா! நீயே உலகில் எல்லோரையும்விட உயர்ந்தவன்" என்று கூறி முடித்தார்.

அதை விளக்கும் சுலோகம் வருமாறு:—

ப்ருத்வீ தாவததீவ விஸ்த்ருதிமதீ தத்வேஷ்டநம்
வாரிதி:
பீதோऽஸௌ கலஶோத்பவேந முநிநா ஸ வ்யோம்நி
கத்யோதவத் |
தத் வ்யாப்தம் தநுஜாதிபஸ்ய ஜயிந: பாதேந
சைகேந கம்
தம் த்வம் சேதஸி தாரயஸ்யவிரதம்-த்வத்தோஸ்தி
நாந்யோ மஹாந் ||

வெள்ளக்காட்டில் விவேகானந்தரின் பிள்ளைகள்



ஏ. சுப்பிரமணியம், எம். ஏ..
ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த மன்றம், ஆர்க்காடு

'நீர் மிகின் சிறையும் இல்லை' என்று புறநானூறு கூறுகிறது. தண்ணீர் பெருக்கெடுத்து ஓடிவந்தால் அதை அடைத்து வைக்கும் சிறைச்சாலை எதுவும் இல்லை. புராணங்களில் பிரளயம் எனப்படும் கொடிய வெள்ளம்பற்றிப் பேசப்படுகிறது. அந்தப் பிரளயத்தில் எல்லாம் அழிந்து போகின்றன. தேவர்கள் முனிவர்கள் அழிகிறார்கள்; பல்வேறு கடவுளர் அழிகிறார்கள்; பதினான்கு உலகங்களும் அழிகின்றன. உலகங்களையும் உயிர்களையும் படைக்கும் பிரமனும் அழிந்து போகிறான். பகவானைத் தவிர வேறு எதுவும் தப்புவதில்லை. அழிந்துபோன உலகில் மறுபடியும் உயிர்த் தோட்டத்தைப் பகவானே ஆரம்பிக்கிறார்.

சென்ற ஆண்டில்

சென்ற ஆண்டில் மதுரை, திருச்சி மாவட்டங்களில் பயங்கரமான வெள்ளம் சீறிப் பாய்ந்தது. வளமான வயல்கள், வாழை, கரும்பு, பூந்தோட்டங்கள் நீரில் மூழ்கி நீரோடு கரைந்தன. முன் இரவில் மகிழ்ச்சியோடும் நிம்மதியோடும் உறங்கச் சென்ற மக்கள் நடு இரவில் வெள்ளம் அலையலையாக வந்து தங்கள் வீடுகளைச் சுற்றி வளைப்பதை அறிந்தனர். எங்கும் ஒரே வெள்ளக் காடு. ஏரிகள் நிரம்பி உடைந்து வெள்ளம் ஊருக்குள் புகுந்துவிட்டது. கால்வாய்களிலும் சிற்றோடைகளிலும் நீர் பெருகிக் கரையில் இருந்த ஊர்களை அடித்துச் சென்றது. பல இடங்களில் மக்கள் மிகுந்த எண்ணிக்கையில் இறந்தனர். பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கதறலும், பிள்ளைகளை இழந்த பெற்றோரின் கதறலும் வானை நிறைத்தன.

மனைவியைத் தள்ளிய கணவன்

ஓர் ஊரில் பயங்கர வெள்ளம். மனைவி கணவனின் தோளைப் பற்றிக்கொண்டு வெள்ளத்தில் நடந்து வருகிறாள். கரைக்கு மிகவும் அருகே வந்துவிட்டார்கள். திடீரென்று வெள்ளம் வேகமாகப் பெருகிக் கணவனை ஆற்றோடு இழுக்கிறது. கணவன் கரையில் வீழ்ந்து தண்ணீரில் நீண்டிருக்கும் சிறு மரக்கிளையைப் பற்றிப் பிடித்து நீந்தத் துவங்குகிறான். இதற்குள் அவன் தோளைப் பிடித்து நடந்து வந்த மனைவி, தோள் நழுவித் தண்ணீரில் வீழ்ந்து அடித்துச் செல்லப்படுகிறாள். நீரில் மிதக்கும் கணவனின் கால்களை எட்டிப் பிடித்துக் கொள்கிறாள். வெள்ளம் அவளை வேகமாக இழுக்கிறது. அந்த வேகம் அவள் பற்றியிருக்கும் கணவனையும் இழுக்கிறது. கணவன் பற்றியிருக்கும் கிளை கொஞ்சம் கொஞ்சமாக உடையத் துவங்குகிறது. மனைவியின் பாரத்தால் கணவனும் வெள்ளத்தில் இழுக்கப்படுகிறான். நாமும் வெள்ளத்தில் வீழ்ந்துவிடுவோமோ என்ற நடுக்கம் அவனுக்கு. உடனே, தன்னைப் பற்றிப் பிடித்துக்கொண்டு உயிருக்குப் போராடும் மனைவியை-தன்னையே நம்பி வந்தவளை-எந்த நிலையிலும் தான் காப்பாற்றுவதாகப் பல பேர் முன்னிலையில் அக்கினிசாட்சியாக மணந்து கொண்டவளை எட்டி உதைக்கிறான். அவள் ஆற்றோடு போகிறாள். உயிர் தப்பிக் கரையில் உட்கார்ந்துகொண்டு தான் செய்த கொடுமையை நினைத்துக் கதறிக் கதறி அழுகிறான் கணவன். இது போல இதயத்தைப் பிளக்கும் ஆயிரம் கொடுமைகளைச் செய்துவிட்டு வெள்ளம் புரளுகிறது.

யார் காப்பாற்றுவார்கள்?

பொழுது விடிந்தது. மழை விடாமல் கொட்டுகிறது. வெள்ளத்தால் தாக்குண்ட மக்கள்

எல்லோரும் வெள்ளம் கொண்டு போனது போக மிச்சம் மிகுதியாக இருக்கும் தங்கள் இடிந்த வீடுகளையும் ஆடு மாடுகளையும் சொத்துக்களையும் தேடுகிறார்கள். ஆனால் எல்லாவற்றையுமே இழந்தவர்கள் எதைத் தேடுவார்கள்? தங்களைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் வெள்ளத்தை எப்படிக் கடப்பார்கள்? யார் கடந்து வந்து அவர்களைக் காப்பாற்றுவார்கள்?

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன்

கடப்பதற்குக் காவி கட்டிய சில சன்னியாசிகளும் அவர்கள் நடத்தும் பள்ளிகளின் மாணவர்கள் சிலரும், துணையாகச் சில அன்பர்களும் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மிஷனிலிருந்து மழையையும் வெள்ளத்தையும் கடந்து அங்கே வந்துவிட்டார்கள். திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை தாலுக்காவில் இருபது கிராமங்களில், 150 சதுரமைல் பரப்பில் அவர்கள் தங்கள் உயிர்காப்புப் பணியைத் துவக்கினர். வெள்ளத்தில் சிக்குண்டு உணவே இல்லாமல் பட்டினி கிடந்த மக்களுக்குச் சமைத்த உணவை மார்பளவு நீரில் நடந்தும் நீந்தியும் சென்று கொடுத்தனர். இரண்டாயிரம் பேர்களுக்கும் மேலாக அரிசி, புடவைகள், வேட்டிகள், போர்வைகள், குழந்தைகளுக்கான ஆடைகள், சமையற் பாத்திரங்கள் முதலியவற்றை வழங்கினர். மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றவர்களும் அவர்களுக்கு உதவியாக நின்றனர். வெள்ளத்தால் நாசமான குடிசைவீடுகளைச் சரிசெய்துகொள்வதற்கு உடனடியாகப்பணமும் கொடுத்தனர். வெள்ளத்தால் ஏற்பட்ட நோய்களைப் பரிசோதித்து மருந்துகளும் தந்தனர். சில நாட்களில் வெள்ளம் வடிந்தது. பெரும்பாலான மக்கள் தங்கள் வீடுகளுக்கும் நிலங்களுக்கும் திரும்பினர். ஆனால் சிலரோ திரும்புவதற்கு வீடுகள் இல்லாமல் தங்களைக் காப்பாற்றிய அந்தத் துறவிகளைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டே அழத் துவங்கினர். திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுக்கா வேம்பனூர் அரிஜனக் காலனியில் எல்லா வீடுகளையும் வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. அந்தத் தாலுக்காவிலேயே மிகவும் மோசமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி அதுதான். வீடு ஒன்றையே செல்வமாக வைத்திருந்த அவர்கள் அதுவும் போனதும் அழுது கதறினார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண-சாரதாபுரம்

பசி என்றால் சோறு போடலாம். நோய் என்றால் மருந்து கொடுக்கலாம். குளிர் என்றால் ஆடை கொடுக்கலாம். குடிசை பிய்ந்தது என்றால் சரி செய்து கொடுக்கலாம். குடிசையே வேண்டும் என்றால் எங்கே போவது? குடிசை அமைத்துக் கொடுத்தாலும் எத்தனை நாளைக்கு அது நிற்கும்? நிலையான வீடு என்றால் பணத்துக்கு எங்கே போவது?

"ஐயோ! இந்த நாட்டில் வறுமையிலும் அறியாமையிலும் வீழ்ந்து கிடக்கும் ஏழைகளை, பரிதாபமான மக்களைக் கவனிக்க ஒருவர்கூட இல்லையே! ஏழைகளாகவும் தாழ்த்தப்பட்டவர்களாகவும் பரிதாபத்திற்கு உரியவர்களாகவும் இருக்கும் ஏழைகளான என் குழந்தைகளே, என்னிடம் வாருங்கள். ஸ்ரீராமகிருஷ்ணரின் பெயரால் நாம் ஒன்றுசேர்வோம்" என்று, ஏழைகளின் துயரத்தைக் கண்டு அலறி அலறித் துடித்த சுவாமி விவேகானந்தரின் துடிப்பு தங்கள் இதய அணு ஒவ்வொன்றிலும் எதிரொலிக்க வாழும் அந்தத் துறவிகள் சிலிர்த்து எழுந்தார்கள். அதன் விளைவு ஸ்ரீ ராமகிருஷ்ண-சாரதாபுரம் என்னும் அருமையான குடியிருப்பு அங்கே எழுந்தது.

'ஸ்ரீ ராமகிருஷ்ண-சாரதாபுரம் குடியிருப்பு' பரந்த மேடான இடத்தில் மிக அழகாக நல்ல முறையில் திட்டமிட்டுக் கட்டப்பட்டிருக்கிறது. வடக்கு, தெற்கு, மேற்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் ஓரங்களில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இடையே நிழல்தரும் பெரிய மரங்களோடு கூடிய அகன்ற மைதானம் இருக்கிறது. அங்கே குழந்தைகள் விளையாடுவதற்கு ஊஞ்சல், சறுக்குப் பலகைகள், இராட்டினங்கள் அமைத்திருக்கிறார்கள். கிழக்கே நுழைவாயில் இருக்கிறது. இந்த வீடுகளுக்கு நடுவே பகவான் ராமகிருஷ்ணரின் ஆலயம் மிகவும் எளிமையாகவும் அழகாகவும் கட்டப்பட்டுள்ளது.

இந்தக் குடியிருப்பில் கட்டியிருக்கும் 26 வீடுகளுக்கும், வீடு ஒன்றுக்கு 4100 ரூபாய் செலவானதாக மிஷன் செயலாளர் சுவாமிஜி கூறினார். காலனியின் மொத்தச் செலவு 1·20 இலட்சம் ரூபாய். காலனியில் நுழையும்போது அதன் அழகும் அமைப்பும் சென்னையில் எங்கோ ஒரு பெரிய தொழிற்சாலையின் குடியிருப்புக்குள் நுழைந்துவிட்டோமா என்ற மயக்கத்தைக் கொடுக்கிறது. 4100 ரூபாயையும் அங்கே கட்டியிருக்கிற வீட்டையும் பார்க்கும்போது எவ்வளவு சிக்கனமாக வீடுகளைக் கட்டியிருக்கின்றனர் என்ற வியப்பும், நம்மால் அப்படிக் கட்ட முடியுமா என்ற மலைப்பும் தோன்றுகின்றன.

ஒரு வேட்டி, ஒரு சேலை, ஒரு விளக்கு!

17-8-78 வியாழக்கிழமை குடியிருப்பின் துவக்க விழா துவங்கியது. காலை 9 மணிக்குத் தமிழக மெங்கும் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்—மிஷனைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட சன்னியாசிகள் ஸ்ரீராமகிருஷ்ணர் ஆலயத்திற்குத் திரண்டு வந்து அமர்ந்தனர். ஹோமமும் வழிபாடும் துவங்கின. உப நிஷத் மந்திரங்கள் ஒலிக்கத் துவங்கின. காவி உடையில் சன்னியாசிகள் அனைவரும் திரளாக அமர்ந்து உபநிஷத் மந்திரங்களை இனிமையான குரலில் ஓதிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக வும், மனதைப் புல்லரிக்கச் செய்யும் நிகழ்ச்சியாக வும் இருந்தது. காலனியின் அரிஜன மக்களும் வெளியூர்களிலிருந்து விழாவிற்கு வந்திருந்த அன்பர் பலரும் கோயிலுக்குள் திரண்டிருந்தனர். பத்தரை மணிக்கு ஹோமமும் வழிபாடும் முடிந்தன.

11 மணிக்கு எந்தவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல், ஒலிபெருக்கியைக்கூடப் பயன்படுத்தாமல் வீடு இழந்த 26 குடும்பங்களுக்கும், வீடுகள் அவர் களுக்கு உரிமையானவை என்பதற்கான பட்டாக்கள் தரப்பட்டன. பட்டாவோடு ஒரு வேட்டி, துண்டு, புடைவையும், ஒரு விளக்கும், அதை ஏற்ற ஒரு நெருப்புப் பெட்டியும் உடன் தரப்பட்டன.

ஆளுநர் வந்தார்

மாலையில் தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் குடியிருப்பைத் திறந்துவைத்து, ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் சென்று பார்த்தார். வீடு மிகவும் எளிமையாகவும் அழகாகவும் வசதியாகவும் கட்டப்பட்டிருந்ததைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். அந்த வீடுகளுக்கு நடுவே பரந்த வெளியும், அங்கே நிழல்தரும் பெரிய மரங்கள் பலவும் இருந்தது அவர் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது. காலனியின் ஒவ் வொரு வீட்டிலும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவியார், சுவாமி விவேகா னந்தர் முதலியவர்களின் படங்களை அமைத் திருந்தார்கள். அந்தத் திருவுருவங்களைக் கண்டு கையெடுத்துக் கும்பிட்ட ஆளுநர், விழாவில் பேசும் போது அதைப்பற்றிக் குறிப்பிட்டார்.

என் மனம் உன்னதமான நிலைக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது

ஆளுநர் பேசும்போது ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சேவைகளைப் பெரிதும் பாராட்டினார். அவர் குறிப் பிட்டார்: "இங்கு நான் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளோடு அமர்ந்திருக்கும் இந்த நேரத்தில் என் மனம் மிகவும் உன்னதமான நிலைக்கு உயர்த்தப் பட்டிருப்பதை உணர்கிறேன். இன்று எனது வாழ்க்கையில் முக்கியத்துவம் வாய்ந்த மகிழ்ச்சி மிகுந்த ஒரு நாள். இங்கு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் வெள்ளத்தால் வீடுகளை இழந்த அரிஜன மக்களுக்கு அருமையான வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய சேவைகளை இங்கு மட்டும் அல்ல, குஜராத்திலும், உத்தரப் பிரதேசத்திலும், பிஹாரிலும் வடநாட்டின் பிற பாகங் களிலும் பலமுறை நான் பார்த்திருக்கிறேன். எங்கெல்லாம் மக்கள் வெள்ளத்தாலும் நோயாலும் பஞ்சத்தாலும் வேதனைப்படுகிறார்களோ அங்கெல் லாம் அவர்கள் துணையாக நின்று வருகிறார்கள்."

நன்கொடை

மிஷனின் இவ்வளவு பெரிய பணிக்கு மத்திய அரசாங்கத்திலிருந்தோ, மாநில அரசாங்கத்தி லிருந்தோ நிதி உதவி ஏதும் வரவில்லை. தனியார் நிறுவனங்களும், அறச் சிந்தனை கொண்ட தனிப் பட்டவர்களுமே பொருளுதவி செய்திருக்கிறார்கள். இந்தத் துயர் துடைப்புப் பணிக்கு இந்தியா முழு வதிலுமிருந்து நன்கொடைகள் திரட்டப்பட்டன. மிஷனின் வேண்டுகோளையும் வெள்ளக் கொடுமை களையும் பார்த்த பலர் தாமாகவே நிதி உதவி செய் தனர். பல அற நிறுவனங்கள் பல வீடுகளுக்கான செலவு முழுவதையும் தாமே ஏற்றுக்கொண்டன. அவற்றின் பெயர்களை அந்த அந்த வீடுகளின் முன்னால் சிறிய பளிங்குக் கல்லில் பொறித்து வைத் திருக்கிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ண மிஷனுக்குக் கொடுங்கள்; பத்து மடங்காகும்

இந்த நன்கொடை கொடுத்தவர்களை ஆளுநர் பாராட்டிப் பேசினார். அவர் மேலும் சொன்னார்: "நான் என் நண்பர்களுக்கு, 'நல்ல காரியங் களுக்குக் கொடுக்கப்படும் பணத்தால் நமக்கு எப்பொழுதும் நஷ்டம் ஏற்படாது. நீங்கள் ஒரு மடங்கு கொடுத்தால் பாங்கில் உங்கள் பெயரில் இருக்கும் பணம் இரண்டு மடங்காக ஆகும்' என்று அடிக்கடி சொல்லுவதுண்டு. ஸ்ரீராமகிருஷ்ண மடத்துச் சுவாமிகள் தர்மத்திற்காக உங்களிடம் வந்தால் நிறையப் பணம் கொடுங்கள். அவர் களுக்குக் கொடுத்தால் பாங்கில் இருக்கும் உங்கள் பணம் இரண்டு மடங்கு அல்ல, பத்து மடங்கு ஆகும்."

ஒவ்வொரு வீட்டிலும் ஸ்ரீராமகிருஷ்ணர்

"இங்கே கட்டப்பட்டிருக்கும் குடியிருப்பு வீடு களைக் குளிர்ந்த மரங்களின் நிழலில் அழகாகக்

கட்டியிருக்கிறார்கள். உங்களுக்கு வெறும் வீடு களை மட்டும் அவர்கள் கொடுக்கவில்லை. ஒவ்வொரு வீட்டோடும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அன்னை சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகிய மூன்று பேர்களையும் வீட்டோடு இணைத்துத் தந்திருக் கிறார்கள். அவர்களின் திருவுருவத்தை நாள் தோறும் நீங்கள் வணங்கிப் புத்துணர்வு பெற்று அவர்கள் காட்டிய வழியில் வாழ முயலவேண்டும்.'' என்றும் ஆளுநர் கூறினார்.

இரண்டு சன்னியாசிகள்

வேம்பனூரில் இருபத்தாறு வீடுகளைக் கட்டிய வர்கள் மூவாரைப்பட்டி என்ற ஊரிலும் வீடுகளைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அவையும் விரைவில் நிறைவுபெற இருக்கின்றன. வெள் ளத்தில் வீடுகளை இழந்தவர்களுக்காக மிஷன் மொத்தம் 56 வீடுகளை எட்டே மாதங்களில் கட்டி யிருக்கிறது. இது ஒரு பெரிய இமாலயச் சாதனை. வீடு கட்டுவதற்காக மூன்று லட்சத்திற்கும் மேலான பணத்தைத் தேடுவது, வீடு கட்டுவதற்காக மறு படியும் வெள்ளம் வந்தால் அதனால் பாதிக்கப்பட முடியாத இடமாகத் தேர்ந்தெடுப்பது, காற்றோட் டமும் வசதியும் அழகும் ஆரோக்கியமும் உடைய தாகக் காலனி அமையும்படித் திட்டமிடுவது, இவற்றுக்கு மேலாகப் பாதைகூடச் சரிவர இல்லாத நகரத்திலிருந்து நெடுந்தொலைவில் உள்ள அந்தக் கிராமங்களுக்குக் கட்டிடப் பொருள்களைக் கொண்டு செல்லுவது, உடன் இருந்து கட்டிட வேலையைக் கண்காணிப்பது முதலிய எல்லா வேலைகளும் அசுரத்தனமான வேலைகளாகும். இந்த அசுரத் தனத்தை எட்டு மாதங்களில் இரண்டு துறவியர் சாதித்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர், சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் செயலாளர் சுவாமி கீர்த்திதானந்தா அவர்கள். மற்றொருவர், அவ ருடைய நிழலாகக் கிராமங்களில் இருந்து தொடர்ந்து கட்டிட வேலைகளைக் கவனித்துக்கொண்டிருக்கும் சுவாமி சமகரானந்தா அவர்கள்.

சுவாமி கீர்த்திதானந்தா அவர்கள் சென்னை மயிலாப்பூரில் இருக்கும் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மாணவரில்லத்தின் பாதுகாப்புப் பொறுப்பை ஏற் றுள்ள செயலாளராக இருக்கிறார். அந்த இல்லத்தில் திறமையான, முந்நூற்றுக்கும் மேற்பட்ட ஏழை மாணவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு இருப் பிடமும் உணவும் அங்கே இலவசமாகவே தரப் படுகின்றன. அவர்கள் படிப்பிற்குப் பள்ளி ஒன்றும், தொழிற்பள்ளி ஒன்றும் அந்த இல்லத்துக்குள்ளேயே இருக்கின்றன. அதனுடைய முழுப் பராமரிப்பும் சுவாமி கீர்த்திதானந்தா அவர்களுடையதுதான். இந்த இல்லத்தின் பொறுப்புக்களை ஆற்றிக் கொண்டே, சென்னையிலிருந்து 350 கிலோ மீட்டருக்கும் அதிகமான தொலைவில் நடக்கும் கட்டிடப் பணிகளைப் பத்து மாதங்களாக அவர் கண்காணித்து நிறைவேற்றி வருகிறார். ஒவ்வொரு சனிக்கிழமை இரவும் சென்னையிலிருந்து திருச்சி சென்று, ஞாயிற்றுக்கிழமை கிராமங்களில் தங்கி வேலைகளையெல்லாம் பார்த்துவிட்டு மறுநாள் காலையில் மாணவர் இல்லத்திற்கான பணிகளில் ஈடுபடச் சென்னை திரும்பிவிடுவார். அவசியம் ஏற்பட்டபோதெல்லாம் இடையிடையேயும் அவர் அடிக்கடி போய் வந்திருக்கிறார்.

சுவாமி கீர்த்திதானந்தா அவர்களின் உழைப்பும் ஆற்றலும் குடியிருப்பைக் கட்டி முடித்ததில் மட்டும் அல்ல; குடியிருப்புத் திறப்பு விழாவை அவர் நடத்தி யதிலும் ஒளிவிட்டு விளங்கியது. அந்தக் குக் கிராமத்தில் அவ்வளவு அழகான மேடை அமைத்து, தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் இருபதுக்கும் மேற்பட்ட சுவாமிஜிகளையும் ஆளுநர் அவர்களையும் அழைத்து, கூடிய பெருங் கூட்டத்துக்கும் அன்பர் களுக்கும் உணவும் தங்குமிடமும் தந்து விழாவை மிகச் சிறப்பாக நடத்தினார். விழாவன்று ஸ்ரீராம கிருஷ்ணரின் திருவுருவத்தை அந்தக் கிராமத்தின் வீதிகளில் மேளதாளம், வாண வேடிக்கைகள், காவடி ஆட்டம், கரக ஆட்டம் முதலிய தமிழ் நாட்டுப் பண்டைய பண்பாட்டுக் கலை நிகழ்ச்சி களோடு திருவுலா வரச் செய்த காட்சி கண்டவர் களின் மனத்தில் என்றும் பசுமையாக இருக்கும் காட்சியாகும். அந்தக் கிராமத்து மக்களும் அவரைத் தங்களுள் ஒருவராகவே ஏற்றுக்கொண்டு, அவரிடம் காட்டிய பணிவும் மரியாதையும் அன்பும் பெரிதும் வியப்பிற்குரியனவாக இருந்தன.

டீக்கடைச் சோறு; பள்ளிக்கூடப் படுக்கை

சுவாமி கீர்த்திதானந்தா அவர்களுக்குப் பெருந் துணையாக வேம்பனூரில் தங்கிக் கட்டிடப் பணி களைப் பார்த்து வந்தவர் சுவாமி சமகரானந்தா அவர்கள். எந்த வசதியும் இல்லாத அந்தக் குக் கிராமத்தில் ஒரு சிறிய டீக்கடை இருக்கிறது. அந்தக் கடையில் தமக்கு வேண்டிய சிற்றுண்டி உணவு முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்து கொண்டார். அந்த ஊரிலுள்ள பள்ளிக் கட்டிடத்தைத் தங்கும் இடமாக்கிக் கொண்டார். அதில்தான் கட்டிடத்திற்கு வேண்டிய சிமெண்ட் முதலிய பொருள்களும் அடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கேயே அவர் தங்கி இந்த எட்டு மாதங்களாகக்

கட்டிடப் பணியைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். அதைப்பற்றி அவரிடம் கேட்டபோது, "இது தொடர்ச்சியான ஒரு தியானம். (It is a continuous meditation)" என்றார். கீதையின் கர்மயோகம் இந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில் ஒவ்வொரு நிமிடமும் ஒளிவீசி மின்னுகிறது.

விவேகானந்த கீதம்

குடியிருப்புத் திறப்பு விழாவை முன்னிட்டுச் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் வெளியீடுகளான தெய்விக நூல்களையும் படங்களையும் விற்க நாங்கள் அங்கே கடை போட்டிருந்தோம். அது மிகச் சிறிய கிராமம்; இரண்டே தெருக்கள். படிக்கத் தெரிந்தவர்கள் என்றால், இந்தத் தலைமுறையில் வளரும் சின்னஞ்சிறு குழந்தைகள்தாம். புத்தகக் கடையைச் சுற்றிக் குழந்தைகள் பெருங் கூட்டமாகக் கூடிப் புத்தகங்களையும் ஸ்ரீராமகிருஷ்ணரின் படத்தையும் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள். உடன் இருந்த நண்பர் ஸ்ரீராமகிருஷ்ணரின் படத்தை அவர்களிடம் காட்டி, "இது யார் தெரியுமா?" என்றார். எல்லாக் குழந்தைகளும் ஒன்றுசேர்ந்து, "ஓ! தெரியுமே. இது இராமகிருஷ்ணர் படம்" என்று பள்ளிக்கூடத்தில் கோரஸ் போடுவது போல் குரல் கொடுத்தார்கள். அது எங்களுக்குத் திகைப்பாக இருந்தது.

ஒரு பையன், "இராமகிருஷ்ணரின் பாட்டுக்கூட எங்களுக்குத் தெரியும்" என்றான். எனது நண்பர் "பாடு" என்றார். உடனே அந்தச் சிறுவன், சுவாமி விவேகானந்தர் தம் குருநாதர் ஸ்ரீராமகிருஷ்ணரின் அன்பிலும் தெய்விகத்திலும் கரைந்து உருகிப் பாடியதும், உலகெங்கும் இருக்கும் ஸ்ரீராமகிருஷ்ண மடம் சங்கம் அமைப்புக்களிலும், அவருடைய பக்தர்களின் வீடுகளிலும் நாள்தோறும் பாடப் பெறுவதுமான 'ஓம் ஸ்தாபகாய' என்ற பாடலைத் தங்குதடையின்றிப் பாடினான். எங்களுக்கு ஆச்சரியத்தைவிட அது அதிர்ச்சியாகவே இருந்தது. ஏனென்றால் அந்தச் சிறுவனின் சம்ஸ்கிருத உச்சரிப்பு அவ்வளவு சுத்தமாக இருந்தது.

உபநிஷத மந்திரங்கள்

உடனே நண்பர் எதிரில் இருந்த மற்றொரு பெண் குழந்தையைப் பார்த்து, "உனக்கு ஏதாவது தெரியுமா? பாடு" என்றார். உடனே அவள் எந்த விதத் தயக்கமும் இல்லாமல், உபநிஷத்துக்களை ஓதும்போதும் முடிக்கும்போதும் ஒவ்வொருவரும் சொல்லும் உபநிஷத மந்திரமான — 'ஓம் ஸஹ நாவவது | ஸஹ நௌ புநக்து | ஸஹ வீர்யம் கரவாவஹை |' எனத் துவங்கும் மந்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தாள். நண்பருக்குப் பேராச்சரியமாகி விட்டது. "என்ன இது! இந்தக் குக்கிராமத்தில் உபநிஷத மந்திரமா? உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?" என்று அந்தக் குழந்தையைக் கேட்டார்.

அதற்கு அந்தப் பெண், "இங்கே இந்தப் பள்ளிக்கூடத்தில் சின்னசாமி (சுவாமி சமகரானந்தா) இருக்கிறார்கள். தினந்தோறும் சாயங்காலம் எங்களுக்கு இவற்றை எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இராமகிருஷ்ணரின் படத்தை வைத்துவிட்டு நாங்கள் பாடுவோம். தினந்தோறும் சொல்லிக் கொடுப்பார். ஆரத்தி காட்டுவார்" என்றாள். அதோடு அவள் மேலும் தொடர்ந்து, "ஞாயிற்றுக் கிழமைதோறும் பெரியசாமி (சுவாமி கீர்த்திதானந்தா) மெட்ராசிலிருந்து வருவார்கள். தேங்காயெல்லாம் உடைத்துப் பெரிய பூசை செய்வார்கள். எங்களுக்குத் தேங்காய்ப் பிரசாதமெல்லாம் கொடுப்பார்கள். பாட்டுக்களும் பாடுவோம்" என்றாள்.

நண்பர் இதயம் நெகிழ, "பார்த்தீர்களா சன்னியாசத்தின் ஆற்றலை! அவர்கள் வீட்டை மட்டும் இங்கே கட்டிக்கொண்டிருக்கவில்லை. தெய்விகத்தையும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்" என்றார். வீடு எதற்கு? தெய்வம் வாழத்தானே? தெய்வத்திற்காக எல்லாவற்றையும் துறந்த இவர்கள் பாதம் படும் இடங்கள் எல்லாம் தெய்விகத்தை உருவாக்காமல் வேறு எதை உருவாக்கும்?

ஸ்ரீராமகிருஷ்ண-சாரதா சமிதி

ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் இந்த வெள்ளப் பாதுகாப்புப் பணியில் மிகமிக அமைதியாகவும் ஆழமாகவும் பங்கு கொண்ட மற்றொருவர் திருச்சி பொன்மலை ஸ்ரீராமகிருஷ்ண-சாரதா சமிதியினர். இந்தச் சமிதியில் உள்ள அனைவரும் பெண்மணிகளே. பொன்மலைப் புகைவண்டிக் குடியிருப்பில் வசிக்கும் உயர் அலுவலர்களின் துணைவியர்கள். மிஷன் வெள்ள நிவாரணப் பணியைத் துவக்கிய காலத்திலிருந்து குடியிருப்புக் காலனித் திறப்புவிழா முடியும் வரையில் பலவிதமாக இவர்கள் தொண்டாற்றினார்கள். விழாவிற்குத் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த சுவாமிகளுக்கும் அன்பர்களுக்கும் மூன்று நாள் உறைவிடமும் இனிய உணவும் தரும் பெரும் பொறுப்பை இவர்கள்தாம் ஏற்றார்கள். மிகவும் அற்புதமாக அதை நிறைவேற்றிக் காட்டினார்கள். ★

அமரநாத் யாத்திரை

அமரநாத் யாத்திரை இந்துக்களின் ஸ்தல யாத்திரைகளிலேயே மிகவும் கடினமானது. 'இங்குள்ள பனிலிங்கம் சந்திரனோடு வளர்பிறையில் வளர்ந்து, பௌர்ணமியன்று முழு உருவம் பெற்றுப் பின்பு தேய்பிறையில் சிறிது சிறிதாகக் குறைந்து, அமாவாசையன்று இருந்த இடமே தெரியாமல் மறைந்துவிடுகிறது' என்று ஒரு பத்திரிகையில் சில ஆண்டுகளுக்கு முன் படித்தேன். அதுமுதலே அங்கு ஒரு நாள் செல்ல வேண்டும் என்ற ஆவல் என்னுள் இருந்து வந்தது.

பிறகு சமீபத்தில் நமது மாம்பலம் ஹாஸ்டல் வார்டன் ஸ்ரீமத் சுவாமி உத்தவானந்தஜீ மகராஜ் அவர்கள் மாணவர்களைக் காஷ்மீர் அழைத்துச் சென்றபோது அவருடன் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அங்கே பகால்காமில் உலாவிக்கொண்டிருந்தபோது சுவாமிஜி ஒரு சாலையைச் சுட்டிக்காட்டி, "இந்த வழியாகத்தான் அமரநாத் போக வேண்டும்" என்று குறிப்பிட்டார். உடனே நான், "அப்படியானால் நான் இப்போதே அங்குச் சென்றுவர இயலுமா?" என்று ஆவலுடன் கேட்டேன். அதற்கு அவர், "அப்பனே! அமரநாத் மற்ற இடங்களைப் போல் எப்போது வேண்டு மானாலும் போய் வரக் கூடிய ஸ்தலம் அல்ல. ஆண்டில் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மூன்று மாதங்களில் மட்டுமே அங்கே செல்ல இயலும். குருமகராஜ் கிருபை இருந்தால் நீ கட்டாயம் அங்கு ஒரு முறை சென்று வருவாய்" என்று கூறினர். அந்த நன்னாள் என்று வருமோ என்று நான் ஏங்கி நின்றேன்.

'புனிதமான ஆசைகளை இறைவன் நிச்சயம் நிறைவேற்றி வைப்பார்' என்று பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர் கூறுவது வழக்கம். அது போல் நான் ஆவலுடன் எதிர்பார்த்த அந்த நாள் சற்றும் எதிர் பாராத விதத்தில் வரத்தான் செய்தது. பயணத் திற்குத் தேவையான பணமும் பொருள்களும் கேட்காமலே வந்து நிறைந்தன.

கம்பளி ஸ்வெட்டர், முகத்தைத் தவிரக் காது, தலை எல்லாவற்றையும் மறைக்கக்கூடிய குல்லாய் (Monkey cap), கையுறை, ஸாக்ஸ், கேன்வாஸ் ஷூஸ், பிளாஸ்டிக் மழைக்கோட்டு, குல்லாய், கீழே விரித்துப் படுக்க மூன்று நான்கு கம்பளிகள், போர்த்திக்கொள்ள இரண்டு கம்பளிகள்—இவை அனைத்தும் நண்பர்களிடமிருந்து வந்து குவிந்தன. 'ஆ! இவ்வளவையும் எடுத்துச் செல்ல வேண்டுமா!' என்று நினைத்தவனுக்கு மலைமீது போகும்போது தான் இவற்றின் அருமை தெரிந்தது.

நானும் உடன்வந்த சில நண்பர்களும் வழியில் ஆக்ரா, மதுரா, பிருந்தாவனம், டெல்லி ஆகிய இடங்களைப் பார்த்துக்கொண்டு நேரே ஜம்முதவியை அடைந்தோம். அங்கிருந்து பஸ்மூலம் பகால்காம் சென்றடைந்தோம்.


பகால்காம் (Base camp) என்னும் இடம் லிட்டர் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. நான்கு புறமும் பனிச்சிகரங்கள் கொண்ட உயர்ந்த மலைக்காட்சி. ஊரின் நடுவே சலசலவென்று ஓடும் லிட்டர் நதி. ஓடும் தண்ணீரைத் தொட்டால் தேள் கொட்டினாற் போன்ற உணர்ச்சி—அவ்வளவு குளிர்ச்சி! ஆற்றங் கரையில் அமர்ந்து பனிச் சிகரங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்; நேரம் போவதே தெரியாது. மிகவும் ரம்மியமான சிறிய ஊர் அது.

அமரநாத் யாத்திரை பகால்காமிலிருந்து துவங்கு கிறது. இது கடல்மட்டத்திலிருந்து 7,500 அடி உயரத்தில் உள்ளது. இங்கு யாத்திரிகர்கள் இரண்டொரு நாள் தங்கி, பயணத்திற்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்துக்கொண்டு போவது வழக்கம். கம்பளி ஆடைகள், படுக்கை, பூட்ஸ் என்று பயணத்திற்கு எவையெல்லாம் மிகவும் அவசியமோ அவை அனைத்தும் இங்கு அவரவர் வசதிக்கேற்ப வாடகைக்கோ விலைக்கோ எப்படி வேண்டுமானாலும் கிடைக்கின்றன. இவை தவிர வழியில் சாப்பிடுவதற்குத் திராட்சை, முந்திரி, பேரீச்சை, பாதாம், ஆப்பிள், குளுகோஸ் முதலிய அனைத்தையும் இங்கிருந்துதான் வாங்கிச் செல்ல வேண்டும். வழியில் ஹோட்டலோ கடை கண்ணி களோ இல்லாமையால் நமது குறைந்த பட்சத் தேவைகளைப் பகால்காமிலிருந்தே எடுத்துச் செல்ல வேண்டும்.

இங்கிருந்து அமரநாத் முப்பது மைல் தூரத்தில் இருக்கிறது. மனத் திடமும் உடல் வலிமையும் உள்ளவர்கள் நடந்து போகலாம். உடல் வலு வில்லாதோர் குதிரையில் செல்லலாம்; ஆனல், அதற்கும் மனஉறுதி மிகமிக அவசியம். இரண்டும் இல்லாதவர்கள்—ஆனல், பணபலம் நிறைய உள்ள வர்கள்—டோலியில் செல்லலாம். குதிரை, டோலி ஆகியவற்றிற்கும், வழியில் தங்குவதற்கான கூடார ஏற்பாடுகளுக்கும் பகால்காம் டூரிஸ்ட் ஆபீஸரின் உதவியை நாடலாம்.

நாம் நடந்து சென்ருலும் நமது படுக்கை முதலிய சாமான்களைக் குதிரையில்தான் ஏற்றி அனுப்ப வேண்டும். வழியில் எந்தச் சமயமும் மழை வரக் கூடுமாதலால், படுக்கையை ஒரு பிளாஸ்டிக் துணியினுல் நன்ருகக் கட்டிவிடுவது அவசியம். நம் கையிலும் எப்போதும் மழைக்கோட்டும், குல்லாயும், ஒரு மாற்றுடையும் இருத்தல் வேண்டும்.

16-7-78 ஞாயிறன்று எங்கள் சாமான்களைக் குதிரையில் ஏற்றிவிட்டு, காலை சுமார் பதினெரு மணிக்கு நாங்கள் நடக்க ஆரம்பித்தோம். பகால் காமிலிருந்து நல்ல தார் ரோடு, கடைவீதியைக் கடந்து, ஒரு சீக்கிய குருத்வாராவையும் தாண்டிச் செல்லுகிறது. கால் நடையாகச் செல்லும்



எல்லோரும் ஒரு கழியையும் வாங்கிக்கொண்டு செல்லுகிருேம். மலைமேல் ஏறுவதற்கும், பனிமேல் நடப்பதற்கும் இது மிகவும் உதவியாக இருக்கிறது. சுமார் ஒன்றரை மைல் தூரம் சென்றதும் லிட்டர் நதி மீதுள்ள ஒரு பாலத்தை அடைகிருேம். அங்கிருந்து சாலை லிட்டர்நதியை ஒட்டினுற்போல் நீண்ட தூரம் செல்கிறது. செல்லும் வழியில் ஒரு புறம் மலை, மறு புறம் ஆழ்ந்த பள்ளத்தாக்கில் ஓடும் நதி; அதையும் தாண்டி நூறு அடிக்கும் உயரமான ஊசியிலை மரங்கள் நிறைந்த காடு; அதற்கும் அப்பால் உயர்ந்த மலைத்தொடர்.

நாங்கள் புறப்படுவதற்குப் பதினெரு மணி ஆனதால் வெயில் துன்புறுத்துகிறது. வேறு வழி இல்லை. மெல்ல மெல்ல இயற்கை இன்பத்தைப் பருகியபடி மேலே செல்லுகிருேம். மாலை சுமார் நான்கு மணிக்குச் சந்தன்வாரி என்ற இடத்தை அடைந்தோம். 9,000 அடி உயரத்தில் உள்ள இது பகால்காமிலிருந்து பத்துமைல் தூரத்தில் உள்ளது. இதுவே எங்களது முதல் நாள் தங்குமிடம். நாங்கள் அங்கே செல்வதற்கும் முன்பு எங்கள் கூடாரங்கள் வந்து பொருத்தப்பட்டிருந்தன. குதிரையில் வந்த நண்பர்கள் எங்கள் படுக்கை முதலியவற்றை வாங்கி வைத்துவிட்டனர். பிறகு சிரம பரிகாரத்திற்குக் கேட்பானேன்? அருகில் 'கால்ஸா ஹோட்டல்' என்ற டீக்கடையின் போர்டைப் பார்த்து அங்கு நுழைந்தோம். வயிறு நிறையச் சப்பாத்தியும் தாலும் தேநீரும் கிடைத்தன. பிறகு ஆழ்ந்து உறங்கினேம்.

இங்கு அதிகாலையில் ஐந்து மணிக்கே வெளிச்சம் வந்துவிடுகிறது. அதே போல் மூடுபனி இல்லை என்ருல் இரவு ஏழு மணி வரையிலும் வெளிச்சம் இருக்கிறது. காலையில் எழுந்து தண்ணீரைத் தொட்டாலே கை மரத்துவிடுகிறது. ஒருவிதமாகக் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு எட்டு மணிக்குப் புறப்படு கிருேம். இந்த இரண்டாம் நாள் பயணம்தான் இந்த யாத்திரையிலேயே மிகவும் கடினமான பயணம். காரணம், இரண்டு மைல் தூரம் போவதற்குள் 2,200 அடி உயரம் உள்ள பிஸு உச்சி என்ற மலையுச்சியை ஏற வேண்டும். சந்தன் வாரியை விட்டுக் கிளம்பியவுடனே இந்த யாத்தி ரையில் முதல்முதலில் பனிமீது நடக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. இங்கு ஓடும் நதி உறைந்துபோயிருக் கிறது. அதன்மீது சுமார் நூறு அடி தூரம் நடக்க வேண்டியிருக்கிறது. பிஸு உச்சி ஏறுவதற்குள் எங்கள் கால்மூட்டுக் கழன்று விடுவது போல் கஷ்டப்படுகிருேம். மிகவும் அகலம் குறைந்த பாதையில் செங்குத்தாக ஏறும் இடங்களில் குதிரை மீது வரும் நண்பர்களின் துணிவை எண்ணி அதிசயிக்கிருேம்.

மலையுச்சியை நோக்கிச் செல்லும் குதிரைகள் எங்கோ ஆகாய மார்க்கத்தில் வளைந்து வளைந்து செல்வன போலவும், கீழிருந்து வருபவை ஏதோ பாதாள லோகத்திலிருந்து வருவன போலவும் தென் படுகின்றன. இரண்டிற்கும் மத்தியில் திரிசங்கு சொர்க்கத்தில் உள்ள நாங்கள் ஏறவும் வலுவின்றி,

இறங்கவும் மனமின்றிப் பிரமித்து நிற்கிறோம். சக்தியற்ற எங்களை மலையைத் தாண்டச் செய்ய இறைவனை இறைஞ்சுகிறோம். ஒருவிதமாக மலையுச்சியையும் அடைகிறோம். அங்குள்ள ஒரு பாறைமீது அமர்ந்து கீழுள்ள காட்சியைக் காண்கிறோம். ஆகா! அது போன்ற காட்சிக்காகப் பிஸு உச்சி போல் பத்து மலையுச்சிகளை ஏறலாம் என்று தோன்றுகிறது! இரத்தினக் கம்பளம் போர்த்தியதைப் போன்ற நீண்ட நெடிய இரண்டு மலைத் தொடர்கள்; அவற்றிற்கிடையே பாதாளத்தில் ஓடும் வெள்ளைவெளேர் என்ற வெள்ளி நதியைக் காண்கிறோம்.



அங்கிருந்து மெல்ல எங்கள் பயணத்தை மீண்டும் தொடங்குகிறோம். பழையபடி மீண்டும் ஒரு புறம் நெடிதுயர்ந்த மலை; மறு புறம் மிகவும் ஆழமான பள்ளத்தாக்கு. அங்கு ஓடும் நதியோ ஆங்காங்கே உறைந்து பனிப்பாறையாக வெள்ளைவெளேரென்று காட்சி தருகிறது. எதிர்ப் புறமுள்ள மலைச்சரிவிலும் ஆங்காங்கே வெள்ளி இழைத்தாற் போன்ற பனிப் பிரதேசங்களைக் கண்டு அதிசயிக்கிறோம்.

ஆ! இதென்ன அற்புதக் காட்சி! சாந்தம் தவழும் பனிமலைகளுக்கு இடையில் இந்த நீலவண்ண ஏரி இருக்கிறதா, அல்லது இந்த ஏரியில் இவ்வளவு பனிச் சிகரங்கள் இருக்கின்றனவா? ஆதிசேஷன் வாழ்வதாகக் கருதும் சேஷநாக் ஏரி அன்றோ இது? ஆம்! எங்களின் இரண்டாவது தங்குமிடமாகிய சேஷநாகின் வருகையை இந்த ஏரி அறிவிக்கிறது. 12,200 அடி உயரமுள்ள சந்தன்வாரியிலிருந்து எட்டு மைல் தூரத்தில் உள்ள இந்த இடத்தை அடைய ஐந்து மணிநேரம் ஆகிறது. ஆய்ந்து ஓய்ந்து வரும் எங்களைக் கூடாரத்தில் தயாராக விரிக்கப்பட்டிருந்த படுக்கைகள் வரவேற்றன.

மறுநாள் காலை கிளம்புவதற்கு எட்டரை மணி ஆகிவிடுகிறது. அன்றுதான் இந்தப் பயணத்திலேயே மிகவும் உயர்ந்த இடமாகிய மகாகுண மலைச் சிகரத்தைக் கடக்க வேண்டும். சேஷநாகிலிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ள இந்தச் சிகரம் 14,500 அடி உயரம் உள்ளது. ஆஸ்த்மா, மற்றும் புப்புச நோயுள்ளவர்களுக்கு இங்கே சுவாசிக்கச் சிரமம் ஏற்படுவதனுல் அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொள்வது நல்லதல்ல. ஆனுல், விழாக் காலத்தில், சிராவண பௌர்ணமி சமயம், அரசாங்கம் ஆங்காங்கே பிராணவாயு ஸிலிண்டர்களை ஏற்பாடு செய்கிறது.

இந்த மகாகுணப் பள்ளத்தாக்கில் ஒருவகை மஞ்சள்நிறப் பூ இருப்பதாகவும், அதை நுகர்ந்தால் சிலருக்கு மயக்கம் ஏற்படுவதாகவும் கூறுகின்றனர். இதைக் கடந்து ஒருமைல் தூரம் சென்று 'புஷ்பாத்ரி' (Meadow of Flowers) என்ற இடத்தை அடைகிறோம். அதையும் தாண்டி நான்கு மைல் தூரம் நடந்தபின் 11,500 அடி உயரத்தில் உள்ள 'பஞ்சதரணி' என்னும் மூன்ருவது தங்குமிடத்தை அடைகிறோம். சேஷநாகிலிருந்து எட்டு மைல் தூரத்தில் உள்ள பஞ்சதரணியை அடைவதற்கும் ஐந்துமணி நேரம் ஆகிறது.



பஞ்சதரணியிலிருந்து அமரநாத் குகை நான்கு மைல் தூரத்தில் இருக்கிறது. குகைக்கு அருகில் தங்க முடியாதாகையால், பயணிகள் பஞ்சதரணியிலிருந்து காலையில் புறப்பட்டு, குகைக்கு அருகில் ஓடும் அமரகங்கையில் ஸ்நானம் செய்து, சுவாமிதரிசனம் செய்து, பிறகு இருட்டுவதற்குள் பஞ்சதரணிக்குத் திரும்பிவிடுகின்றனர்.

18-7-78 செவ்வாயன்று சுமார் ஒன்றரை மணிக்கு நாங்கள் பஞ்சதரணியை அடைந்தோம். மறுநாள் குருபௌர்ணமி தினம். அன்று அதிகக் கூட்டம் வருமாகையால் நானும் சில நண்பர்களும் 18-ஆம் தேதியே ஒரு முறை குகைக்குச் சென்று

வரத் தீர்மானித்தோம். அன்று எட்டு மைல் தூரம் பயணம் செய்த களைப்பு இருந்ததனாலும், குதிரைச் சவாரி அனுபவம் வேண்டும் என்று விரும்பியதனாலும் நானும் என் நண்பர்களும் குதிரையில் கிளம்பினோம். 11,500 அடி உயரத்திலுள்ள பஞ்ச தரணியிலிருந்து 13,500 அடி உயரத்திலுள்ள 'ஸாந்த் ஸிங்க்' உச்சியில் ஏறி, பிறகு அந்த மலையின் மறுபுறம் இறங்கி, ஒரு மைலுக்கும் மேல் உறைந்துள்ள ஒரு நதியின் மீது சென்று, பிறகு மீண்டும் எதிர்ப்புறமுள்ள மலைமீது ஏறி, 13,500 அடி உயரத்திலுள்ள அமரநாத் குகையை அடைய வேண்டும்.

ஆங்காங்கே செங்குத்தாக உள்ள பாதைகளில் செல்லும்போது, நடப்பதைக்காட்டிலும் குதிரையில் செல்வதற்குத்தான் துணிச்சல் அதிகம் வேண்டும் என்று தோன்றுகிறது. மேலும், 'நம்மால் இவ்வளவு உயரம் ஏற முடியுமா?' என்ற ஐயமும் கூடவே ஏற்படுகிறது. உறைந்த நதியின்மீது குதிரை செல்லும்போது, 'பனி நெகிழ்ந்து குதிரை கீழே ஓடும் நதியில் மூழ்கிவிட்டால் என்ன ஆகும்?' என்ற எண்ணம் தோன்றவும் இரத்தம் உறைவது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது.

அந்தக் குதிரைப் பயணம் அழகிய, ரம்மியமான பனிச்சிகரங்களைப் பார்த்துக்கொண்டுபோன சமயங்களில் தேவலோகப் பயணமாகவும், செங்குத்தான மலைப் பாதைகளில் ஏற முடியாமல் குதிரையின் கால்கள் மடங்குவதைக் காணும்போது நரகலோகப் பயணமாகவும், மற்றச் சமயங்களில் ஸ்வப்ன லோகப் பயணமாகவும் தோன்றியது. முடிவில், தூரத்தில் குகைவாசலைப் பார்த்ததும் சொர்க்கத்தின் வாசலையே கண்டது போன்ற பரவசம் ஏற்பட்டது.

இவ்வளவு தூரம் மலைகள் பல ஏறியும் இறங்கியும் படி ஒன்றைக்கூடக் காணாத குறையைத் தீர்க்கவோ என்னவோ, குதிரையை விட்டு இறங்கியதும், சுமார் ஐந்நூறு படிகள் ஏறியபிறகே குகை வாசலை அடைய முடிகிறது. சுமார் 50 அடி அகலம், 40 அடி உயரமுள்ள குகைவாசலில் நுழைந்து, உள்ளே சென்று, ஏழு எட்டுப் படிகள் ஏறி ஒரு மேடையைக் கடந்து, மீண்டும் நான்கு ஐந்து படிகள் ஏறி அடுத்த மேடையில் ஏறினோமானால், அதன் வலது பின்மூலையில் குகையின் சுவரை ஒட்டினாற்போல், பக்தர்கள் பரவசம் அடையும் வகையில் பால்வண்ணத்தில் பனிலிங்கமாகப் பகவான் எழுந்தருளியிருக்கிறார். இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண எவ்வளவு சிரமம் வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளலாம் என்ற எண்ணம் தோன்றியது.

குகையின் மேல்பாகத்திலுள்ள 'ராமகுண்டம்' என்னும் நீர்த் தேக்கத்திலிருந்து நீர் சொட்டுச் சொட்டாகக் குகையின் பல பாகங்களில் சொட்டிக் கொண்டிருக்கிறது. நாங்கள் பார்த்த அன்று லிங்கம் சுமார் பத்து அடி உயரம் இருந்தது. கீழ்ப் பாகத்தின் சுற்றளவு சுமார் பத்து முதல் பன்னிரண்டு அடிவரை இருக்கும். லிங்கத்தைச் சுற்றிலும் சுமார் நான்கு ஐந்து அடி தூரத்திற்குத் தண்ணீர் உறைந்திருந்தது.

அதே மேடையின் இடது புறத்தில் சிறிது தண்ணீர் உறைந்திருந்தது. அதைப் பார்வதிதேவி என்று சொல்லுகின்றனர். அந்த மேடையிலிருந்து இறங்கிக் கீழுள்ள மேடையின் இடது புறத்திற்கு வந்தால் அங்கே பரந்த அளவில் தண்ணீர் உறைந்திருந்தது. அதை விநாயகப்பெருமான் என்று கூறுகின்றனர். அந்தப் பகுதியிலுள்ள குகையின் சுவரைச் சுரண்டி அதை விபூதிப் பிரசாதமாகப் பக்தர்கள் எடுத்துச் செல்லுகின்றனர். அந்த மேடையிலிருந்து கீழே வந்தால் குகையின் இடது புறம் ஓர் இடத்தில் தண்ணீர் சேருகிறது. அது பனிலிங்கம் உருகி வரும் தண்ணீராம். அது ஒரு குழாயின் மூலம் சிறிது சிறிதாக வருமாறு அமைக்கப்பட்டுள்ளது. அந்த நீரையே அமரகங்கா என்ற புனிதத் தீர்த்தமாகப் பக்தர்கள் எடுத்துச் செல்லுகின்றனர்.



நாங்கள் எதிர்பார்த்தபடியே அன்று கூட்டம் அதிகம் இல்லாமல் நன்றாகக் கடவுள் தரிசனம் செய்ய முடிந்தது. ஒரு மணி நேரத்திற்கு மேல் அங்குத் தங்கி இறைவனை மனமாரத் தரிசித்தோம். பிறகு பஞ்சதரணியில் உள்ள எங்கள் கூடாரத்திற்குத் திரும்பினோம்.

மறுநாள் காலை எட்டு மணிக்கே கிளம்பிச் சுமார் பத்து மணிக்குக் கால் நடையாகக் குகையை அடைந்தோம். குகைவாசலில் பறந்துகொண்டிருந்த இரண்டு புறாக்களைச் சுட்டிக்காட்டி ஒரு

பிச்சைக்காரன் சில யாத்திரிகர்களுக்கு ஏதோ கூறிக்கொண்டிருந்தான். நாங்களும் அருகில் சென்று கேட்டதில், "இந்தக் குகையில்தான் சிவ பெருமான் அன்னை பார்வதிதேவிக்கு முக்தியின் இரகசியத்தை ஒரு பௌர்ணமி இரவில் கூறினார். அப்போது அதை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த இரண்டு வேலையாட்களைப் புறாவாகும்படி இறைவன் சபித்தார். அது முதல் அந்தப் புறாக்கள் அங்கேயே வசிப்பதாகக் கருதப்படுகிறது. அவற்றைத் தரிசிப் போருக்கு யாத்திரையின் பூரண பலன் கிட்டுவதாக நம்பப்படுகிறது" என்று அவன் கூறினான். காக்கையோ வேறு எந்தப் பறவைகளுமோ இல்லாத—கற்பாறைகளையும் பனிப்பாறைகளையும் தவிர எந்தவிதமான புற்பூண்டுகளுமே இல்லாத—அந்தப் பிரதேசத்தில், இந்த இரண்டு புறாக்களை மட்டும் கண்டு நாங்கள் அதிசயித்தோம். பிறகு குகையினுள் சென்று அன்றைய தினமும் இறைவனை நன்கு திருப்தியாக வணங்கிப் பஞ்சதரணி



திரும்பினோம். மதிய உணவை முடித்துக்கொண்டு சுமார் இரண்டு மணிக்கு அங்கிருந்து கிளம்பி இரவு ஏழரை மணிக்குச் சேஷநாகிற்குத் திரும்பினோம். இரவை அங்குக் கழித்து மறுநாள் காலை எட்டுமணி சுமாருக்குக் கிளம்பிச் சந்தன்வாரி வழியாக மாலை நான்கு மணி சுமாருக்குப் பகால்காம் வந்தடைந்தோம்.

பகால்காமிலிருந்து ஸ்ரீநகர் வந்து சங்கராசாரியார் கோவில், க்ஷீரபவானி கோவில் ஆகியவற்றைத் தரிசித்துக்கொண்டு ஜம்மு திரும்பினோம். அங்கிருந்து கத்ரா சென்று வைஷ்ணவிதேவியைத் தரிசித்துவிட்டு, ஜம்மு வழியே படான்கோட் வந்தோம். அங்கிருந்து எழுபது மைல் தூரத்தில் உள்ள ஜ்வாலாமுகி சென்று, அனல்வடிவாக உள்ள அன்னையைத் தரிசித்து, எங்கள் பாவச்சுமையைப் போக்கப் பிரார்த்தித்து, மீண்டும் படான்கோட் வழியே சென்னை திரும்பினோம். ○

சாந்தகுணமுள்ளவர்களைக் கர்த்தர் நியாயத்தில் நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தம் வழியைக் கற்பிக்கிறார்.

—பைபிள்

பசியினால் துன்புற்றுக் கன்னப் புடையில் கைகளை வைத்துக்கொண்டு கண்களில் நீர் கலங்க வருந்தும் ஏழை மக்களுக்கு ஆகாரம் கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே சீவ காருண்யம்.

—வடலூர் வள்ளலார்


இறைவனிடம் அன்பைக் கேளுங்கள். தூய்மையை வேண்டுங்கள். மங்கல வாழ்க்கையை வேண்டுங்கள். நல்ல உன்னதமான எண்ணங்களுடன் என்றும் எழுச்சியை நோக்கிச் செல்லுங்கள். உங்கள் வாழ்க்கை மலரும். வாழ்வில் உண்மையும் ஒளியும் செழிப்பும் ஓங்கும்.

—ரிக்வேதம்

தேவாலயக் கிரியைகள் காலந்தோறும் தவறாமல் சிரத்தையோடு விதிப்படி செய்யப்படுமானால், உலகத்தில் காலந்தோறும் மழை தவறாமல் பெய்யும்; நெல் முதலிய எல்லா வளங்களும் பெருகும்; ஆரோக்கியம் உண்டாகும்; அரசநீதி நடக்கும்; கல்வியறிவும் ஒழுக்கமும் தெய்வபக்தியும் தழைத்தோங்கும். தேவாலயக் கிரியைகள் சிரத்தையோடு விதிப்படி செய்யப்படாதொழியின், உலகில் மழையின்மையும், பஞ்சமும், மசூரிகை விஷூசி முதலிய கொடுநோய்களும், கன்னம் களவு கொலை முதலிய தீய தொழில்களுமே விருத்தியாகும். ஆதலால், கோயில் அதிகாரிகள் முக்கியமாகத் தேவாலயங்களைச் சிரத்தையோடு விதிப்படி சாவதானமாக நடத்தல் வேண்டும்.

—நல்லூர் ஆறுமுக நாவலர்
(யாழ்பாணம்)

பிரபத்தி நெறியின் பெருமை



ந. ரா. முருகவேள் M.A., M.O.L.

உலகிற் பிறந்து வாழ்கிற மக்கள் அனைவரும் இன்றியமையாமல் அறிந்துகொள்ள வேண்டிய பொருள்கள் மூன்று. அவை தத்துவம் இதம் புருடார்த்தம் எனப்படும். தத்துவம் என்பது அறிவுடைப் பொருள், அறிவில் பொருள், கடவுள் என்னும் முப்பொருள்களைப் பற்றிய உண்மைகளை உணர்ந்துகொள்ளுதல். இவற்றை முறையே சேதனம் அசேதனம் ஈசுவரன் என்றும், தத்துவத் திரயம் என்றும் வழங்குவர். சேதனம் என்பது உயிர். அசேதனம் என்பது உலகம். இந்த இரண்டு பொருள்களையும் உடலாகக் கொண்டு நீக்கமற நிறைந்து நிற்பவனாகவும், எல்லோரையும் எல்லாவற்றையும் இயக்குபவனாகவும், காப்பவனாகவும் உள்ள பரம்பொருளே ஈசுவரன் எனப்படும். இறைவனை அடைந்த பின்பு பெறும் பேறு எதுவோ அதுவே புருடார்த்தம் என்னும் உறுதிப் பொருளாகும். திருமாலே பரம்பொருள் என்றும், பிரபத்தியே திருமாலை அடைவதற்கு உரிய நெறி என்றும், ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வதே சிறந்த பேறு என்றும் தெளிவாக அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதது என வைணவப் பெரியோர்கள் கூறுவர்.

இறைவனை அடைவதற்கு உரிய வழிகள் நான்கு என்று சமய நூல்கள் கூறும். சிறப்பாக, கண்ணபிரான் அருளிச்செய்த பகவத்கீதை என்னும் நூலுள் நான்கு வகையான யோகநெறிகள் கூறப்படுகின்றன: 1. கரும யோகம், 2. ஞான யோகம், 3. பக்தி யோகம், 4. பிரபத்தி யோகம். தவம் வேள்வி முதலியவற்றை, அவற்றின் பயன் கிடைக்கும் வரையில் மிகுந்த அன்புடன் இடையறாது முறைப்படி செய்து வருதல் கரும யோகம். பொறி புலன்களை வென்று மனத் தூய்மையுடனும் ஒருமைப்பாட்டுடனும் தியானத்தில் ஊன்றியிருத்தல் ஞான யோகம். இறைவனிடம் அயரா அன்பு கொண்டு தியானம் பூசனை தோத்திரம் வழிபாடு முதலியவற்றில் அழுந்தி நிற்றல் பக்தி யோகம். 'நான் ஒன்றையும் கடைப்பிடித்து ஒழுக வல்லமை இல்லாதவன்; என்னைக் காத்தருள வேண்டிய பொறுப்பு நின்னையே சேரும். ஆதலால், உன் அருளை எதிர் பார்த்திருப்பதைத் தவிர என்னால் ஆவது ஒன்றுமில்லை' என்னும் திண்மையான உள்ளத்துடன் இறைவனுடைய திருவடித் தாமரையிலேயே தன்னை அடைக்கலமாக ஒப்படைத்து நிற்றல் பிரபத்தி யோகம் ஆகும். இதுவே சரணாகதி என்றும் வழங்கப்பெறும். வைணவப் பெருஞ் சான்றோர்களான ஆழ்வார்கள் ஆசாரியர்கள் யாவரும், வேறு உபாயங்களிலோ நெறிகளிலோ புகாமல் இந்தப் பிரபத்தி நெறியிலேயே மிகவும் ஈடுபட்டு நின்றார்கள். அது பற்றியே அவர்களைப் பிரபன்னர் என்றும், பிரபன்ன குலம் என்றும் வைணவ உலகம் போற்றி வருகிறது.

இந்தப் பிரபத்தியானது கை கால் முதலிய உறுப்புக்களினால் செய்யப்படுவதன்று. உள்ளத்தில் கடைப்பிடிக்கும் ஒரு வகையான தெளிந்த உறுதியே பிரபத்தி எனப்படும். "இறைவனே! என் பேற்றுக்கு நீயே துணையாக வேண்டும்" என்கிற நினைவே, பிரபத்தி அல்லது சரணாகதி எனப்படும். தன்னுடைய விருப்பம் வேறு எந்த உபாயத்தினாலும் நிறைவேறாது என்று தெரிந்து, உறுதியான நம்பிக்கையுடன் இறைவன் ஒருவனையே பற்றுக்கோடாகக் கொள்வதுதான் பிரபத்தி ஆகும். மேற்கூறிய கரும யோகம் ஞான யோகம் பக்தி யோகம் என்னும் உபாயங்களைக் கடைப்பிடிக்கத் திறமையற்றவர்கள்தாம் இந்தப் பிரபத்தி நெறியைக் கைக்கொள்ள வேண்டும் என்பது சிலருடைய கொள்கை. அங்ஙனம் கொள்ளாமல், கரும யோகம் முதலியவற்றைக் கடைப்பிடித்து ஒழுக வல்ல ஆற்றல் வாய்ந்தவர்களாக இருந்தாலும், அவற்றையெல்லாம் மேற்கொள்ளாமல், பிரபத்தி நெறியில் தான் ஈடுபட வேண்டும்; அதுதான் சாலச் சிறந்த நெறி என்பது வைணவப் பெருஞ் சான்றோர்களின் தெளிந்த முடிவு ஆகும். இந்தப் பிரபத்தி நெறியையே கடைப்பிடித்து ஒழுகியமையால்தான், வைணவப் பெருஞ் சான்றோர்களான ஆழ்வார்

களும் ஆசாரியர்களும் பிரபன்னர்கள் என்று பெரிதும் போற்றிச் சிறப்பிக்கப்பெறுகின்றனர்.

பிரபத்தி நெறிக்குத் தேச நியமம், கால நியமம், அதிகாரி நியமம், பிரகார நியமம், பல நியமம் முதலிய ஒரு நியமமும் இல்லை. புண்ணியத் தலத்தில் செய்ய வேண்டும், வேறு இடத்தில் செய்தல் ஆகாது என்பது தேச நியமம். இளவேனில் முதலிய காலங்களிலே செய்ய வேண்டும், மற்றக் காலங்களில் செய்தல் ஆகாது என்பது கால நியமம். இன்ன இன்ன தகுதியுடையோரே செய்தற்கு உரியர், பிறர் உரியர் அல்லர் என்பது அதிகாரி நியமம். நீராடிய பின்னரும் கைகால் முதலியன கழுவிய பின்னருமே செய்தற்கு உரியது, இங்ஙன மன்றிச் செய்தலாகாது என்பது பிரகார நியமம். இன்ன பயனைத்தான் இது தரும், வேறு பயனைத் தரமாட்டாது என்பது பல நியமம். இத்தகைய நியமக் கட்டுப்பாடுகளெல்லாம் வேள்வி முதலிய கடமைகளைச் செய்வதற்கு ஏற்பட்டுள்ளன. ஆனால் பிரபத்தி நெறிக்கு இந்த நியமங்களில் எதுவும் விதிக்கப்படவில்லை.

விபீடணன் கடற்கரையிலே இராமபிரானிடம் அடைக்கலம் புகப் போந்தான். அப்போது, "இவன் இடமல்லாத இடத்திலே, காலமல்லாத காலத்திலே வந்திருக்கிறான். ஆதலால் இவன் ஐயப்படுதற்கு உரியவன்" என்று, வானர சேனைத் தலைவர்கள் பலர் இராமபிரானிடம் கூறினர். அப் போது. அவர்களின் கூற்றை மறுத்து, ஆஞ்சநேயன், "தூய கருத்தினனாகிய விபீடணன் அடைக்கலம் என்று கூறி வந்த இடத்திலும் காலத்திலும் நாம் குறை காண்டல் கூடாது. அவன் அடைக்கலமாக வந்து சேர்ந்ததுவே நல்ல இடமும் நல்ல காலமும் ஆகும்" என்று கூறினான். இதனால் பிரபத்தி நெறிக்குத் தேச நியமம் கால நியமம் இல்லை என்பதைத் தெளியலாம்.

திரௌபதியானவள், துச்சாதனனால் பற்றி இழுக்கப்பட்டுச் சபையில் கொணரப்பெற்றபோது, அவள் பூப்பெய்திய நிலையில் இருந்தாள். தூய்மையற்ற அந்த நிலையிலேயே அவள், "கோவிந்தனே, தாமரைக் கண்ணனே! நான் உன்னை அடைக்கலம் புகுகிறேன். என்னைக் காப்பாற்றுக" என்று அரற்றிப் புலம்பிக் கண்ணபிரானை நோக்கிப் பிரபத்தி செய்தாள். நீராடித் தூய்மையுற்று, அதன்பின் அவள் கோவிந்தா என்று கூவி அடைக்கலம் புக நினைத்திலள். அதற்காகக் கண்ணபிரானும் அவளைப் புறக்கணித்திலன். அப்போதே அவளுக்கு அருள் செய்து அவளைக் காப்பாற்றினான். இதனால் பிரபத்தி நெறியைக் கடைப்பிடித்து ஒழுகத் தலைப்படுகிறவர்களுக்கு அதிகாரி நியமமும், பிரகார நியமமும் பிறவும் இல்லை என்பது புலப்படுதல் காணலாம்.

அருச்சுனன் கண்ணபிரானிடத்தில் கொடியோர் பலர் சூழ நின்ற போர்க்களத்திலேயே கீதோபதேசம் கேட்டு உணர்ந்தான். இதனாலும் பிரபன்ன நெறிக்கு இடமும் நேரமும் சூழ்நிலையும் ஆகிய நியமங்கள் எவையும் இல்லை என்பது தெளியலாம். இவற்றால் தெளியப்படுவது யாதெனில், பிரபத்தி நெறியைப் பற்றிக் கேட்டு உணரும்பொழுதும், கடைப்பிடித்தொழுகும்போதும், விபீடணனும் திரௌபதியும் அருச்சுனனும் தத்தம் நிலையிலேயே தகுதியும் உரிமையும் பெற்றாற்போல, பிரபத்தி நெறியில் ஈடுபட முற்படுங்கால், தூய்மையில்லாதார் தூய்மைதேட வேண்டுவதில்லை; காலமும் இடமும் சூழ்நிலையும் கருத வேண்டுவதில்லை; அந்த நெறியில் விருப்பமும் பற்றும் உறுதியும் ஏற்பட்டால் அதுவே எல்லாத் தகுதிகளையும் உரிமைகளையும் வழங்க வல்லது என்பதாகும்.

இனி, இந்தப் பிரபத்தி நெறிக்கு இன்னார்தாம் உரியர் என்ற அதிகாரி நியமமும் இல்லை. ஆடவரான பஞ்ச பாண்டவர்களும், பெண்மகளான திரௌபதியும், செய்யத் தகாத பெருங்குற்றத்தைச் செய்த காகாசுரனும், கொடிய நஞ்சை உடைய காளியன் என்னும் அரவும், விலங்காகப் பிறந்திருந்தாலும் அன்பில் மிக்க கசேந்திரனும், இராக்கதனாகிய விபீடணனும், இராமபிரானும் இளைய பெருமாளும் முதலியவர்கள் எல்லோரும் அடைக்கலம் புகுந்து சரணாகதி என்னும் இந்தப் பிரபத்தி நெறியில் ஒழுகினர். ஆதலால் இதற்கு இன்னார்தாம் உரியவர் என்னும் நியமம் இல்லை. விருப்பமுடையார் எல்லோரும் இந்த நெறிக்கு உரியவரே ஆவர். மேற்கூறிய பஞ்ச பாண்டவர் முதலானோர் அனைவரும் தாம் தாம் விரும்பிய பயனை அடைந்ததனால், பிரபத்தி நெறிக்குப் பல நியமம் என்பதும் இல்லை எனத் தெளியலாம். விரும்பிய எல்லாப் பயன்களையும் தர வல்லது இந்தச் சிறந்த பிரபத்தி நெறி.

இங்ஙனம் பிரபத்தி நெறிக்கு நியமங்கள் ஆகிய கட்டுப்பாடு ஒன்றும் இல்லையாயினும், பொருள் நியமம் என்பது ஒன்று மட்டும் உண்டு. அதாவது, குறைவிலா நிறைவாய் விளங்கும் முழு முதற் பரம் பொருள் ஒருவன் திறத்திலேயே, இந்தப் பிரபத்தி

(383 ஆம் பக்கம் பார்க்க)



யாத்திரையா, குருவா?

ஆதிசங்கரருக்கும் பத்மபாதருக்கும் நடைபெற்ற இந்த உரையாடல், கடோபநிஷதம் குறிப்பிடும் யமதர்மராஜனையும் நசிகேதனையும் நினைவுபடுத்துகிறது.

பகவான் ஆதிசங்கரரின் முக்கியச் சீடர்களுள் பத்மபாதர் என்பவரும் ஒருவர். ஒரு சமயம் அவர் பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று தரிசிக்கவும், புண்ணிய நதிகளில் நீராடி வரவும் ஆவல் கொண்டார். ஆகவே அவர் தம் குருவாகிய ஆதி சங்கரரிடம் தமது விருப்பத்தைத் தெரிவித்து, தாம் யாத்திரை செல்வதற்கு அனுமதியளிக்கக் கோரினார்.

அதற்குச் சங்கரர் கூறினார் :—"என் பிரிய சீடனே! அங்கும் இங்கும் அலைந்து நேரம் போக்குவதைவிட, குருவின் அருகிலிருந்து அவருக்குப் பணிவிடை செய்வதன் மூலம் சிறந்த யாத்திரையின் பலனை அடைந்துவிடலாம். பல புண்ணிய க்ஷேத்திரங்களிலும் கோவில் கொண்டுள்ள தெய்வங்களின் திருவருளை, குருவைப் பூஜிப்பதன் மூலமே பெற்றுவிடலாம். குருவின் பாதங்களை அலம்பும் நீரே பல புண்ணிய தீர்த்தங்களுக்குச் சமமாகும்.

"துறவிகளுள் முற்றுமுணர்ந்த தவச்சீலர்களாக ஒரு சாரார் இருக்கிறார்கள். ஆன்மிகத் துறையில் முன்னேற விரும்பி ஊக்கத்துடன் சாதனை பயின்று கொண்டிருப்பவர்களாக மற்றொரு சாரார் இருக்கிறார்கள். ஜீவன் பரமாத்மாவை அடைய, சதா சர்வ காலமும் ஒரே சித்தத்துடன் சஞ்சலமின்றித் தியானம் பழக வேண்டும்.

"சற்று யோசித்துப் பார் : தீர்த்த யாத்திரையை மேற்கொள்ளுகிறவனுக்குத்தான் எவ்வளவு தொல்லைகள், இடைஞ்சல்கள்! வெகு தூரம் நடந்து களைத்துப்போய்த் துன்பமும் களைப்பும் மேலோங்கும்போது அவனுக்கு ஆன்மிக நாட்டம் இருக்க முடியுமா? தங்கும் இடம், தண்ணீர் வசதி, உண்ண உறங்க வசதிகள், உடல் அசௌகரியம் ஏற்படும் போது அவற்றைப் போக்கும் வழிவகைகள், உடைமைப் பாதுகாப்பு, ஸ்நானம் ஜபம் தியானம் பழகுவதற்கு வேண்டிய வசதிகள், உற்ற வழித் துணை ஆகியவை பற்றிய சிந்தனையிலேயே யாத்திரிகனின் மனம் தோய்ந்திருக்கும். நோய்வாய்ப் பட்டவனையோ, களைப்பால் பின் தங்குபவனையோ எந்த யாத்திரிக நண்பனும் விட்டுச் செல்லக் கூடும்.

"ஆகவே, இத்தகைய கவலைகளுக்கும் துன்பங்களுக்கும் இடமின்றி, குருவின் பாதங்களைப் பணிந்து, அவருடைய உபதேசத்தின்படி, ஓர் இடத்தில் ஞானசாதனை பழகுவதே சிறந்த பயனை அளிக்கும். சீடனின் அன்பு கலந்த பக்திப் பணிவிடையால் மகிழ்ந்து அருள் சுரக்கும் குருவின் ஆசியால் சீடனுக்கு ஆத்மஞானம் சித்திக்கிறது; மாயப் பிறப்பறுத்து, துன்பங்களுக்கு இருப்பிடமான பிறவிக்கடலைக் கடக்கச் செய்து, ஜீவனைச் சிவத்துடன் இணையச் செய்கிறது.


"எனவே, அங்கும் இங்கும் அலைவதனால் என்ன பயன்? குருவே பிரத்தியட்ச தெய்வம் என்பதைத் தெரிந்துகொள்வாய்" என்று சீடனிடம் தெரிவித்தார்.

குருவின் கூற்றை மறுக்காமல், அதே சமயம் தமது உள்ளத்தில் எழுந்த ஆவலைப் பத்மபாதர் பணிவுடன் தெரிவித்தார்: "சுவாமி! குருவின் மொழிகளை மறுக்காமல் ஏற்றுக்கொள்வதே நல்லது என்றாலும் நான் சில வார்த்தைகளைச் சொல்ல அருள் புரிவீராக. குருவின் சன்னிதானம் பல புண்ணிய க்ஷேத்திரங்களில் வசிப்பதற்கு ஒப்பாகும், மேலான நன்மையையும் தரும் என்று அறிந்துங்கூட ஏனோ என் மனம் புனித க்ஷேத்திரங்களுக்குச் செல்லாதிருப்பது குறித்து அதிருப்தி

அடைகிறது. தாங்கள் கூறும் சிரமங்கள் யாவும் புனித யாத்திரையை மேற்கொள்ளும் அனை வருக்கும் பொதுவானதே ஆகும். ஆனாலும் ஐயனே! எல்லா வசதிகளோடும், சிரமமின்றிச் சுக போகத்தில் வாழ்ந்திருந்து, யாராவது ஆன்மஞானம் பெற்றிருக்கிறார்களா? உடலுக்குச் சிரமமே ஏற்படக் கூடாது என்று ஒரே இடத்தில் வசதியாக உட்கார்ந் திருப்பவர்களுக்கு எப்படித் தெய்வ நம்பிக்கையும் ஞானமும் வளர வாய்ப்பு ஏற்படும்?

"வாழ்க்கைக்கு உரிய வசதிகளைப் பொறுத்த வரையில் ஒருவனுக்கு விதி (ஊழ்வினை) இருந்தால் கானகத்திலும் உணவும் மற்றும் வேண்டிய வசதி களும் கிடைத்துவிடும். இல்லாவிட்டால் எங்கே இருந்தாலும் வசதியின்றி ஒருவன் துன்பப்படுவான். ஒருவன் நோய்வாய்ப்படுவது என்பது, யாத் திரையை மேற்கொள்ளும்பொழுதுதான் ஏற்படும் என்பதல்ல. ஒரே இடத்தில் ஒருவன் இருந்தாலும், விதிவசத்தால் அவன் நோய்வாய்ப்படக்கூடும்.

"அதுபோலவே ஒருவன் எல்லா வசதிகளுடன் ஒரே இடத்தில் இருந்தாலும் சரி, அல்லது வேறு இடங்களுக்குச் சென்றுகொண்டிருந்தாலும் சரி, விதிப்படி அவன் உயிரை மரணதேவன் பறித்துச் சென்றுவிடுவான். ஆகவே வசதி கிடைப்பதோ, நோயால் துன்புறுவதோ, மரணமடைவதோ விதி யின் வழியேதான் நடக்கும் என்று நினைக்கிறேன். மேலும், 'இடவசதி சந்தர்ப்பக் கோளாறுகளைச் சமாளிக்க வேண்டிய ஒருவனின் நித்திய காரிய நிய மங்கள் குறைவதனால் எந்தப் பாவமும் அணுகாது' என்று மனு போன்ற ஆசாரசீலர்கள்கூடச் சிற்சில விதிவிலக்குகளை அளித்திருக்கிறார்கள். உண்மை யான பக்தன் எங்கே இருந்தாலும் ஜபம் தவம் முதலியவற்றைச் சிரத்தையோடு செய்யப் பழகி விடுவான். இறைவனின் திருவருளால் அவன் மனம் சஞ்சலமின்றி ஆத்மாவிலேயே லயித்திருக்கும் என்பது எனது முழு நம்பிக்கை.



"புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவது மன அமைதியைத் தருகிறது. பலவேறு இடங்களுக்குச் சென்று வந்த அனுபவங்கள் புத்தியை விரிவடையச் செய்கின்றன. அங்கங்கே வசிக்கும் யோகிகள், சாதுக்கள் முதலிய சான்றோர்களின் தரிசனம் ஒரு வனுக்குச் சாதனையில் வரக்கூடிய இன்னல்களைத் தாண்டத் துணைபுரிகிறது. இவ்விதம் பல விதங் களிலும் புனித யாத்திரை உதவியாக இருக்கும் போது அந்த அபூர்வச் சந்தர்ப்பத்தை யார்தாம் நழுவ விடுவார்கள்! புத்திமான்களாகிய ஞானி களும் சாதுக்களும் நல்லவர்களுமே நமக்கு உற்றார் உறவினர் ஆவர். அத்தகைய பெரியோர்களுடன் பழகுவதனால் ஏற்படும் அனுபவம், 'பொய் எது? மெய் எது?' என்பதை உணர்ந்து மெய்ஞ்ஞானம் பெற வழிசெய்கிறது.

"மேலும், நல்ல ஒரு சீடன் வெகு தூரத்தில் இருக்க நேர்ந்தாலும், உள்ளத்தால் குருவைத் தியானித்து அவரருகில் இருப்பது சாத்தியமாகும். ஆனால், பக்தி சிரத்தையின்றிச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாத சீடன், உடலினால் குருவின் அருகிலேயே இருந்தாலும் உள்ளத்தால் தனித்திருப்பவனாகவே ஆகி விடுகிறான்.

"ஆதலால், குருதேவா! பல விதங்களிலும் பயனளிக்க வல்ல இந்தப் புனித யாத்திரையை நான் மேற்கொள்ள அனுமதிக்கும்படி பிரார்த்திக் கிறேன். செல்லும் இடங்களில் நான் எப்படி நடந்துகொள்ள வேண்டும், எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பது பற்றியும் தாங்கள் எனக்கு அறிவுரை வழங்க வேண்டும்'' என்றார்.

இப்படி உண்மையான ஆர்வத்துடன் தமது அருமைச் சீடர் பத்மபாதர் கூறியதைக் கேட்ட சங்கரர் பெரிதும் மகிழ்ந்தார். உவகையோடு அவர் உரைத்தார் :— "குழந்தாய்! உன் மனநிலையைச் சோதிக்கவே முதலில் உன்னை என்னுடன் இருக்கும் படி கூறினேன். உண்மையான சிரத்தையுடன் தீர்த்த யாத்திரையை மேற்கொள்ள விரும்பும் உனக்கு என் பரிபூரண ஆசிகள் உரியனவாகுக.

"புண்ணிய க்ஷேத்திரங்கள், கோவில்கள், நகரங்கள் ஆகியவற்றை நோக்கிச் செல்லும்போது குறிப்பிட்ட இடம் என்று ஒன்றை அடைவதற்குப் பல வழிகள் இருக்கக் கூடும். அவற்றுள் மக்கள் அனைவருமே செல்லும் பொது வழியே பாதுகாப் பானது. இரகசியப் பாதைகளைத் திருடர், கொள்ளைக் காரர், துர்த்தேவதைக்குப் பலி கொடுத்துப் பூஜிக்கும் ஒழுக்கமற்ற தீயவர் முதலியவர்களே பெரும்பாலும்

உபயோகப்படுத்துவர். ஆபத்துக்கு இடமான அத் தகைய பாதைகளைத் தவிர்த்துவிடு. எவ்வித இன்னலுமின்றிப் பலரும் பத்திரமாகச் செல்லும் வழியிலேயே செல்வாய்.

"போகும் இடங்களில் சன்னியாசிகள் ஞானிகள் பண்டிதர்கள் ஆகியோரைத் தேடிக் கண்டு, நல்ல விஷயங்களை அவர்களுடன் விவாதித்து, வேதாந்த விசாரம் செய்வது புத்தியைத் தெளிவாக்கும். அவர்களுடன் ஆன்மிக உரையாடல்களையும் வேதாந்த ஆராய்ச்சியையும் நிகழ்த்துவதனுல் பல அரிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு உனக்கு ஏற்படும். அவை களைப்படைந்த மன திற்கு உற்சாகத்தையும், கஷ்டத்திற்குப் பாது காப்பையும், அச்சம் ஏற்பட்டால் தைரியத்தையும் கொடுக்கும்.

"நீ தங்கியுள்ள இடத்தின் அருகில் யாராவது சன்னியாசிகள் ஞானிகள் சாதுக்கள் இருப்பார் களானுல், தவருமல் அவர்களைத் தரிசிக்கச் செல். அவர்களை வணங்கி ஆசி பெறு. தகுதியான வர்களைச் சரியான மரியாதையோடு உபசரிக்காத வனுடைய நல்வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்படும்.

"பயனுள்ள உரையாடல்களின் மூலம் நல்லவர்க ளோடு உறவாடுவதிலும் ஒரு குறை உண்டு: அவர்களோடு இருக்கும்போது எவ்வளவுக்கு எவ்வளவு மகிழ்ச்சியும் மனநிறைவும் உண்டாகின் றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு அவர்களைப் பிரிய நேரும்போது துக்கமும் உண்டாகும். இந்த உலகிலே சிறிதேனும் குறைபாடில்லாத விஷயமோ இடமோதான் எது?

"எந்த இடத்திலும் அதிக நாட்கள் தங்காதே; அது பந்தத்திற்குக் காரணமாகிவிடும். மேலும், குறித்த காலத்தில் குறிப்பிட்ட இடத்தை அடை யவும் காலதாமதம் ஏற்படும். செல்ல வேண்டிய இடத்தைக் கூடிய வரையிலும் முன்னதாகவே யோசித்துச் சீக்கிரமாகவே செல்வாயாக; காலம் தாழ்த்தினுல் ஏதாவது இடையூறு தோன்றி உன்னை உனது இலட்சியத்தையே அடைய விடாமற் செய்துவிடும்.

"நல்ல உடையணிந்து, நாகரிகமாகவும் பணி வாகவும் பேசுபவர்களும் யாத்திரிகர்கள் போல் உன்னுடன் வழித்துணையாக வரக்கூடும். கவனத் தோடும் எச்சரிக்கையோடும் விழிப்போடும் அவர்க ளிடம் நீ நடந்துகொள். அவ்விதம் இல்லாவிட்டால் அவர்கள் உன் புத்தகம், துணிமணி என்று எது கிடைத்தாலும் அபகரித்துச் சென்றுவிடுவர். அன்னியர் யாரையும் நம்பாதே. நல்லொழுக்கமற்ற தீயோரிடம் தொடர்பு கொள்ளாதே. யாருடனும் பயனற்ற வீண்பேச்சுக்களிலும் வம்புகளிலும் ஈடு படாதே. எப்போதும் எதிலும் தூய்மையையும் நேர்மையையும் கடைப்பிடி; மகிழ்ச்சியுடன் எப் போதும் ஆத்மசிந்தனை உடையவனுக எங்கும் செல்வாயாக" என்று அன்பு கனிய ஆசாரிய சங்கரர் பத்மபாதருக்கு விடையளித்தார்.

இந்த உரையாடல் குருவின் மகிமை, யாத்திரை யின் பயன், யாத்திரை மேற்கொள்பவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய நெறி முதலியவற்றை ஒவ்வொரு வரும் தெளிவாக அறிந்துகொள்ள உதவுகிறது. இடையருமல் நாம் மேற்கொள்ளும் நம் ஆன்மிக யாத்திரைக்கும் எவ்வளவு அருமையாக இவை பொருந்துகின்றன!.* ★

* **ஆதாரம்:** சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் ஆங்கில நூல் **'ஸ்ரீ சங்கர திக்விஜயம்'**

நன்றி நவில்கிறோம்




ஆண்டுக்கு ஒரு முறை விஜயம் சிறப்பு மலராக வெளி வருவது வாசகர்கள் அறிந்ததே. இந்த ஆண்டு கார்த்திகை மாதமாகிய இம் மாதம் சிறப்பு மலராக விஜயம் வெளியிடப் பெறுகிறது.

சிறப்பு மலருக்குக் கட்டுரை கவிதைகளை. வழங்கிய அன்பர்கள் அனைவருக்கும், விளம்பரங்களைத் தந்துதவிய நிறுவனங்களுக்கும் எமது ஆழ்ந்த நன்றியையும் வணக் கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

பஸவேசுவரரின் பக்தி மார்க்கம்



இருள்நீக்கி கணேசன்

வீர சைவ இயக்கம் அல்லது லிங்காயத் இயக்கத்தைக் கர்நாடகத்தில் தோற்றுவித்து நாட்டின் இதர பாகங்களுக்கும் பரப்பியவர் புனிதரான பஸவேசுவரர் ஆவார். அன்பின் மிகுதியால் பஸவண்ணு என்றும் அழைக்கப்பெற்ற இவர் சிவபெருமானின் வாகனமாகிய நந்தி (கன்னட மொழியில் பஸவா)யின் அவதாரமாகக் கருதப் பெறுபவர்.

பஸவேசுவரரின் காலம் பன்னிரண்டாம் நூற்ருண்டு ஆகும். அப்போது நாட்டின் பிற பகுதிகளில் இருந்ததைப் போலச் சாதிக் கொடுமை, பெண்ணடிமை, மதத்தின் பெயரால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்ருல் கர்நாடக சமுதாயமும் பீடிக்கப்பட்டிருந்தது. இந்தத் தீமைகளைக் களைந்து சமுதாயத்தை நல்வழிப்படுத்தப் பக்தி மார்க்கத்தைக் கடைப்பிடித்து முழு மூச்சுடன் பாடுபட்டார் பஸவேசுவரர்.

''உயர்ந்த ஜாதியில் பிறந்தாலும், தாழ்ந்த ஜாதியில் பிறந்தாலும் ஆண்டவன் முன் அனைவரும் சமம். பணக்காரன் ஏழை என்ற பாகுபாடு கடவுளின் ராஜ்யத்தில் இல்லை. ஆண் பெண் என்ற இருபாலாரையும் படைத்தவன் பரமேசுவரனே; ஆதலால் இவர்களில் உயர்வில்லை தாழ்வில்லை.''— இதுவே பஸவேசுவரரின் ஆணித்தரமான நம்பிக்கை.

சிறுவராக இருந்தபோது இவருக்குப் பல முறை கண்ணப்ப நாயனுர் சரித்திரத்தை இசைச் சொற்பொழிவுகளில் கேட்கும் வாய்ப்புக் கிட்டியது. அதுமுதல் தம்மைச் சுற்றியுள்ளவர்கள் செய்யும் இறைவழிபாட்டுக்கும் கண்ணப்பரது பக்திக்கும் உள்ள வேற்றுமைகளை அறிய அறிய, பஸவண்ணுவின் சமயக் கண்ணேட்டமும் பக்திக் கண்ணேட்டமும் மாறுபடத் தொடங்கின. உள்ளத்திலே கள்ளம் கொண்டு உதட்டிலே மந்திரம் ஜபிப்பதை இவர் சாடினுர். ''புறச் செயல்களை விடுத்து மனதை ஒருமுகப்படுத்தி உண்மையான பக்தி கொண்டவரிடத்தில் மாத்திரமே ஈசன் கருணை காட்டுகிருன்'' என்பது இவரது பிஞ்சுமனதிலே பதிந்தது.

மக்களிடையே ஏற்றத்தாழ்வை அகற்றிச் சமத்துவம், சகோதரத்துவம் நிலவவும், பரஸ்பரம் அவர்களிடையே அன்பு நிலவவும், மக்கள் ஒருமனதுடன் பக்தி செலுத்தப் பழகவும் பூஜ்யரான பஸவேசுவரர் வீரசைவம் என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்.

யாவரும் கடைப்பிடிக்கக் கூடிய பண்பாடுகளின் அஸ்திவாரத்தின் மேல் தமது இயக்கத்தை வளர்த்தார்.

''களவு வேண்டாம், கொலை வேண்டாம், கோபம் வேண்டாம், பிறரை வெறுக்க வேண்டாம், தற்புகழ்ச்சி வேண்டாம், மாற்ருரை இகழ வேண்டாம்—இதுதான் அந்தரங்க சுத்தி, இதுதான் பகிரங்க சுத்தி. இதுதான் ஆண்டவனை நேசிக்கும் வழி'' என்று வீரமுழக்கமிட்டார்.

''பணக்காரர்களால் கட்டுவிக்கப்பட்டு எளியோருக்கு அனுமதி மறுக்கப்படும் கோவில்கள் எமக்கு வேண்டாம். கால்களாகிற தூண்கள் தாங்கும், தலையாகிற விதானத்தின்கீழ் உடலென்னும் கோவிலிலே மனமென்னும் பீடத்திலேதான் ஆண்டவன் அழியாத இடம் பெறுகிருன்'' என்று உறுதியாகக் கூறித் தம் இயக்கத்தில் சேர்ந்தோரை அத்தகைய ஆலயங்களைப் புறக்கணிக்கச் செய்தார்.

''ஜாதிஹீனனுடைய வீட்டில் எரியும் ஜோதி குறைவாக வெளிச்சம் கொடுப்பதில்லை. ஈசுவரனின் கருணையும் அங்ஙனமே'' என்று கூறித் தாழ்த்தப்பட்டோரது நெஞ்சங்களிலே ஒரு நம்பிக்கையைப் படர விட்டார்.

தாம் எதைச் சொல்ல வந்தபோதும் அதை எவரும் அறிந்து புரிந்துகொள்ளும் வண்ணம் மக்களுக்குப் பழக்கப்பட்ட (கன்னட) மொழியில், நடையில் வசனகவிதைகளாக இயற்றி இசையாகப்

பாடிவந்தார். மாணிக்கவாசகரது திருவெம்பாவைப் பாடல்கள் ''திருப்பெருந்துறையுறை சிவபெருமானே!'' என்ற விளியுடன் முடிவது போல், பஸவேசுவரரின் வசனகவிதைகளும் ''கூடல ஸங்கம தேவா!'' என்ற முத்திரையுடன் இயற்றப் பட்டன. மலப்ரபா நதியும் கிருஷ்ண நதியும் சங்கமிக்கும் 'கூடல சங்கம' திவ்ய க்ஷேத்திரத்தில் உறையும் 'சங்கமேசுவர ஸ்வாமி'யே இவரது இஷ்ட தெய்வம்.

சிவபெருமானை முன்னிட்டே தம் வீரசைவ இயக்கத்தைத் தோற்றுவித்த பஸவேசுவரர், சிவனின் பெருமையுணர்ந்து அவனிடம் ஒருமுனைப்பட்டுப் பக்தி புரியும் எவரும் தமது இயக்கத்தில் சேரலாம் என்று அழைப்பு விடுத்தார். இந்த இயக்கத்தில் சேர்ந்தவர்கள் வீரசைவர்கள் என்றும் லிங்காயத்துக்கள் என்றும் அழைக்கப்பெற்றனர். இவர்களுக்கு இடப்பட்ட சில நிபந்தனைகள் : நெற்றியில் திருநீறு பூசுதல், மது மாமிசம் புசியாமை, உண்மையே பேசுதல், பேராசை ஒழித்தல் முதலியன. உழைப்பின் பெருமையை நன்கு உணர்ந்திருந்த பஸவண்ண தமது இயக்கத்தைப் பின்பற்றும் எவரும் உழைக்காமல் உண்ணக் கூடாது என்பதில் கண்டிப்புடன் இருந்தார். அதே போல் பிச்சை எடுத்துப் புசிப்போரையும் கண்டித்தார்.

வழிபாட்டு முறையைப் பொறுத்த வரையில் வீரசைவர்கள் தங்களது இஷ்ட லிங்கத்தைத் துணியில் சுற்றியோ அல்லது பேழையிலிட்டோ ஒரு கயிற்றில் கட்டித் தங்களுடைய கழுத்தில் மார்பில் பதியுமாறு அணிந்துகொள்ள வேண்டும். பசுவாகிற மனம் பதியாகிற சிவபெருமானின் பராமரிப்பில் இருக்க வேண்டும் என்ற ஆவல் இருக்க வேண்டும். இந்த இஷ்ட லிங்கத்தையே தினசரி இருமுறை வெளியில் எடுத்து உள்ளங்கையில் வைத்து வழிபாடு செய்ய வேண்டும்.

வழிபாட்டு மனம் கொண்டிருந்தும் எல்லா விதத்திலும் இகழ்ந்து ஒதுக்கப்பட்டவர்களும், உழைத்து உண்பதிலே மகிழ்ச்சி அடைவோரும் பஸவேசுவரரைத் தம்மைக் காக்க வந்த புண்ணியராகக் கருதி ஆயிரக்கணக்கில் இவரது இயக்கத்தில் சேர்ந்தனர். பஸவண்ணவின் சமூக மதச் சீர்திருத்தக் கொள்கைகளினால் ஏழை எளியோரிடத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி பழமைவாதிகளிடையே அச்சத்தைத் தோற்றுவித்தது.

வேதியர் குலத்தில் உதித்துச் சாளுக்கிய அரசாங்கத்தில் பொக்கிஷக் காப்பாளராக உயர்பதவி வகித்த பஸவேசுவரருக்குச் சமயத் தொண்டில் இடர்கள் ஏற்படாமலில்லை. இவருடைய கொள்கைகளுடன் ஒத்துப்போக முடியாத சக அதிகாரிகள் அரசனிடத்தில் இவரைப்பற்றிக் கோள்மூட்டி வெறுப்பேற்றினர். ஆனால், ''தந்தை நீயே, தாயும் நீயே. பந்துக்களும் சுற்றமும் நீயே. நீரல்லாமல் பாலில்லை என்பது போல் நீயல்லாமல் நானில்லை. எனக்கும் உன்னை விட்டால் வேறு யாருமில்லை, கூடல ஸங்கம தேவா!'' என்று ஆண்டவனிடத்தில் முழுவதுமாகச் சரணடைந்த பஸவேசுவரர் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

ஒரு சமயம் ஒரு தாழ்த்தப்பட்டவரின் வீட்டுச் சிவ பஜனையில் கலந்துகொண்டதற்காக அரசன் இவரை அரண்மனையுள் அனுமதிக்காமல் வெளித் தாழ்வாரத்திலேயே நிறுத்தி விசாரணை நடத்தினன். அதேபோல் பிறப்பால் வேற்றுச் சாதியரான இருவர் பஸவண்ணவின் இயக்கத்தில் சேர்ந்து தம்மிடையே சாதியை ஒழிக்கத் தம் மக்களுக்குக் கலப்புத் திருமணம் செய்விக்க முனைந்தபொழுது அரசக் கட்டளைப்படி அவர்களின் கண்கள் பறிக்கப் பட்டன. அதோடு பஸவேசுவரரது பெரிய பதவிக்கும் ஆபத்து வந்தது. ''உன் படைப்புக்களுக்குச் சேவை செய்வதைவிட என் வயிற்றுப் பாடு எனக்குப் பெரிதல்ல, கூடல ஸங்கம தேவா!'' என்று ஆணையிட்டுத் தம்முடைய இயக்கத்தை மேலும் இவர் தீவிரப்படுத்தினர்.

இவ்விதம் உண்மையான பக்தி மார்க்கத்தைப் போதித்துக்கொண்டே சமூக மறுமலர்ச்சிக்கும் வழி செய்தவர் பஸவேசுவரர். இவர் தம்மை ஒரு சாதாரணத் தொண்டராகக் கருதி அப்படியே அழைக்கப்பெறுவதைத்தான் விரும்பினர். இதுவே இவரது பெருமைக்கும் காரணமாயிற்று. *

(378ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெறியைக் கடைப்பிடித்து ஒழுகி, அடைக்கலம் புகுதல் வேண்டும். இறைவன் அல்லாத பிறரிடம் பிரபத்தி செய்தல் ஆகாது என்கிற பொருள் நியமம் ஒன்று மட்டுமே பிரபத்தி நெறிக்கு உண்டு.

இத்துணைப் பெருஞ் சிறப்புடைய பிரபத்தி நெறியையே ஒரு தலைக்கீடாகக் கொண்டு, இறைவன் உயிர்களைக் காத்தருள்கிறன். ஆதலின், நம்மைக் காத்தருள வல்லவன் என்கிற திடமான நம்பிக்கை கொள்ளுதலே, நம் ஒவ்வொருவர்க்கும் தஞ்சமும், உய்யும் நெறியும் ஆகும்.

புதிய புத்தகங்கள்

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய கர்ணாமிர்தம்

[ஆசிரியர் : பிரம்மஸ்ரீ குருஸ்வாமி சாஸ்திரிகள், வெளியீட்டோர் : ஸ்ரீ அழகியகன்னி விநாயகர் கோவில் டிரஸ்ட், T. C. 35/867, சபாபதி கோவில் தெரு, தோவாளை P. O., திருவனந்தபுரம்-695 023. விலை : ரூ. 5]

மகாபாஷ்யம் கோபாலகிருஷ்ண சாஸ்திரிகள் என்பவர் இந்த நூலின் ஆசிரியராவர். முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு புதுக்கோட்டையில் ராஜ குருவாக விளங்கிய அவர், சதா சிவப்பிரம்மேந் திரரின் சமகாலத்தவராகவும் அவருடைய நன்மதிப்பைப் பெற்றவராகவும் திகழ்ந்தார்.

இந்த நூல் கிரந்த லிபியில் சென்னை சாஸ்திர ஸஞ்ஜீவினி அச்சுக்கூடத்தாரால் 1912-இல் வெளியிடப்பட்டது. 1964-இல் தேவநாகர லிபியில் மூலம் மாத்திரம் P. S. ராமசர்மா அவர்களால் ஸ்ரீரங்கத்தில் பிரசுரிக்கப்பட்டது. தமிழ் உரை யுடன் வெளிவருவது இதுவே முதல் தடவை (1978) ஆகும். வேதாந்த விற்பன்னராகிய பிரம்மஸ்ரீ குருஸ்வாமி சாஸ்திரிகள் 'குஹப்ரியை' என்ற அழகிய தமிழுரையை எழுதியிருக்கிறார். நூலின் சிறப்பும் பொருட்சிறப்பும், முருகன் வழிபாட்டு முறை ரகசியங்களும், மந்திரம், தந்திரம், ஆதார சக்கரங்களில் உபாஸனா முறை முதலியவையும் ஆங்காங்கு இந்த நூலில் எடுத்துக்காட்டப்பட்டிருக் கின்றன. முருக பக்தர்களுக்கு இது ஒரு நல்ல நூல் ஆகும்.

—பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

* * * *

அருள்பெற்ற நாயன்மார்கள்

[ஆசிரியர் : நாகர்கோவில் K. V. கிருஷ்ணன், வெளியீட்டோர் : நர்மதா பதிப்பகம், நல்ல நூல் வெளியீட்டாளர், பாண்டி பஜார், தியாகராயநகர், சென்னை-600 017. பக்கங்கள் 472. விலை : ரூ. 17]

சைவத் திருமுறைகளில் ஒன்றாகிய திருத் தொண்டர் புராணம் 'அருள்பெற்ற நாயன்மார்கள்' என்னும் தலைப்பில் திரு. நாகர்கோவில் கிருஷ்ணன் அவர்களின் கைவண்ணமாக மலர்ந்துள்ளது. மூலக் கருத்திலிருந்து பிறழாமலும் தமிழக ஆன்மிக மரபின் அடியொட்டியும் அமைந்துள்ள இந்நூல் நாயன்மார் களின் வரலாறுகளை முழுமையாகவும் விளக்க மாகவும் தருகிறது.

ஆசிரியர் தந்துள்ள பயனுள்ள அடிக்குறிப்புக் களும், நூலின் முகப்பையும் ஆங்காங்கே உள்ளேயும் அலங்கரிக்கும் சித்திரலேகாவின் ஓவியங்களும் நூலுக்கு அணி செய்கின்றன.


பெரிய புராணத்தின் மூலப் பாடல்களை எடுத் தாளாமலும் பரிபாஷைகளைக் கையாளாமலும் தற்கால மக்களுக்கேற்ற எளிய இனிய நடையில் இந் நூல் வெளிவந்துள்ளது.

இது போன்று எளிய நடையில் சமயக் கருத் துக்களை வழங்குவதுதான் இப்போதைய மக்க ளுக்குப் பயன்படுவதாக அமையும்.

எடுத்துக்கொண்ட பணியை எவரும் குறைகூற இயலாத வகையில் செம்மையாகவே செய்து சமயத்திற்கும் தமிழுக்கும் ஆசிரியர் தொண்டு புரிந் திருக்கிறார். தமிழக ஆஸ்திகப் பெருமக்கள் இந் நூலை வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

—பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

அன்பு நெஞ்சங்களுக்கு இம்மலர் காணிக்கை!



பாரத நாட்டுத் தத்துவ ஞானத்தைப் பாரெங்கும் பரப்பிய நவயுக நாயகரும், தெய்வத் தொண்டையும், மக்கள் தொண்டையும் இணைத்துப் புதிய சகாப்தத்திற்கு வித்திட்ட வீரத் துறவியுமான விவேகானந்த வள்ளலைப் பின்பற்றி வாழும், வாழ முயலும், அன்பு நெஞ்சங்கள் அத்தனைக்கும் இந்த ஆண்டு ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் சிறப்புமலர் பணிவன்போடு காணிக்கை யாகச் சமர்ப்பிக்கப்படுகிறது.

—ஆசிரியர்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை—600 004

1978 நவம்பர் மாத நிகழ்ச்சிகள்

சத்சங்கம் : ஞாயிறுதோறும் மாலை 4 மணி முதல் 6-30 மணி வரை

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம் (12-11-78 & 26-11-78)
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம் (5-11-78 & 19-11-78)

சொற்பொழிவு (தமிழ்)

1. **ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்**—திரு வி. எஸ். வி. குருசுவாமி சாஸ்திரிகள் (19-11-78)
2. **ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்**—திரு வி. ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் (5-11-78)
3. **ஸ்ரீ பூதத்தாழ்வார்**—டாக்டர் ஆர். பாலசுப்பிரமணியம் (12-11-78)
4. **இராமாயணம்**—டாக்டர் என். விழிநாதன் (26-11-78)

சொற்பொழிவு (ஆங்கிலம்)

1. **பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்**—சுவாமி தபஸ்யானந்தர் (5-11-78 & 12-11-78)
2. **ஸ்ரீமத் பகவத்கீதை**—சுவாமி கபீரானந்தர் (19-11-78 & 26-11-78)

வார நாட்களில் நடைபெறும் சொற்பொழிவுகள்—(மாலை 5-30 மணிக்கு)

திங்கள்	:	**பக்தியோகம்**—சுவாமி அமிர்தானந்தர்
செவ்வாய்	:	**அத்யாத்ம இராமாயணம்**—சுவாமி கபீரானந்தர்
புதன்	:	**கடோபநிஷதம்**—சுவாமி அமலாத்மானந்தர்
வியாழன்	:	**ஸ்ரீமத் பகவத்கீதை**—சுவாமி தன்மயானந்தர்
வெள்ளி	:	**ஸ்ரீ ராமகிருஷ்ணரின் போதனைகள்**—சுவாமி விபுதானந்தர்

சிறப்புச் சொற்பொழிவுகள் : சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு

1. **ஸ்ரீமத் பாகவதம்**—திரு. பி. இராமகிருஷ்ணன் (25-11-78)
2. **இராமாயணம்**—டாக்டர் என். வீழிநாதன் (18-11-78)

விசேஷ தினங்கள் :

26-11-78	ஞாயிறு :	அந்தர் யோகம் (சாதனை தினம்)
11-11-78	சனி :	ஸ்ரீமத் சுவாமி சுபோதானந்த ஜயந்தி
13-11-78	திங்கள் :	ஸ்ரீமத் சுவாமி விஞ்ஞானனந்த ஜயந்தி

10-11-78 & 26-11-78 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்கு பிறகு வழக்கம் போல் ஸ்ரீ ராம நாம சங்கீர்த்தனம் நடைபெறும்.

மடத்தைச் சேர்ந்த சாதுக்களால் சென்னை நகரத்தில் நடத்தப்பெறும் வேறு சில நிகழ்ச்சிகள்

4-11-78 சனி மாலை 7 மணிக்கு — **ஸ்ரீமத் பகவத்கீதை**—சுவாமி தன்மயானந்தர்
இடம் : அண்ணு நகர், விவேகானந்த வித்தியாலயம்.

11-11-78 சனி மாலை 6-30 மணிக்கு — **ஸ்ரீமத் பகவத்கீதை**—சுவாமி ராகவேசானந்தர்
இடம் : இல. 18, 19-வது சாஸ்திரி நகர்

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தொலைபேசி : 71231

தலைவர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள், பொன்மொழிகள், மகான்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும் கருத்தாழம் கொண்டதாகவும் எழுத்தோவியம் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு, எளிய தமிழ்நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெருத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

ஓர் அழைப்பு

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகைக்குத் தற்சமயம் 245 ஊர்களில் பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இப் பத்திரிகையின் மேல் ஈடுபாடு கொண்டுள்ள அன்பர்கள் அல்லது பத்திரிகை விற்பனையாளர்கள் ஏஜண்டுகள் நியமிக்கப்படாத ஊர்களுக்கு ஏஜன்சி எடுத்துப் பிரதிகளை விநியோகிக்க விரும்பினுல், அதற்குரிய விதிமுறைகளை எங்களுக்கு எழுதிப் பெறலாம்.

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்


டெபாசிட் முறை

ஆண்டுதோறும் ரூ. 8 சந்தா செலுத்திப் புதுப்பிப்பதற்குப் பதிலாக ரூபாய் நூறு டெபாசிட் செய்துவிட்டால், தொடர்ந்து மாதந்தோறும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை வந்துகொண்டிருக்கும். பத்திரிகை வேண்டாம் என்று (குறைந்தது ஐந்து வருடங்களுக்குப் பிறகு) கருதும்போது தாங்கள் டெபாசிட் செய்த முழுத் தொகையாகிய ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். டெபாசிட் முறை வெளிநாட்டுக்கு இல்லை.

நிர்வாகி

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

காந்தியடிகளின் பொன்மொழிகள்



★ மனிதனுக்குப் பயப்படுவதை நிறுத்த வேண்டும்; கடவுளின் சத்தியத்தை மட்டும் நாட வேண்டும். இவை இரண்டையும் செய்தால் நாம் அனைவரும் கடவுளின் தூதர்களாக மாற முடியும் என்று நான் நம்புகிறேன். ஆன்மிக வாழ்க்கையின் முதல் தேவை பயமின்மைதான்.

★ கடவுளிடம் ஓரளவு நம்பிக்கை இருந்தாலும் நாம் அவரைக் காண முடியும். அவருடைய அன்பு நம்மைச் சுற்றி எல்லா இடத்திலும் பரவி இருப்பதையும் காண முடியும்.

★ தெய்வ சித்தத்தை ஒவ்வொரு மனிதனும் அறிந்துகொள்ள முடியாது. தெய்வ சித்தத்தை அறிவதற்கு வேண்டிய சக்தியைப் பெற தகுந்த பயிற்சி தேவை.

★ சூதறியாத இளம் வாலிபர்கள் விலையற்ற பொக்கிஷங்கள். அந்த பொக்கிஷங்கள் க்ஷண நேரத்தில் தோன்றி மறையும் உணர்ச்சிகளுக்கும், சுகபோகம் என்று தவறாக அழைக்கப்படும் காரியங்களுக்கும் இரையாகித் தேய்ந்து போய்விடக் கூடாது.